1292

17 MAR 1939
MADRAS

ேத். குளோத்தெலா கொலம்பியர்

சேசுநாதருடைய

... திரு ...

இருதயத்தூதன்

ஜெப அப்போஸ்தல சபையின்

மாதாந்தர

தமிழ்ப் பத்திரிகை

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை:	ரூ.	1—4—0
பர்மா:	,,	1—8—0
வெளிநாடுகளுக்கு	,,	1-10—0

விலாசம்:—

சூப்பெரின்டெண்டெண்ட்,

தே நோபிலி பிரஸ்,

மதுரை.

முத்திப்பேறுபெற்ற

குளோத் தெலா கொலம்பியர்

ஜீவிய சரிதை

முத்திப்பேறுபெற்ற

குளோத் தெலா கொலம்பியர் ஜீவிய சரிதை

இது

சேசுசபைக் குருவானவரொருவரால்

இயற்றப்பட்டது.

DE NOBILI PRESS, MADURA,

1939.

CUM PERMISSU SUPERIORUM

Imprimatur:

A. AYRAUD, S.J.,

Vicar General, Madura Diocese.

Printed and Published by
Rev. Br. F. M. Ponnuswamy, S.J.,
Superintendent,
De Nobili Press, Madura.

1 7 MAR 1939
MADRAS

முன்னுரை

சத்திய திருச்சபையில் வழங்கும் நானு பக்திகளுக்குள் தலை சிறந்து விளங்கும் அதி உன்னத பக்தி சேசுவின் திரு இருதயப் பக்தியாமே. இப்பக்தி ஜனனமானது கல்வாரி மலைமீது. அது எங்ஙனமெனில் மன்னுயிரை மீட்கத் தன்னுயிரைப் பலியாக ஈந்த திவ்விய இரட்சகர் சிலுவையில் தொங்கும்போது லொஞ்சினஸ் என்பவன் நீண்ட ஈட்டியால் அவருடைய திரு விலாவைத் திறக்க, அங்கிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட, மனுமக்களை அணைகடந்த விதமாய் சிநேகித்த அவருடைய மாங்கிஷமான இருதயம் காணப்பட்ட நேரம் இப்பக்தி உதித்த நேரம் என்க.

அந்நாள்தொட்டு திரு இருதயப் பக்தியை அநுசரித்து வந்தவர்கள் அனந்தம்பேர். ஆயினும் அகிலமெங்கும் இப்பக்தி பரவி அபரிமிதமான நன்மை பயக்குவதற்குக் காரணமாயிருந்தவள் மினவுதல் சபையைச் சேர்ந்த கன்னிகா இரத்னம் அர்ச். மர்கரீத் மரி அலக்கோக் அம்மாள் என்பதை அறியாதவர் ஒருவருமில்லை.

இத்திரு இருதய அப்போஸ்தலருக்குப் பக்கத்துப் பலமாகவும், நல்லவழிகாட்டியாகவும் இருதய ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர் சேசுசபை முத்திப்பேறுபெற்ற குளோத் தேலா கோலம்பியர் என்னும் பரிசுத்த குருவானவரே. இவருடைய பேரும் கீர்த்தியும் என்றும் அழியாப்புகழுடன் திகழ்வதற்கு இந்த ஒரு முகாந்தரமே போதும்.

அர்ச். மார்கரீத் மரியம்மாள், நல்லாராலும் பொல்லாராலும், மடத்து சகோதரிகளாலும், சிரேஷ்டர்களாலும் நிந்தை அவமானப்பட்டு மனமடிந்து இருதயம் நைந்து தைரியமிழந்து அங்கலாய்த்துப் பரிதபித்துக்கொண்டிருக்கும் வேளை, திரு இருதயநாதர் அவளுக்குக் காட்சியளித்து: "மகளே! பயந்து கலங்காதே. நாம் நமது உத்தம ஊழியர்களில் ஒருவரை உனக்கு வழிகாட்டியாய் அனுப்புவோம். அவரிடம் ஆதியோடந்தமாய் எல்லாம் தெளிவுடன் எடுத்துரை" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அதுபோலவே, நமது திரு இருதயதாசனை அவள் முதன் முதல் கண்டு பேசினதும் சொல்வாள்: "இவரே சேசுவின் திரு இருதயம் எனக்கு வாக்களித்த உண்மை வழிகாட்டி. இவர் இதற்கு முன் என்னை அறியாதிருந்தும் ஏன்னிடம் நடந்தேறிய அதிசய சம்பவங்களையெல்லாம் முற்றிலும் அறிந்தவர்போல என்னிடம் சல்லாபித்தார்."

இவ்வாறு திரு இருதயநாதராலும் அவருடைய நேச அப்போஸ்தலராலும் புகழப்பெற்ற இருதயதாசனுடைய சரிதை இதுகாறும் தமிழில் இல்லாதது பெருங்குறையே. இக்குறையை நிவர்த்திக்குமாறு, வாலிப ஆக்கியோன் சேசுசபை சங். லாசர் மோத்தா ரோச் சுவாமிகள், அன்னிய பாஷைகளில் எழுதப்பட்ட பற்பல புஸ்தகங்களை வாசித்து அவைகளின் சாராம்சத்தைக் கிரகித்து, இன்பமான பாஷா ரசம் பொருந்திய நமது தாய் மொழியில் இச்சரிதையை எழுதித்தந்தது சாலவும் போற்றற்பாலது.

முன்னுரை

இதன்னியில் இச்சரித்திர நாயகரின் ஜீவிய சம்பவங்களைத் தெற்றெனெ விளக்கிக் காண்பித்து நேத்திரானந்தம் அளிக்கும் 17 அருமையான சித்திரப்படங்களை முதல்தரமான காகிதத்தில் அழகுற அச்சிட்டிருக்கிற விசேஷமானது இப்புத்தகத்தின் மதிப்பை பதின்மடங்கு அதிகரிக்கச் செய்கிறதென்பதற்குக் கிஞ்சித்தேனும் ஐயமில்லை.

இச்சரிதையில் எங்கணும் செறிந்து நிரம்பி ததும்பி வழிந்தோடும் திரு இருதயப்பக்தி இரசமானது, வாசிப்போர்கள் எவராயிருந்தாலும், அவர்களுடைய இருதயங்களைப் பூரிக்கச்செய்து ஏராளமான நன்மை விளைவிக்கும் என்பது எமது துணிபு.

இறுதியாய், நமது இனிய தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்ற எமது குருக்களும், கன்னியர்களும், கத்தோலிக்கு புருஷ பூவையரும் இவண் வெளியாகும் சரிதைகளைப்போல பல நூல்களை எழுதி, அச்சுப்பிரசார அப்போஸ்தல திருத்தொண்டாற்றி, சேசு இராஜனின் அரசாட்சி நமது செல்வநாட்டில் செழித்தோங்கவேண்டுமென்று வெகுவாய் விரும்பி ஆர்வமுடன் ஆசீர் அளிக்கும்,

✠ FRANCIS TIBURTIUS ROCHE, S.J.,

தூத்துக்குடி மேற்றிராணி ஆண்டவர்.

5—2—1939.



உத்தம கிறீஸ்துவக் குடும்பம்.

முத்திப்பேறுபெற்ற

குளோத் தெலா கொலம்பியர் ஜீவிய சரிதை

922

முதல் அதிகாரம்

இளமைப் பருவம்

"சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் பிரியப்பட்டவர்."

(சர்வப்பிர. 45 : 1)

சேசுவின் திரு இருதயப் பக்தியை யாவருக்கும் அறியப்பண்ணி ஸ்திரமுடன் ஸ்தாபிக்கும்படி திரு இருதய ஆண்டவர் இரு புண்ணிய சீலர்களைத் தெரிந்தெடுத்தார். அவர்கள் அர்ச். மார்கரீத்மரி அலக்கோக் என்ற மினவுதல் சபை (Visitation) கன்னியாஸ்திரியும், அவளுடைய ஆத்தும குருவான சேசுசபை முத். தெலா கொலம்பியருமாம். நமது திவ்விய ஆண்டவர் தமது திரு இருதயப் பக்தி இன்னதென்று அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்கு விளக்கிக்காண்பித்து அது விசுவாசிகள் மத்தியில் பரவவேண்டும் என்னும் தமது விருப்பத்தையும் அறிவிக்கலானார். இவ்வுன்னத வேலையை அனுகூலத்துடன் செய்து முடிக்க அவளுக்கு உதவியாக முத். தெலா கொலம்பியரைத் தெரிந்துகொடுக்கச் சித்தமானார்.

முத். குளோத் தெலா கொலம்பியரின் பெற்றோரான பெட்ரான் கொலம்பியரும், மார்கரீத் கொயின்டாட்

அம்மாளும் உயர்குல வம்ஸத்தினர். மார்கரீத் சீமாட்டியின் நற்குண நற்செயல்களைப் புகழாதார் எவருமில்லை என்பதற்கு இவளை யாவரும் "குணசீலி" என்று சிறப்புப்பெயரிட்டு அழைத்ததே போதிய சான்று. இவளிடம் அருளும், தயையும், பக்தியும், யுக்தியும், மனோவலிமையும் ஒருங்கே விளங்கின. சர்வேசுரன் இவர்களுக்கு அளித்த ஏழு மக்களுள் மூன்றாவது குளோத் தெலா கொலம்பியர். இருவர் குழந்தைப் பருவத்திலேயே சேசுபதம் சென்றனர். மூவர் குருக்களாயும், ஒரு மகள் கன்னியாஸ்திரியாகவும், மூத்த மகன் இல்லறவாசியாகவும் ஆண்டவரின் சித்தப்படி ஒவ்வொருவரும் தத்தம் அந்தஸ்தைத் தெரிந்து கொண்டனர்.

குளோத் பிறந்தது 1641-ம் வருஷம் பெப்ருவரி மாதம் 2-ம் தேதி தேவமாதா சுத்திகரத்திருநாளன்று. பிரசவக்கஷ்டத்தினால் குழந்தைக்கு ஏற்படவிருந்த ஆபத்தையுணர்ந்து உடனே அதற்கு அவஸ்தை ஞானஸ்நானம் கொடுத்தனர். ஆனால் தெய்வாதீனமாய்ப் பாலகன் நற்சுகமடையவே பிற்பாடு வெகு ஆடம்பரமாய்க் கோவிலில் திருச்சபை முறைப்படி ஞானஸ்நானச் சடங்குகளை நிறைவேற்றினர். பெட்ரான் கொலம்பியரின் ஆப்த நண்பரும், பிரபல்ய பிரபும் சேனாபதியுமான குளோத் என்பவரே குழந்தைக்கு ஞானத்தந்தையாயிருந்ததால் அவருடைய பெயரையே அதற்கு இட்டனர்.

தாய் தந்தையர் யாவரும் தங்களுக்குத் தேவகிருபையால் கொடுக்கப்பட்ட பிள்ளைகளைத் தேவ பக்தியிலும் நல்லொழுக்கத்திலும் வளர்க்கக் கடமைப்பட்டவர்கள். "தந்தை எப்படியோ தனயன் அப்படி" என்பதை நன்

குணர்ந்த பெட்ரான் பிரபு வேத முன்னேற்றத்திற்காக ஊக்கமாய் உழைப்பதிலும், பற்பல கோவில்கள் கட்டு விக்கத் தாராளமாய்ப் பண உதவிபுரிவதிலும், தனது மக்களுக்கு ஓர் மேல்வரிச் சட்டமாய் விளங்கினுர். புண்ணிய சீலியான மர்கரீத் தனது பிள்ளைகளுக்கு இளம்பருவத்திற்றுனே ஞான அமுது ஊட்டி அவர்களைத் தேவ ஞானத்திலும், தேவ சிநேகத்திலும் வெகு கவனமாய் வளர்த்து வந்தனள். ஆகவே அவள், தாய்மார்க்கெல்லாம் சிறந்த முன் மாதிரி என்றுலும், அர்ச். ஞானப்பிரகாசியார், அர்ச். பெர்னுர்து என்பவர்களின் அதியுத்தம அன்னையர்க்கும் நிகர் என்றுலும் மிகையாகாது. பின்னுேர் நாள் திரு இருதய அப்போஸ்தலர் என்று புகழ் கொண்டிலங்க வேண்டிய குளோத் தெலா கொலம்பியருக்கு உத்தம பெற்றேுர்களை நமது ஆண்டவர் தாமே தெரிந்துகொடுத்தார் என்கலாம்.

தெலா கொலம்பியரின் இளம்பிராயத்தில் நடந்த சம்பவங்கள் நமக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அவர் பால்யந்தொடங்கியே ஞானமும் யூகமும் யாவருடைய அன்பையும் எளிதில் கவர்ந்துகொள்ளக்கூடிய மனத்தூய்மையும், நேர்மையுமுள்ளவரெனத் தெரிகிறது.

இவ்வுத்தமரின் இளமைப்பருவம் எவ்விதம் மறைந்து கிடக்கின்றதோ அவ்விதமே அர்ச். மர்கரீத் மரியின் பாலியப் பிராயத்தில் நடந்தேறிய சம்பவங்களும் அநேகமாய் மறைந்து கிடைக்கின்றன. ஆகவே இவ்விரு திரு இருதய அப்போஸ்தலர்களின் இளமைப்பருவம் குழந்தை சேசுவின் மறைந்த சீவியத்திற்கு ஒத்ததாயிருந்தது என்க.

இரண்டாம் அதிகாரம்

தேவ அழைப்பு

"சர்வேசுரனுடைய இராச்சியத்தினிமித்தம் வீட்டை யாவது, பெற்றோரையாவது, சகோதரர்களையாவது, மனைவியையாவது, மக்களையாவது, விட்டுவிட்ட எவ னும், இம்மையில் மிகவும் அதிகமானவைகளையும், மறு மையில் நித்திய ஜீவனையும் அடையாமல்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

(அர்ச். லூக். 18 : 29-30)

தெலா கொலம்பியருக்கு ஒன்பது பிராயம் ஆனதும் புது நன்மை, உறுதிபூசுதல் தகுந்த மேரையாய் வாங்கும் படி அவரது பெற்றோர் அவருக்கு ஞானோபதேசம் வெகு சிரத்தையுடன் கற்றுத்தந்தனர். பின்னர் அவரை லயன்ஸ் பட்டணத்திலுள்ள சேசுசபை அர்ச். சகாயமாதா ஆரம்பப் பாடசாலைக்கு அனுப்பினர். அந்நகரவாசிகள் ஏறக்குறைய 1640-ம் வருஷம் தங்கள் ஊரை மோட்ச இராக்கினியின் அடைக்கலத்தில் ஒப்படைத்து அவள் மீது தங்களுக்கு இருந்த அன்பின் அறிகுறியாய் ஓர் அலங்காரமான தேவாலயத்தையும் கட்டுவித்தனர். தேவ தாயின் விசேஷ பாதுகாப்பில் பாலியரான தெலா கொலம் பியர் தேவஞானத்திலும் கல்வியிலும் வளர்ந்து வந்தார். அவர் புத்திநுட்பமுள்ளவராதலால் கற்பிக்கப்படும் நுண் ணிய விஷயங்களைத் தீவிரமாய்க் கிரகித்துக்கொள்வார்.

தேவாதீனமாய் இருபது வருஷங்களுக்குப் பின்னர் இதே இடத்திற்றுனே அர்ச். கார்மேல் மாதா திருநாள் அன்று தேவதாயைப்பற்றி அவர் நிகழ்த்திய பிரசங்கத்தில் பட்டணத்தைப் பார்த்து, "ஓ லயன்ஸ் பட்டணமே! நீ நிலவளம், நீர்வளம், பொருள் வளங்களில் செழிப்புற்று சிறந்து விளங்கியபோதிலும், இவைகளைவிட நீ பரலோக நாயகிக்கு உன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்து அவளுடைய விசேஷ பரிபாலனம் பெற்றதே உனது மேலான மகிமை. அவளிடமிருந்து நீ அடைந்த உன்னத உதவிகளுக்குக் கங்குகரையுண்டோ? போர் நிகழ்ந்த காலத்தில் உன் மக்களுள் பலர் எதிரியின் வாளுக்கு இரையாகாமலும், புரண்டுவந்த வெள்ளத்தில் அகப்பட்டு அழியாமலும், நெருப்பில் விழுந்து சாம்பலாய்ப் போகாமலும், இன்னும் இவை யாவற்றையும்விட, அவர்களுடைய ஆத்துமம் நித்திய நரக அக்கினிக்கு இரையாகாமலும் அவர்களை இரக்கத்துடன் காப்பாற்றியது கிருபை தயாபம் நிறைந்த அமலோற்பவநாயகி அல்லவா?" என்று கேட்போர் மனங்கனியப் பிரசங்கித்தார்.

ஏறக்குறைய பன்னிரண்டாம் பிராயத்தில் தெலா கொலம்பியர் ஆரம்பப் பாடசாலையைவிட்டு அர்ச். தமதிரித்துவக் கல்லூரிக்குச் சென்று இலக்கண இலக்கியம், தத்துவ சாஸ்திரம் முதலியவைகளை வெகு திறமையுடன் பயின்று வந்தார். அக்காலத்தில் அந்தக் கல்லூரி லயன்ஸ் மாநகர்க்கு ஓர் திலகம்போல் திகழ்ந்தது. பிரசித்திபெற்ற பிரபுக்கள் அப்பட்டணத்திற்கு வர நேரிட்டால் அதைத் தரிசிக்கத் தவறுவதில்லை. பின்காலத்தில் சேசுசபை நவசந்நியாசிகளை மேற்பார்ப்பதற்கு நியமகம்பெற்ற சங்.

ஜான் பாப்போன் சுவாமியார்தான் அச்சமயம் கலாசாலைத் தலைமை ஆசிரியராகவிருந்தார். இவரோடு தெலா கொலம்பியர் நெருங்கிப் பழகி அதிக சிநேகமானார். கொலம்பியரின் புத்தித் தீட்சணியத்தையும், நற்குண நற்செய்கைகளையும் கண்டுணர்ந்த எவரும் அவரைச் சிநேகிப்பது ஆச்சரியமன்று.

விடுமுறை நாட்களில் அவர் வீடு திரும்பியதும் அவர் பெற்றோர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அவர்களோடு விடுமுறை காலமுழுவதுமிருந்தும் அத்தனை நாட்களும், வாரங்களும் வெகுசீக்கிரம் பறந்துபோனது போல் அவர்களுக்குத் தோன்றியதாம். ஆனால் அவர் படிப்பை முற்றிலும் முடித்த பின்னராகிலும் தங்களை விட்டுப் பிரியாமலிருந்து தங்களை மகிழ்விப்பார் என்று எதிர்பார்த்திருந்தனர்.

அவருக்குப் பதினெட்டு பிராயமாகும்போது கடைசியாக கலாசாலையைவிட்டு வீடு வந்து சேர்ந்தார். தமது ஜீவிய அந்தஸ்தைப்பற்றி ஏற்கனவே தனக்குள் தீர்மானித்துக்கொண்டார். இவ்வுலக இன்பசுகங்கள் நிலையற்றது என்றும், புகைபோல் மாறி மறையக்கூடியதென்றும், எப்போதும் நீடித்திருக்கும் நித்திய பேரின்ப செல்வ பாக்கியத்தையே தான் அடையவேண்டும் என்றும் நன்றாயுணர்ந்து உலகத்தை வெறுத்து சன்னியாச ஜீவியத்தைத் தெரிந்துகொள்ளத் தீர்மானித்திருந்தார்.

பெற்றோர் தங்கள் செல்வப் புத்திரனின் தேவ அழைத்தல் உண்மையுள்ளதாயும், உறுதியுள்ளதாயுமிருப்பதாக அறிந்ததும், சர்வேசுரனுக்குத் தோத்திரம் புரிந்து,

அவரால் தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அருமை மைந் தனை அவருக்கே தாராள மனதுடன் சந்தோஷமாய் ஒப் புக்கொடுத்தனர். ஆ! எவ்வளவு சிறந்த முன்மாதிரி! நம் இந்திய தாய் தந்தையரும் தங்கள் மகனையோ, மகளை யோ சர்வேசுரன் மேலான அந்தஸ்திற்கு அழைக்கும் போது யாதொரு தடங்கல் செய்யாது உதாரகுணத் தோடும், நன்றியறிந்த மனதோடும் திரு இருதயத்திற்குப் பலியாக ஒப்புக்கொடுக்க முன்வருவார்களாக!

அர்ச். ஞானப்பிரகாசியாரும், அர்ச். ஸ்தனிஸ்லாஸூம், அர்ச். குழந்தை திரேஸ் அம்மாளும் சர்வேசுரனுக்கு ஊழியம் செய்யும்படி தங்களை முழுவதும் ஒப்புக்கொடுக்க ஓர் வகை உன்னத தேவ நேசத்தினல் அற்புதமாய் இழுக்கப்பட்டனர். இவ்விதமான விசேஷப் பற்றுதல் தெலா கொலம்பியர் மனதில் உதிக்கவில்லை. அதற்குப் பதிலாய்த் துறவற அந்தஸ்தின் மட்டில் ஓர்வித வெறுப் பும் பயமும் ஏற்பட்டிருந்தது. அவருடைய அங்கலாய்ப் பையறிந்த நரக அலகை எப்படியாயினும் அவருடைய உயரிய எண்ணத்தைக் கெடுக்க முயன்றது. "என்ன! நீயாவது சேசுசபையில் சேருவதாவது! அது எப்படியா கும்? உன்னிடம் சன்னியாச ஜீவியத்துக்கு வேண்டிய தேகசௌக்கியமும் தைரியமுமில்லையே! அங்கே பொன் போன்ற உனது மெல்லிய உடம்பை உன்னுடைய நேசப் பெற்ருரைப்போல் கவனித்துப் பேணுபவர் எவருமில்லை. உனது வீட்டிலுள்ள சுக சந்தோஷங்கள் அங்கிராது. உனது எண்ணம் வீண்! வெறும் கனவே!" என்று பலவா ருய் அவரைத் தன்னுடைய மாயவலையில் சிக்கும்படி செய்ய வெகுவாய் முயன்றது. ஆனல் இவ்வுத்தம வாலிபர்

அர்ச். இஞ்ஞாசியாரின் ஞானத்தியானம் செய்த பின்னர், தன்னை மெய்யாகவே சர்வேசுரன் சேசுசபைக்கு அழைக்கிறார் என்று நன்குணர்ந்து, தனக்கு ஏற்பட்ட வெறுப்பையும், பசாசின் சோதனை தந்திரங்களையும் ஜெயிக்கும்படி சேசுநாதரையும், தேவதாயையும் பார்த்து இடைவிடாது வெகு உருக்கத்துடன் மன்றாடி வந்தார்.

கடைசியாய் ஜெபமே ஜெயம்பெற்றது. அவர் தமது உற்றார் உறவினரை விட்டுப் பிரியுங்கால் மனித சுபாவத்திற்குரிய நேசபாசத்தால் மனங்கலங்கி அழுதிருக்கலாம். ஆனால் விசுவாசக் கண்களால் பிரகாசம் பெற்று, சேசுநாதர் உரைத்த ஆப்த மொழிகளை ஊன்றி யோசித்தார்.

> "சர்வேசுரனுடைய இராச்சியத்தினிமித்தம் வீட்டையாவது, பெற்றோரையாவது, சகோதரர்களையாவது.........விட்டுவிட்ட எவனும் இம்மையில் மிகவும் அதிகமானவைகளையும், மறுமையில் நித்திய ஜீவனையும் அடையாமல் போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (அர்ச். லூக். 18 : 30)

ஆகவே 1658-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25-ம் தேதி தமக்குப் பதினெட்டு வயது நடக்கும்போது சேசுசபையில் உட்பட்டார். சில வருஷங்களுக்குப் பின்னர், கன்னியாஸ்திரியான தமது சகோதரிக்கு அவர் எழுதின கடிதத்தில், "நாம் துறவற அந்தஸ்தில் சேரும்படி பற்பல கஷ்டங்களும், இடையூறுகளும் அனுபவித்துவிட்டுப் பிற்பாடு தேவ ஊழியத்தில் அசமந்தமாயிருக்கலாமா?" என்று கேட்கிறார்.

1658-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25-ம் தேதி
முத். தெலா கொலம்பியர் தமது பதினெட்டாம் பிராயத்தில்
சேசுசபையில் உட்பட்டார்.



மரணப் படுக்கையிலிருந்த தாயார் தன் செல்வ மகனைக்
கண்டதும் வெகுவாய் ஆறுதலடைந்தனள்.

மூன்றும் அதிகாரம்

குருத்துவ மாணவர்

"ஆண்டவரே! உமது முறையைக் கண்டு நடப்பதே
என் பங்கு என்று சொன்னேன்." (தாவீ.சங். 118: 57)

"பாப்புமார் பட்டணம்" என்று சிறப்புப் பெயர் பூண்டு விளங்கிய அவிஞ்ஞோ நகரில் 17-ம் நூற்றுண்டில் சேசுசபை நவசந்நியாச மடம் ஒன்று இருந்தது. இங்கு தான் வாலிபரான குளோத் தெலா கொலம்பியர் வந்து சேர்ந்தார். அவர் தெரிந்துகொண்ட மேலான அந்தஸ்தைப் பற்றி அவர் மனதிலெழுந்த சிந்தனைகள் பின்வருமாறு: "நான் ஒன்றுக்கும் உதவாதவனுயிருந்தபோதிலும் ஆண்டவர் என்னைக் கைவிடவில்லை. என்னைக் கைதூக்கி இரட்சித்து எனக்குவேண்டிய உதவி புரிந்தார். எனது கடைசிக் கதியை என் கண்முன்பாக வைத்து மதுர சேசு தமது ஊழியத்தில் என்னை நிலைநிற்கச் செய்தார். சகல பற்றுதல்களையும் விட்டுவிடச்செய்து நம்மை உத்தம துறவிகளாக்குவது கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதல் என்ற மூன்று வார்த்தைப்பாடுகளே. சந்நியாச சபையின் கட்டுப்பாடுகள்மீது பற்றுதலுள்ளவனே உத்தம புண்ணிய சாங்கோபாங்கமடைவான். நமது வார்த்தைப்பாடுகளில் பிரமாணிக்கமாய் நிலைநிற்க இதுவே தகுந்த உபாயம்." இவ்விதமாய் அவர் வெகு தாராள சிந்தையுடனும் வீரியமுள்ள மனதுடனும் நவசந்நியாசம் ஆரம்பித்தார்.

அவரிருந்த மடம் வெகு விசாலமாயும் அழகாயும் அமையப்பெற்றது. சுற்றிலும் சிங்காரத்தோட்டமும், இடையிடையே ஒழுங்காகச் சித்தம்பண்ணப்பட்ட பாதைகளுமுண்டு. மடத்துக்கோவில் உள்ளும் புறமும் நேர்த்தியான சித்திர வேலைப்பாடுகளால் சிறந்து விளங்கியது. 1658-ம் ஆண்டு அம்மடத்தில் 49 நவசந்நியாசிகள் சங். ஜான் பாப்போன் என்பவரின் கண்காணிப்பின் கீழிருந்தனர். இவர் ஓர் உத்தம துறவி; மற்றவர்களைப் புண்ணிய சாங்கோபாங்க மார்க்கத்தில் நடத்திச்செல்ல திறைமை பூண்டவர்; பிறர் இருதயத்தைத் தம் வசப்படுத்தும் விசேஷ ஆற்றலுள்ளவர்; அவர்களது உண்மைக்கருத்தை ஊகித்தறியும் உன்னத வரம் அவருக்கிருந்தது. நமது நல்ல ஆண்டவர் தமது திரு இருதய அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளச் சித்தமான தெலா கொலம்பியருக்கு அவர் தாமே இத்தகையச் சிறந்ததோர் ஆத்தும குருவை அருளச் சித்தமானார். சங். ஜான் பாப்போன் சுவாமியாரும் புதிதாய் வந்து சேர்ந்த நவசந்நியாசி தேவ ஊழியத்தில் மெய்யான ஊக்கமுள்ளவர் என்றும், அர்ச். இஞ்ஞாசியாருக்கு உகந்த மைந்தனாக நடக்க அவாவுள்ளவரென்றும் எளிதில் அறிந்துகொண்டார்.

பாவத்தால் பலவீனப்பட்டிருக்கும் மனித சுபாவம் உத்தம சாங்கோபாங்க நெறியில் விடாமுயற்சியுடன் நடப்பதற்குச் சற்றே தத்தளிக்கும் என்பதை சங். தெலா கொலம்பியரும் நன்குணர்ந்திருந்தார். அவர் கூறிய வார்த்தைகளே இதற்குத்தகுந்த சான்று. "புண்ணிய முயற்சிகள் எனக்கு அருவருப்பாயிருக்கின்றன. ஓர் சமயம் சந்தோஷமும் மற்றோர் வேளை சலிப்பும் ஏற்படுகிறது. ஒரு

நாள் யாவரோடும் அன்போடு புழங்குகிறேன், மறுநாளோ முள்நிறைந்த வேலிபோல் எவரும் என்னையணுகவிடுவ தில்லை. நான் சரீர சுகத்தின்மேல் அதிக நாட்டமுடைய வனுகவும், வீண் பெருமையுள்ளவனுயுமிருக்கிறேன்" என்று பிற்காலத்தில் வெளியிட்டிருக்கிருர். ஆனல்,

"பரலோக இராச்சியம் பலவந்தப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்களே அதைப் பறித்துக்கொள்ளுகிருர்கள்" (அர்ச். மத். 11 : 12)

என்பதால் அவர் ஞானயுத்தம் தளராது புரிந்தார். ஞானப் போரில் வெற்றிபெற வேண்டுமாயின் சபை ஒழுங்குகளைச் சுமுத்திரையாக அனுசரிப்பது அவசியமெனக் கண்டுணர்ந் தார். இதனுல் அவர் பிரமாணிக்கத்தின் முன்மாதிரியாய் விளங்கிய அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரைக் கண்டுபா விக்க முயன்ருர். அவர் நவசந்நியாச மடத்தைவிட்டுப் போகும்போது, அவரைப்பற்றிச் சுருக்கமாய் சங். பாப் போன் சுவாமியவர்கள் கூறியிருப்பதை இங்குக் குறிப்பிடு வோம்: "சங். தெலா கொலம்பியர் தனது வயதிற்கு மிஞ் சிய யூகமுடையவர்; பல காரியங்களைப்பற்றி நிதானமாய்த் தீர்மானிக்கும் திறமையுள்ளவர்; மேலானபக்தியும் உயர் ந்த புண்ணியங்களும் உடையவர்." ஆகவே சிரேஷ்டர் சுவாமியவர்கள் தெலா கொலம்பியரை ஓர் விலைமதிக்கப் படாத மாணிக்கம்போல் கருதினர் என்ருல் மிகையாகாது.

இரண்டு வருஷ நவசந்நியாசம் முடிவுற்ற பின்னர் 1660-ம் ௵ அக்டோபர்-௴ 26-ம் உ பதினெருவருடன் சேசுசபை முதல் வார்த்தைப்பாடு கொடுத்தார். கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதல் என்ற மூன்று வார்த்தைப்பாடு களும், மனிதரைப் பசப்பிக்கெடுக்கும் மூவாசைகளை

அறுத்தெறிந்து மதுர சேசுவின் இணைபிரியாத அன்பை யடைய ஏற்ற சாதனங்களாம்.

சேசுவின் திரு இருதய அப்போஸ்தலராகப் பிற் காலத்தில் விளங்கவிருக்கும் சங். கொலம்பியர் தாம் சென்றவிடமெல்லாம் புண்ணிய சாங்கோபாங்கம் அடைய ஆவலுடன் உழைத்தார். நவசந்நியாசம் முடிவடைந்த வுடன் தத்துவசாஸ்திரம் படிக்க ஆரம்பித்தார். அத்தரு ணம் யாவராலும் அர்ச்சியசிஷ்டவர் என்று புகழப்பட்ட ஓர் வயோதிக குருவானவரைத் தெலா கொலம்பியர் சந்திக்க நேரிட்டது. இவ்வுத்தம முனிவரே முதன் முதல் நமது சின்ன சுவாமியாரின் இருதயத்தில் திவ்விய நற்கருணையில் சிநேக பலியாய் வீற்றிருக்கும் திரு இருதய ஆண்டவர் மட்டில் உருக்கம் நிறைந்த பக்தியை மூட்டிவிட்டவர். அவர் புகட்டிய பல அரிய புத்திமதிகளில் ஒரு விஷயம் குளோத் சுவாமியார் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந் திருந்தது. "நாம் நமது இரத்தத்தைச் சிந்தி வேதசாட்சி முடிபெறக்கூடாவிடினும், தேவ சிநேக வாளாலென்கிலும் ஊடுருவப்பட்டு அதின் அகோர வேதனையைத் தாளாமல் உயிரையே பலியிடும் மேலான பாக்கியத்தை யடையப் பிரயாசைப்படுவோமாக!" என்று அம்மாகான் அடிக்கடிப் போதிப்பதுண்டு. விருத்தாப்பியரான இந்த சற்குரு தமக்கு அந்தியகாலம் நெருங்கிவிட்டதென்று ணர்ந்து கடைசித் தேவதிரவிய அநுமானங்களை வெகு பக்தி விசுவாசத்துடன் பெறலானார். அவர் அத்தருணம் அடைந்த பேரானந்தத்தையடக்க இயலாது, சூழ நின்ற குருக்களையும் சின்ன சுவாமிமார்களையும் நோக்கி: "'தே தேயும்' என்ற தேவ தோத்திரக் கீர்த்தனை பாடு

வீர்களாக..............ஆ! சேசுசபையில் மரிப்பது எவ்வளவு மதுரமாயிருக்கிறது! இரக்கம் நிறைந்த நமது ஆண்டவர் எனக்கு அருளிய சகல வரங்களுக்கெல்லாம் மேலானது சேசுசபையில் நான் மரிப்பதே" என்று சொல்லி முடித்ததும் அவரது தூய ஆத்துமா பரலோகம் சென்றது.

> "பரிசுத்தவான்களுடைய மரணம் ஆண்டவர் சமுகத்தில் மகா உச்சிதமானது." (தாவீ. சங். 115 : 6)

இப்பாக்கியமான மரணத்தைக் கண்ணுற்ற சங். தெலா கொலம்பியர் சேசுசபையில் ஆண்டவருக்குகந்த துறவியாய் வாழ்வதே அந்தியகாலத்தில் மன ஆறுதலையளிக்கும் என்று தீர உணர்ந்தார்.

மரித்த குருவானவரின் அறையைவிட்டு வெளியே வந்ததும் சங். சிரேஷ்டர் சுவாமியார் நமது சின்னசுவாமியாரைச் சற்று அப்பால் அழைத்து, "உமக்கு மிகவும் துக்ககரமான செய்தி வந்திருக்கிறது. உமது அருமைத் தாயார் கடின வியாதியாயிருக்கிறார்கள்; உம்மைப் பார்க்க அதிக ஆவலாயிருக்கிறார்கள். ஆகையால் நீர் உடனே புறப்பட்டுப் போகலாம்" என்று கூறினார். தாமதமின்றி அவர் தமது சொந்த ஊருக்குப் பிரயாணமானார். அவ்விடம் போய்ச் சேர்ந்ததும் மரணப்படுக்கையிலிருந்த தாயார் தன் செல்வமகனைக் கண்டு வெகுவாய் ஆறுதலடைந்தனள். பிறகு அவரை உற்றுநோக்கி, "அன்பான மகனே, நீர் ஓர் நாள் பெரிய அர்ச்சியசிஷ்டவராவீர்" என்று பகர்ந்தனள். சில தினங்கள் சென்று 1661-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 3-ம் தேதி துன்பம் நிறைந்த இம்

மண்ணுலகைவிட்டு தேவானந்தம் பொங்கும் விண்ணுல கையடைந்தனள். இவையாவும் சங். தெலா கொலம்பியர் மனதில் ஆழமாய்ப் பதிந்து, உலகவாழ்வு நிலையற்றது என் றும், மோட்ச பேரின்பத்தை நாடுவதே உண்மை ஞானம் என்றும் மென்மேலும் கண்டுணர்ந்தார்.

தத்துவ சாஸ்திரம் முடிந்த பின்னர் யாதோர் கலா சாலைக்குப் போய் பிள்ளைகளுக்குப் படித்துக்கொடுக்கவும் அவர்களை மேற்பார்க்கவும் குருத்துவமாணவரை அனுப்பு வது சேசுசபை ஒழுங்கு. அப்படியே நமது சின்ன சுவாமியாரும் அவிஞ்ஞோன் பட்டணத்தின் பெயர் பெற்ற கலாசாலையில் ஓர் ஆசிரியராக நியமகம் பெற்ருர். ஆரம்பத் தில் கீழ்வகுப்புப் பிள்ளைகளுக்கும் நாட் செல்லச்செல்ல உயர்ந்த வகுப்பு மாணவர்களுக்கும் படித்துக்கொடுத்து வந்தார். மாணுக்கரும் ஆசானும் ஒருவரை ஒருவர் நன் ருயறிந்து வெகு உற்சாகமுடன் ஒத்துழைத்தனர். இவ் விடத்தில் திரு இருதயத்தாசன் பிறருடைய குணபேதங் களை ஆராய்ந்து அறிய நல்ல சந்தர்ப்பங்கள் பெற்ருர். பிற்காலத்தில் சிறந்த ஆத்தும குருவாகத் துலங்கவேண் டியவரைத் திரு இருதய ஆண்டவர் இப்போதே அவ் வுயர்ந்த அலுவலுக்குத் தயாரித்து வந்தார் என்கலாம்.

அக்கல்லூரிக்குச் சிரேஷ்ட குருவாயிருந்தவர் சங். கில்பர்ட் அத்தியான் சுவாமியார். இவர் மகா புண்ணிய வான். கீழ்ப்படிதலால் தனக்குக் கொடுக்கப்பட்ட எந்த அலுவலையும், அது எவ்வளவுதான் தாழ்மையுள்ளதாயிருந் தாலும், மனமகிழ்வுடன் ஆண்டவரின் அதிமிகத் தோத்தி ரத்திற்காக செய்துமுடிப்பேன் என்றதோர் விசேஷ வார்த் தைப்பாடு கொடுத்திருந்தார். இப்பேர்க்கொத்த புண்

ணிய சிலர்களிடமிருந்து சங். தெலா கொலம்பியர் தேனை ஆவலுடன் பருகும் வண்டுபோல் அநேக நற்போதனை களை வெகு அவாவுடன் கற்றறிந்தார். விசேஷமாய்ப் பதித ருடைய தப்பறைகளை மறுத்துரைக்கவும், சர்வேசுரனது இராச்சியம் எங்கும் பரவும்படி கையாளவேண்டிய ஏற்ற சாதனங்கள் எவை என்பதையும் நன்ருய்க் கண்டறிந் தார்.

மகா கீர்த்திபெற்ற பிரான்சிஸ்கு சலேசியாருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளப்பட்ட மகோற்சவம் அவிஞ் ஞோன் நகரில் 1666-ம் ஆு மே மாதக்கடைசியில் வெகு ஆடம்பரமாயும், பக்திப் பற்றுதலுடனும் கொண்டாடப் பட்டது. இத்தருணம் புது அர்ச்சியசிஷ்டவர்பேரில் சொற்பொழிவுகள் நிகழ்த்திய பேர்பெற்றப் பல பிரசங்கி களுள் தெலா கொலம்பியரும் ஒருவர். "பலவானிட மிருந்து மதுரம் உற்பத்தியாயிற்று" (நியா. ஆக. 14 : 14) என்பதை மேற்கோளாகக்கொண்டு அர்ச்சியசிஷ்டவரின் அரிய பெரிய புண்ணியங்களைப்பற்றி இனியதோர் பிரசங் கம் இயற்றினர். அவரிடம் அந்நாள் முதல் அர்ச். பிரான் சிஸ்கு சலேசியார்மீது பக்தி அதிகரித்துக்கொண்டே வந் தது. அர்ச். மார்கரீத் மரியம்மாள் கன்னியாஸ்திரியாயிருந்த மினவுதல் சபையின் முக்கிய ஸ்தாபகர் அர்ச். பிரான்சிஸ்கு சலேசியார். எனினும் இவ்வுத்தமரின் ஞானப்புத்திரி அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்கு தாம் ஆத்தும குருவாக நியமகம் பெற்று, அப்புண்ணியவதியுடன் திரு இருதயப் பக்தியை நிலைநாட்ட அயராவுழைக்கத் தாம் தெரிந்துகொள் ளப்பட்டதாக அத்தருணம் அவர் கனவிலும் கருதவில்லை. அவரது எண்ணமும் கருத்தும் தேவ ஊழியத்தில் உற்சாக

முடன் உழைக்கவேண்டுமென்பதாதலின், தாவீது இராஜா வுடன் இவரும் :

> "ஆண்டவரே! உமது முறைமையைக் கண்டு நடப்பதே என் பங்கு என்று சொன்னேன்." (தாவீ. சங். 118 : 57)

என்று கூறியதாகக் கொள்ளலாம். தாம் எழுதிவைத் திருந்த குறிப்புகளில், "பிரசங்கங்கள் செய்ய எனக்கு நல்ல சந்தர்ப்பங்கள் ஆண்டவர் தருவது எவ்வளவோ மகி மை! ஆயினும் அவர் தாழ்மை நிறைந்த அலுவல்களை எனக்கு இட்டாலும் அதினால் என்ன குறை? என்ன அபகீர்த்தி?" என்று பதிவு செய்தனர். 1666-ஆண்டு ஆகஸ்டு மாதம் வேதசாஸ்திரம் பயிலும்படி பாரீஸ்மா நகருக்கு அனுப்பப்பட்டார்.



1669-ம் வருஷம் எப்பிரல் மாதம் 6-ம் தேதி
முத். தெலா கொலம்பியர் குருப்பட்டாபிஷேகம் பெற்றார்.



சீர்பெற்றிலங்கிய கொல்போர்ட் மந்திரி வெகுநாள்வரை நமது பாலியக்குருவை வெகு அன்போடு போற்றிவந்தார்.

நான்காம் அதிகாரம்

குருப்பட்டம்

"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்." (அர்ச். அருள. 15 : 16)

ஆகாயத்தில் நள்ளிரவில் தோன்றும் அழகிய நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் விசேஷ ஒளிகொண்டு திகழ்கின்றது. அதுபோல தேவ அழைப்பும் பலவித சிறப்புகள் பூண்டு விளங்குகின்றது. சிலர் கடுந்தவம்புரியும் சந்நியாச சபைகளிலும், வேறு சிலர் தேவாராதனையே முக்கிய நோக்கமாகக்கொண்ட சபைகளிலும், இன்னும் சிலர் ஏழைகளையும், வயோதிகரையும் போஷிப்பதிலேயே தங்கள் வாழ்நாட்களைச் செலவழிக்கும் சபைகளிலும், பலர் பலவிதமான சபைகளிலுட்பட்டு தேவ ஏவுதலுக்கு ஒத்த வண்ணம் நடந்து புண்ணிய ஜீவியம் ஜீவிக்கின்றனர். சர்வேசுரனது சித்தப்பிரகாரம் தெரிந்துகொண்ட அந்தஸ்தில் நிலைகொள்ளவேண்டிய தைரியமும், ஞானவெளிச்சமும், வரப்பிரசாதமும் ஆண்டவர் நமக்கு அளிப்பது நிச்சயம். ஏனெனில்,

"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்" (அர்ச். அருள. 15 : 16)

என்று திருவாய் மலர்ந்தருளிய திவ்விய சேசுவின் வார்த்தையில் நாம் ஊன்றி நிற்பது கடமை. இவ்வுன்னத மொழிகளின் சிறந்த கருத்தை நன்குணர்ந்த சங். குளோத்

சேசுசபையில் நீண்டகாலம் குருப்பட்டத்திற்குப் படிக்க வேண்டும் என்று சிறிதும் சலிப்படையவில்லை. ஏனென்றால் தேவ ஏவுதலுக்கு இசைந்தே அவர் சேசுசபையில் பிரவேசித்தார்.

அவர் தேவசாஸ்திரம் பயிலும்படி பாரீஸ்மாநகருக்கு 1666-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் வந்துசேர்ந்தார். பிற்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களைக் கவனிப்பின் இவர் அங்கு சென்றது விசேஷ தேவ திருவுளம் என்று நன்கு விளங்குகிறது. ஏனெனில் பின்னோர் நாள் இராஜ குடும்பங்களோடு பழகவேண்டியிருந்த திரு இருதயத்தாசன், வேத சாஸ்திரம் பயின்றுவருவதோடுகூட, பிரான்ஸ் தேசத்திற் புகழ்பெற்றிலங்கிய கொல்பேர்ட் மந்திரியின் இரு மைந்தருக்கும் ஆசிரியராகவும் இருக்க நேர்ந்தது. ஆனதுபற்றிப் பற்பல கனதனவான்களைச் சந்தித்து அவர்களோடு நெருங்கி உறவாடவேண்டியது அவசியமாயிற்று. இது இருவகையில் அவருக்கு நன்மை விளைவித்தது. அவர் உலக மகிமை, பெருமை, மாய்கையிலுட்படாமல் தம்மைப் பாதுகாப்பதற்கும், மேன்பாடான வழக்கங்களைக் கைப்பற்றுவதற்கும் மிகவும் உதவியாயிருந்தது.

மேலும் அவர் கல்வி பயின்றுவந்த குரு மடத்தில் வேத சாஸ்திரத்தில் திறமைபூண்ட ஆசிரியர்களின் கீழ் அயராவுழைத்து அதில் அதிக உயர்வுற்று விளங்கினார். வருஷா வருஷம் நடந்த கடின பரீட்சைகளில் யாவரும் புகழத்தக்கவிதமாய் மிகத் தேர்ச்சிபெற்றார். சில ஆண்டுகளுக்குப்பின் ஒரு பாலிய குருத்துவ மாணவர் அவரை நோக்கி, "வேத சாஸ்திரம் ஐயந்திரிபறக் கற்றுக்கொள்வதற்குத் தகுந்த வழி எது" என வினவ, அதற்கு அவர்:

"அதிகம் வாசிப்பதைவிட அதிகம் சிந்திப்பதுதான் நல்ல பலன் அளிக்கும். வேத சாஸ்திரத்தின் ஆழ்ந்த விஷயங்களைத் தெளிவுற அறியவேண்டுமாயின் அவைகளைப்பற்றி ஊன்றி யோசிப்பது அவசரம்" என்று பதிலுரைத்தார்.

இன்னுமோர் விஷயம் பாரீஸ்மாநகரில் அவர் அறியலானார். அதுதான் மனிதர் ஆத்துமத்தைக் கெடுத்து அவர்களை நரக நெருப்புக்கு இரையாக்கத் தலைகாண்பித்த ஓர் பெருங்கொள்ளைநோய். அதுவே வெகு ஆணுவங்கொண்டு திருச்சபையை எதிர்க்கவந்த ஓர் பதிதக்கொள்கை. இதற்கு "ஜான்சனிசம்" என்று பெயர். ஜான்சனித் பதிதர் பலவித தப்பறையான கோட்பாடுகளைப் பித்துக் கொண்டவர்கள்போல் பிதற்றத் தலைப்பட்டனர். தங்களது அடாத காரியத்தை விடாதுசெய்ய, பணமோ, முகஸ்துதியோ, சாதுரிய போதகமோ, இன்னும் அநேக தந்திர வழிகளைப் பிரயோகித்துக் கபடற்ற மாணவர்களையும், பாலியக் குருக்களையும், சந்நியாசி கன்னியர்களையும், சில மேற்றிராணிமார்களையுமே தங்கள் வலையிலிழுக்க வஞ்சகமாய் முயன்றனர். திருச்சபையின் இப்புதிய விரோதியை முற்றிலும் முறியடித்தது சேசுவின் திரு இருதயப் பக்தியே என்பதை வாசகர்கள் திண்ணமாய் அறியும்படியே அவ்வித அபத்தக் கொள்கையைப்பற்றி இங்கு கூறியுள்ளோம். ஆகையால் திரு இருதய அப்போஸ்தலர் "ஜான்சனியத்தின்" தாறுமாறுகளை நேரில் கண்டறிந்து பிற்காலத்தில் அவர் இப்பதிதர்களின் போதனைகளைப் பரவவிடாமல் தடுக்க மிகவும் உதவியாயிருந்தது.

குருப்பட்டம் பெறும் காலம் சமீபித்து வந்தபடியால், சங். தெலா கொலம்பியர் அதற்காகத் தவநெறிமுறையில்

ஓங்கி வளரத் தன்னுலானதெல்லாம் செய்துவந்தார். நமது ஆண்டவர் தமது கடைசி இராப்போஜனவேளையில் அப்போஸ்தலர்களைத் தமது குருக்களாக்கினுர். அவ் வேளை அவர் செய்த சிநேகம் ததும்பிய உபந்நியாசம் ஒரு போதும் மறக்கவொண்ணுதது. அத்தருணம் சேசுநாதர் திரும்பத்திரும்ப வற்புறுத்திக் கூறியது என்னவெனில்:

> "நான் என் பிதாவின் கற்பனைகளை அநுசரித்து, அவருடைய சிநேகத்தில் நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளை அனுசரிப்பீர்களாகில் என் சிநேகத்தில் நிலைக்கொள்வீர்கள்" (அர்ச். அருள. 15 : 10)

என்பதே. ஆழ்ந்த கருத்துகள் நிறைந்த இவ்வார்த்தைகளைச் சங். குளோத் அடிக்கடிச் சிந்தித்திருப்பார் என்று எண்ண இடமுண்டு. ஏனெனில் சில வருஷங்களுக்குப் பின்னர் அவர் செய்த வீரியமுள்ள விசேஷ வார்த்தைப் பாட்டிற்கு இதுவே காரணம் என்ருல் மிகையாகாது. "சேசு சபையின் சகல ஒழுங்குகளையும் நுணுநுணுக்கமாய் அநுசரிப்பேன்" என்பதே அவரின் வீரியம் நிறைந்த வார்த்தைப்பாடு. அவ்வேளை அவர் கூறின வார்த்தைகளும் இதற்கோர் சான்று. "கடந்த சில ஆண்டுகளாக நான் ஜீவித்த முறையை வார்த்தைப்பாடுகளால் பன்மடங்கு பலப்படுத்துவேன். நூதனமாக ஒன்றும் செய்யத்துணியேன். இதற்குமுன் ஒழுங்குகளைக் கவனமாய் அநுசரித்து வந்ததுபோல் இனிமேலும் அவ்வாறே ஒழுங்குகளை அநுசரிப்பேன் என்று வார்த்தைப்பாடு கொடுக்கத் துணியலானேன்." சுருங்கச் சொல்லின்

> "நான் உங்களுக்குக் கற்பிக்கிறவைகளைச் செய்வீர்களாகில் என் சிநேகிதர்களாயிருப்பீர்கள்" (அர்ச். அருள. 15 : 13)

என்ற ஆப்தமொழிகளைத் தமது கண்முன் வைத்து அதின்படி நெறிபிசகாமல் நடந்தார்.

அவர் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பாக்கியமான தினம் அருணோதயமானதும் அவர் இருதயம் சந்தோஷத்தால் பூரித்தது. அவர் மனது நன்றியறிதலுடன் ஆண்டவரைப்போற்றிப் புகழ்ந்தது. 1669-ம் ஆல ஏப்பிரல் மாதம் 6-ம் தேதி அவர் குருப்பட்டாபிஷேகம் பெற்றார். நித்தியத்திற்கும் குருவாம் சங். குளோத் தெலா கொலம்பியர். மறுதினம் முதல் தடவையாகத் திவ்விய பலிப்பூசை நிறைவேற்றும் மகா பெரிய பாக்கியத்தையடைந்தார். மூவுலகுமாளும் முழு முதற் கடவுளின் தூய சரீரத்தை முதல் முதல் ஏந்திய அவர் கரங்கள் எவ்வளவோ பாக்கியம் பெற்றவைகள்!

குருவானவர் மனிதர்களுக்குள்ளே தெரிந்தெடுக்கப்பட்டுத் தனக்கும் மனுமக்களுக்கும் சனுவாய்த் திவ்விய பலிப்பூசை ஒப்புக்கொடுக்க ஏற்படுத்தப்படுகிறார். ஆகையால் நமது சற்குரு இவ்வுன்னத பதவியை நன்குணர்ந்தவராய்த் தன்னை முழுவதும் ஆத்துமங்களுக்காகக் கையளித்தார். விடுமுறை நர்ட்களில் இவர் போய்வந்த இடத்திற்குச் சமீபமாயிருந்த ஓர் வைத்தியசாலைக்குச் சென்று அங்குள்ளவர்களுக்கு ஞானவுதவிபுரிய தீவரித்தார். அவ்விடத்தில் ஆத்தும குருவாயிருந்த சங். பொனூர் சுவாமியார் அவரது ஆத்தும இரட்சணிய ஆவலையும் புண்ணிய மேரையையும் கண்ணுற்று, பாலிய குருவையணுகிப் பல வேளைகளில் ஆலோசனை கேட்பதுண்டு. மேலும் அவரைத் தமக்கு உதவியாக அழைத்து அநேக மாணக்கரை அவர் பொறுப்பில் ஒப்படைத்தார்.

நாம் நமது திவ்விய சேசுவுக்கு உகந்த சீஷர்களாவ தற்கு அவமானம், துன்பம், வருத்தம், வியாதி முதலியவை ஏற்ற சாதனங்கள். ஆகவே தமது உத்தம ஊழியரான சங். தெலா கொலம்பியர் சுவாமியாருக்குத் தமது கசப் பான பாத்திரத்தில் பங்களிக்க நமது ஆண்டவர் சித்தமா ஞர். இவ்வதிகாரத் துவக்கத்தில் சங். தெலா கொலம் பியர் சுவாமியார் மந்திரி மக்களுக்கு ஆசாளுக நியமகம் பெற்ருர் என்று கூறியுள்ளோம். சீர்பெற்றிலங்கிய கொல் பேர்ட் மந்திரி வெகுநாள்வரை நமது பாலியக் குருவான வரை அதிக அன்போடு போற்றிவந்தார். ஆனுல் திடீரென ஓர் அற்பக் காரணத்தை முன்னிட்டு செய்ந்நன்றி மறந்து அவரை ஊரைவிட்டு அப்புறப்படுத்தவும் தலைப்பட்டார்.

அக்கால வழக்கப்படி மந்திரியின் சீர்திருத்தங்களைப் பற்றிப் பலர் புகழ்ந்து அவர்பேரில் பல கவிகள் பாடினுர் கள். புது வரிகள் மந்திரி விதிக்கவே அவைகள் தங்களுக் குப் பிரியமில்லையென்று காட்டச் சற்று விகடமான வார்த் தைகளையும் ஊடே புனைந்து பாடியவர் சிலர். சங். தெலா கொலம்பியர் சுவாமியார் எழுதிய கவி ஒன்று கொல் பேர்ட் மந்திரியின் கையில் துரதிர்ஷ்டவசமாய் விழவே அதை வாசித்தபின் நாகப்பாம்புபோல் சீறி விழுந்தார் அப்பெரியார். பழைய சிநேகத்தை நொடிப்பொழுதில் மறந்தார். பாரீஸ்மாநகரைவிட்டு அவரை விரட்டினுர். இவ்விதமாய் அவர் அவமானமடைந்து 1670-ம் வருஷம் லயன்ஸ் பட்டணத்திற்கு அனுப்பப்பட்டார்.

அத்தருணம் சேசுவின் பிரிய சீஷர் தமக்கு நேரிட்ட அவமானத்தை மறந்தவர்போல், "இனிமேல் கோபம் நிறைந்த மந்திரி சேசுசபைக்கு ஏதாகிலும் தீங்கிழைக்கப்

போகிருனே!" என்று நினைத்து அச்சமுற்ருர். அவருக்கு வந்த இச்சிலுவையை எவ்விதம் ஏற்றுக்கொண்டார் என்று அவர் பின்னெரு சமயம் கூறின வார்த்தைகளிலிருந்து ஒருவாறு ஊகித்தறியலாம். திடீரென வரும் துன்பம் நம்மை ஆழ்ந்த துக்கசாகரத்தில் அமிழ்த்துகிறபடியால் அச்சிலுவையால் உடனே நற்பயன் பெறமுடியாமல் போகிருேம். ஆனால் சிறிது பொறுமையாயிருப்போமானல் அரும் பெரும் வரப்பிரசாதங்களை ஆண்டவர் நமக்கு அருளுவார் என்று பின்னல் தெரிந்துகொள்வோம். இவ்விதமான இக்கட்டு இடைஞ்சல்கள் நேரிடாவிடில் நாம் கெட்டுப்போவதில்லை; ஆனல் இவைகளில்லாமல் முற்றிலும் உத்தம துறவிகளாகமாட்டோம்" என்று குறித்திருக்கிருர்.

ஐந்தாம் அதிகாரம்

திரு இருதயத்தாசரின் அந்தரங்க ஜீவியம்

"கிறீஸ்துவின் வல்லமை என்னிடத்திலே வாசம் பண்ணும் படிக்கு என் பலவீனங்களிலே சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்."
(II கொரி. 12 : 9)

சங். தெலா கொலம்பியர் சுவாமியாரின் அந்தரங்க ஜீவியத்தை மூடி மறைத்திருக்கும் போர்வையைச் சற்று நீக்கிப்பார்ப்பது நன்று. செபத்தியானம் செய்கையில் உதிக்கும் புனித சிந்தனைகளைப் பதிவு செய்து வைப்பது அவரது சுகிர்த வழக்கமாதலால் அவைகளைக்கொண்டு திரு இருதயத்தாசரின் சாங்கோபாங்க வாழ்வை அறிந்து கொள்வது எளிது.

அவர் தம்மீது சிறிதளவும் தயை தாட்சணியமின்றி தம்முடைய குற்றங்குறைகளை விரிவாக வரைந்துள்ளார். வல்லமை பொருந்திய சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் சன்னம் சன்னமாய்ச் சிறு சிறு குறைகளையும் அவரிடமிருந்து அகற்றியது. ஆகையால் அர்ச். சின்னப்பரைப் போல்,

"கிறீஸ்துவின் வல்லமை என்னிடத்திலே வாசம் பண்ணும்படிக்கு என் பலவீனங்களிலே சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்"
(II கொரி. 12 : 9)

என்று மெய்யாகவே இவரும் கூறலாம். இன்ப சுகத்தில் நாட்டமும், பிறர் புகழ்ச்சிபெற வீண் பிரீதியும் அவரிட

மிருந்தது. இவைகளை முற்றிலும் அறுத்தெறிய அவர் எடுத்துக்கொண்ட பிரயாசை அதிகம். பிறர் நம்மிட மிருந்து உபகாரங்கள் பல பெற்றதின் பலனாய் நம்மீது பூரண நம்பிக்கைகொள்வது நமக்குப் பேரானந்தம் உண்டு பண்ணும். ஆனால் அவ்வித சுய இச்சைகளையும் உடனே புறக்கணித்துத்தள்ள மனத்திடன் வேண்டும். அதற்காக "புண்ணிய நெறியில் ஓங்கிவளரத் தீரா ஆவலும், ஆத்தும இரட்சணிய தாகமும் கொண்டவர்களாயிருப்பதும் அவசரம்" என்று குறித்துரைத்தார்.

இன்னும் அவர் கூறியவைகளைக் கவனிப்போம்: "சுய பட்சத்தோடு புரியும் போர் எளிதல்ல; உலக மாய்கையில் அகப்படாதிருக்கவேண்டிய விழிப்பு சிறிதல்ல; இவை முன் கடுஞ்சிறையும் நீடிய நோயும் மற்றெவ்வித விபத்தும் பெரிதல்ல. நாம் அறநெறி முறையில் தவறாதொழுக மன வுறுதிகொண்டதும் நமது பிரதிக்கினைப்படி ஒழுகவிடாமல் பல விரோதிகள் கிளம்புகின்றனர். கபட தந்திரம் நிறைந்த பசாசும், மாய வஞ்சனையுள்ள உலகமும், நன்மையானவைகளில் நாட்டமில்லாத நமது பலவீனமும், குண சீலர்களின் புகழ்ச்சியும், துர்ச்சனரது இகழ்ச்சியும், சாங்கோபாங்கத்தில் சுறுசுறுப்பற்றவர்களின் அச்சமற்ற நடத்தையும் ஒருங்கே திரண்டு எழுந்ததுபோல் தோன்றுகிறது. தேவ ஞான ஆறுதல் பொங்கினால் வீண் சிலாக்கிய எண்ணங்கள் உண்டாகிறது; ஆண்டவர் தமது நேச நேத்திரங்களை மறைத்தாலோ மனவறட்சியும் அச்சமும் ஏற்படுகின்றது......

"நாங்கள் புரியும் ஞானயுத்தத்தில், ஆண்டவரே, உம்மையன்றி எங்களுக்குத் துணையாக நிற்பவர் எவர்? நீரே

எமது ஏகதஞ்சம்; நீரே எமது தவறாத அடைக்கலம். புண்ணிய சாங்கோபாங்கத்தின் உன்னத சிகரத்தை ஒரு நாளில் அல்லது ஒரு மாதத்தில் இன்னும் ஒரு வருஷத்திலுங்கூட அடைந்துவிடலாம் என்று கருதுவது பெருந் தவறு. அது நமது ஜீவியகாலமெல்லாம் செய்யத்தகும் ஓயாப்போர்; அது சர்வேசுரனது அணைகடந்த வரப்பிரசாதத்தின் வல்லமையை விளங்கவைக்கும் சிறந்த யுத்தம்.. நம்மை நாசமாக்க நாலா பக்கமும் சத்துருக்கள் நெருங்கும்போது அவர்களை எதிர்த்துத்தாக்கப் போதிய தைரியம் அளிப்பவர் கருணை நிறைந்த ஆண்டவரே. அவரே நமது கேடையம்; அவரின் சலுகை நமக்குச் சகலவற்றிலும் இன்றியமையாதது. எப்போதாகிலும் நம்மை அவர் கைவிட்டு விடுவார் என்று எண்ணத்தகாது. தேவரீர் செய்யத் தூண்டியவைகளின்படி நடக்க உமது இஷ்டப்பிரசாதங்களை என்மீது பொழிந்தருளும்.

"தேவ சுதனின் இரக்கப் பெருக்கத்தினிமித்தம் வீண் பெருமைகொள்ள என்னைத் தூண்டிய சோதனை வலியற்றுப்போனது. அதின் ஈனம் இப்போது எனக்குத் தெளிவுற விளங்குகிறது. ஆகையால் வேரோடு அதைப் பிடுங்கி எறிய பேராவல்கொண்டு அதற்காக ஓர் பிரதிக்கினையும் எடுத்துக்கொண்டேன். பற்பல காரியங்களைச் செய்ய மிதமிஞ்சி ஆத்திரம் பொங்கிச் செபநேரத்தைக் குறைக்கச் சோதனை வரும்போது: 'ஆத்துமமே! நீ ஏன் உனது நேச ஆண்டவரோடு சல்லாபிக்கச் சலிப்புறுகிறாய்? அவர் ஒருவர் உன்னோடு இருப்பது போதாதோ? அவர் உனக்குத் துணையாய் நின்று உன்னை அரவணைக்கும்போது நீ ஏனையரது அன்பைத் தேடுவது

ஏன்?' என்று நான் ஜெபித்து ஆறுதல் அடைகிறேன்; ஆண்டவரோடு ஒன்றித்து வாழ ஆசையும் அதிகரிக்கிறது.

"நாம் எவ்வளவுக்குச் சகலத்திலும் சர்வேசுரனுக்குப் பிரியப்பட நடக்கிருேமோ அவ்வளவுக்கு நாம் புண்ணியத்திலும் அதிகரிப்போம். மனிதனின் சிநேகத்தையிழக்க நேர்ந்தால் மனங்கலங்காது சர்வேசுரனின் அன்பே போதுமென்று உற்சாகம் கொள்வது உத்தமம். இவ்வுண்மை எனது மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து கிடக்கின்றது.

"ஓர்தடவை எதிர்பாராத இடைஞ்சல் ஏற்பட்டதும் நான் பொறுமையையிழந்து எரிச்சலுற்றேன். ஆனல் பின்னர் வெட்கம் மேலிட்டு, 'நீதான திவ்விய சேசுவின் சிலுவையில் பங்கு கேட்டவன்? நீ அவரைப்போல் துன்பமும் சலிப்பும் இகழ்ச்சியும் பெறும்படி ஆசித்தது மெய்யென்கிலும் அவைகளின் தன்மையை உணரவில்லை போலும்!' என்று என்னைத்தானே கடிந்துகொண்டேன்......அர்ச்சியசிஷ்டவர்களுக்குத் துன்பங்கள் வந்ததும் உள்ளம் பூரித்தனர். நானே அவ்வாறு மகிழ்ச்சி அடைவதில்லை. ஆகையால் நான் இன்னும் புண்ணிய சிகரத்தின் அடிவாரத்தில் தான் நிற்கிறேன் என்பதற்கு ஐயமில்லை......

"அர்ச். சவேரியார் சர்வேசுரனுடைய அதிசய குண லட்சணங்களை எவர்க்கும் எத்தருணமும் எடுத்தோதினர். ஆனல், ஆண்டவரே! நானே உம்மைப்பற்றிப் பேசுவதில்லையே! உம்மை அதிகம் சிநேகியாததால் உம்மை அதிகம் நினைக்கிறதுமில்லை........ஓர் ஆத்துமம் நரக நெருப்பிற்கு இரையாகாமலிருக்க எனது இரத்தத்

தையெல்லாம் சிந்த மனதாயிருக்கிறேன். ஆ! என் மரண வேளையில சேசுநாதரைப் பார்த்து: 'ஆண்டவரே, நீர் பாவிகள் மோட்சமடைய உமது உதிரத்தைச் சிந்தினீர். நான் உமது திரு இரத்தத்தின் பலன் வீணாகாதிருக்க ஆத்தும ஈடேற்றத்திற்காக அயராதுழைத்தேன்' என்று சொல்லக்கூடுமானால் எவ்வளவு ஆனந்தம்! எவ்வளவு ஆறுதல்!! நான் மற்றவர்களை மனந்திருப்பப் பேராவல் பூண்டு என்னுடைய குற்றங்குறைகளைக் களைந்தெரியாமலிருக்கலாமா? பிறரை மோட்ச கரை சேர்த்துவிட்டு நான் நரக நெருப்புக்கு ஆளாவதா? ஒருபோதும் இல்லை. ஆண்டவரே, நீர் சகல நன்மைச் சுரூபி. நான் இரட்சணியம் அடைய நீர் உதவி புரிவீர். நான் மோட்ச பேரின்ப பாக்கியம் பெறும்படி எனக்கு வேண்டிய அனுக்கிரகம் அருளுவீர்.

"தேவமாதா ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்தத் திருநாளன்று நான் எடுத்துக்கொண்ட பிரதிக்கினை: என்னை முழுவதும் ஆண்டவர் வசம் கையளித்து விடுவேன். அவரே எனது ஜீவன்; எனக்குள்ளதெல்லாம் அவரிடம் ஒப்படைத்தேன். சோதனைகளோ, மாயதந்திரங்களோ, சுகமோ, துக்கமோ, துர் இச்சைகளோ, குற்றங்குறைகளோ ஆக இவை போன்றவைகளுக்கு இனி நான் பயப்படுவதில்லை. நேச சேசுவின் அணைகடந்த நன்மைத்தனமும், எல்லையற்ற ஞானமுமே எனது வழிகாட்டி. சகலமும் அவருடைய தோத்திரத்திற்காகவே முடிவுறும். எனது தாயும் அவர், எனது தந்தையும் அவர், ஆகையால் மற்றவருடைய சிநேகத்தை நான் நாடுவதில்லை, பிறர் உதவியைத் தேடுவதில்லை. இதனால் ஏற்படும் மனவமைதிக்கு

அளவில்லை. இனிமேல் எதற்கும் கலங்கி வருந்துவதில்லை. கர்த்தர் என்மீது பொறுமையுள்ளவராயிருப்பது எனக்குப் பெரும் பாக்கியம். மனச்சமாதானத்தை இழக்காதிருக்க இரகசியம் இதுவே.”

நமது சற்குரு தெலா கொலம்பியர் குறித்துவைத் திருந்தவைகளையெல்லாம் விளக்கமாய் எடுத்துரைக்கின் பெரிதும் விரியும். சுருக்கமாய் இன்னும் இரண்டொரு வார்த்தைகள் கூறி அவர் அயராது புரிந்த ஞானப்போரின் சாராம்சத்தைமட்டும் இங்கு தருவோம்.

முகத்தாட்சணியம் என்ற சோதனையை எங்ஙனம் வென்ருர் என்று கவனிப்போம். சிற்சில வேளைகளில் சிறு ஒழுங்குதானே என்று மௌன நேரத்தில் பேசுவதும், உத்தரவின்றி அற்பப்பொருள்தானே என்று மற்றவர்கட்குக் கொடுப்பதும், புறணி, அவதூறு, முறுமுறுப்புக்குச் செவி சாய்ப்பதும், இன்னும் இதுபோன்ற தவறுதல்களுக்கு முகத்தாட்சணியமே காரணம் என்று வருந்துவார். சர்வேசுரனுக்குப் பயப்படுவதைவிட்டு அற்ப மனிதருக்கு அஞ்சுவது எத்தனையிழிவு என்று தன்னைத்தானே ஏளனம் செய்வார். “நான் ஒழுங்குகளை உத்தம விதமாய் அநுசரித்தால் பிறர் என்ன சொல்வார்கள்? என்ன நினைப்பார்கள்? என்று கலங்குவது கோழைத்தனம். அவர் அத்தருணங்களிற் தன்னைத்தானே கடிந்துகொள்வதுண்டு. “நீ புண்ணியசாங்கோ மார்க்கத்தில் ஓங்கி வளரல்லவோ சந்நியாச மடம் புகுந்தாய்! நீ நினைத்தது ஒன்று, செய்வது மற்றொன்று! நீ இங்கே ஆபத்தில் ஜீவிப்பதைவிட உலகத்தில் உன்னிஷ்டப்படி நடந்திருக்கலாமே!” என்பார்.

அவரது விடாமுயற்சி மிகவும் புகழத்தக்கது. அவர் தம்மீது ஓயாத விழிப்புள்ளவராயிருந்ததுபற்றித் தம்மில் அற்பசொற்பக் குற்றங்களையும் அவ்வப்போதே அறிந்து கண்டியாமல் விடார்.

"ஏனெனில் நீதிமான் எழு முறை வீழ்ந்தெழுந்திருப்பான்" (பழமொழி. 24: 16)

என்பது தேவ வாக்கியம். ஆண்டவர் மீது நம்பிக்கை முற்றிலும் வைத்து மீளவும் வீரமுடன் ஞானப்போர் புரிவார். அவ்வேளைகளில் மதுர சேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர்தான் என்னைச் சற்குணசீலனாக்கவேண்டும். இதன் பொருட்டு உமது திருச்சித்தப்படி என்னை நடப்பியும்; நான் என்ன கஷ்டப்பட்டாகிலும் உமது அர்ச்சிய சிஷ்டவனாக வேண்டும்.....எனது நேசரே, இருள்நிறைந்த எனது கண்களைத் திறந்தருளும். உம்மையறியாமல் என்னையறிவது அசாத்தியம். நீரே எனது ஏக ஆசை. உம்மையன்றி வேறெதையும் நான் ஆசிப்பதில்லை. சகலத்தையும்விட என்னையே நான் அதிகமாக வெறுக்கிறேன். ஏனெனில் என்னைப்பார்க்கிலும் அற்பமானதும், அநீதமானதும், அவலட்சணம் பொருந்தியதும் வேறெதுவுமில்லை." இவ்விதமாய் அவர் உருக்க நேசத்துடன் பிரார்த்திப்பதுண்டு.

சுருங்கச் சொல்லின் அவர் புண்ணிய சாங்கோபாங்கம் என்றும் உன்னத சிகரத்தை நோக்கிப் படிப்படியாய் ஏறிச்செல்வதற்குப் பக்கபலமாய் நின்று உதவியவை எவையெனில், கர்த்தரின் குறையற்ற வரப்பிரசாதமும், சங். கொலம்பியர் சுவாமியாரின் அயரா வொத்துழைப்பும்,

திவ்விய சேசுவிடமிருந்து சகலமும் பெற்றுக்கொள்ள அவரிடம் விளங்கிய பேராவலுமாம். ஆகவே நமது ஆண்டவர் திரு இருதயப் பக்தியை நிலைநாட்ட இவ்வதி வுத்தமரைத் தெரிந்துகொண்டது ஆச்சரியமாகாது. சேசுநாதர் தமது அப்போஸ்தலரை நோக்கிக் கூறியது போல் சங். தெலா கொலம்பியரையும் பார்த்து :

> " சர்வேசுரனுடைய இராச்சியத்தின் இரகசியங்களை
> அறிந்துகொள்ள உமக்கு அருளப்பட்டிருக்கிறது "
>
> (அர்ச். லூக். 8 : 10)

என்று கூறியதாகக் கொண்டாலும் மிகையாது.

ஆரும் அதிகாரம்

மூன்றும் வருஷ நவசன்னியாசம் (Tertianship)

"உமது நீதித்தீர்ப்புகளை நான் அநுசரிப்பதாக ஆணை யிட்டுத் தீர்மானம் பண்ணிக்கொண்டேன்."

(தாவீ. சங். 118 : 106)

புண்ணிய சாங்கோபாங்கத்தில் ஓங்கி வளர உண்மையான மனவுறுதியும் சர்வேசுரனது அணைகடந்த வரப்பிரசாதமும் மகா அவசியம். இதின் உண்மையை அர்ச்சியசிஷ்டவர்களின் ஜீவியத்தில் நாம் கண்கூடாகப் பார்க்கிரேம். அர்ச்சியசிஷ்டவர்களின் ஞான ஜீவியத்தின் இரகசியம் ஆண்டவருக்குத் தங்களை முற்றிலும் கையளித்துவிடுதல். அதுவே புண்ணிய சிகரத்தையடைய ஏற்ற வழி. இவ்விதமாய் நமது சற்குரு தெலா கொலம்பியரும் திவ்விய சேசுவுக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணம் பண்ணுமாறு ஓர் வீரச்செய்கை புரிந்தார். அதைப்பற்றி இவ்வதிகாரத்தில் ஆராய்வோம்.

நான்காம் அதிகாரத்தில் கூறியபடி அவர் பாரீஸ்மா நகரிலிருந்து லயன்ஸ் பட்டணத்திற்குச்சென்று அங்கு நாலு வருஷமளவாய்ப் பரிசுத்தத் தமதிரித்துவக் கல்லூரியில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக்கொடுத்தார். பிறகு சேசுசபை ஒழுங்குப்பிரகாரம் மூன்றும் வருஷ நவசன்னியாசம் ஆரம்பிக்கும்படி அர்ச். சூசையப்பர் மடத்திற்குச் சென்றுர். மூன்றும் வருஷ நவசன்னியாசம் என்பது

சேசுசபைக் குருத்துவ மாணவர் குருப்பட்டம் பெற்ற பின்னர் பத்து மாதமளவில் விசேஷ ஞானப்பயிற்சி பெறக் குறிக்கப்பட்ட காலம். தேவ வரப்பிரசாத உதவியால் தங்கள் கிரமந்தப்பிய பற்றுதல்களை முற்றிலும் களைந்தெறிய சிறந்த காலம் இதுவே; சர்வேசுரனேடு அன்னியோன்னிய ஐக்கியமாய் ஜீவிக்க இடையூருய் நிற்கும் சகலத்தையும் அறவே ஒழித்திடத் தகுந்த சமயம்; தேவ சிநேகம், பிறர்சிநேகம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், தன்னை ஒறுத்தல் முதலிய உயர்ந்த புண்ணியங்களை உறுதிப்படுத்திட உகந்த வேளை. இம்மூன்ரும் வருஷ நவசன்னியாசம் முடிந்த பின்னரே பகிரங்க அப்போஸ்தல ஜீவியம் ஆரம்பிக்க வேண்டும் என்பது சேசுசபை ஸ்தாபகரான அர்ச். இஞ்ஞாசியாரின் ஏற்பாடு.

அப்போது மூன்ரும் வருஷ நவசன்னியாசம் செய்தவர்களுக்கு சிரேஷ்டராயிருந்தவர் சங். கில்பர்ட் எத்தியான் என்ற உத்தம குருவானவர். இவரைப்பற்றி மூன்ரும் அதிகாரத்தில் கூறியதை வாசகர்கள் ஞாபகப்படுத்திக் கொள்வார்களாக. 1674-ம் ஆண்டு மூன்ரும் வருஷ நவசன்னியாசத்திலுள்ளோர் முப்பதுநாள் தியானம் ஆரம்பித்தனர். இத்தியானகாலத்தில்தான் நமது சங். தெலா கொலம்பியர் சுவாமியார் தேவ ஏவுதலால் தூண்டப்பட்டு ஓர் வீரச்செயல் புரியத் துணிந்தார். அஃது பரிமளம் வீசும் ஓர் உத்தம பலியாம்.

திவ்விய சேசுவை நெருங்கிப் பின்பற்றி நடப்பதற்கு ஏற்ற வழி எதுவென்று சங். கொலம்பியர் தியானிக்கையில் நமது ஆண்டவர் அவருக்கு விசேஷ ஞானவெளிச்சம் அருளினர். சேசுசபை ஒழுங்குகள் யாவற்றையும் நுணு

நுணுக்கமாய் அநுசரிப்பதினால்தான் தமது நேச இரட்சகரை உத்தம விதமாய்ப் பின்பற்ற இயலும் என்று உணர்ந்தார். அதற்காக ஓர் விசேஷ வார்த்தைப்பாடு கொடுக்கவேண்டும் என்றும் சர்வேசுரன் அவருக்குத் தெளிவாக அறிவித்தார். அப்போது அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் ஒழுங்குகளை அநுசரிப்பதில் காண்பித்த ஊக்கம் நிறைந்த பிரமாணிக்கத்தைத் தம்முடைய நடத்தையோடு ஒப்பிட்டுப் பார்த்தார். எவ்வளவு பாரதூர வித்தியாசம்! அவ்வேளை அவரிடம் ஓர் வகைத் திகில் ஏற்பட்டது. தேவ சித்தப்படி இப்புதிய வார்த்தைப்பாடு கொடுத்தால், அதனால் விளையக்கூடும் சஞ்சலங்களை நினைவுற்றுக் கலங்கினார். வெகுநேரம் செபித்தார்; கலங்கி கண்ணீர் சிந்தினார்; நிதானமாய் யோசனைசெய்தார்; தன்னோடு தர்க்கித்தார். சோதனைகள் பல எழும்பின: "நீ புண்ணியவானென நடிக்கவோ இவ்விதம் செய்யப்போகிறாய்? நீ யாவராலும் புகழப்படவோ இந்நூதன வார்த்தைப்பாடு? வீண் பெருமைக்கு ஏதுவாயிருக்கும் இத்தகைய காரியத்தை யார்தான் ஏற்றுக்கொள்வர்?" என்று அவர் மனதைக் கலக்க முயன்றது அலகை. அத்தருணம் கடும்புயலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் மரக்கலம்போல் அவர் மனது அலைக்கழிக்கப்பட்டு வருந்தியது. இதற்கு அவரது வார்த்தைகளே சாட்சி பகரும். "இனிமேல் எனது ஜீவியம் சிலுவை நிறைந்தாக விளங்கும். கடின தபசும், ஏகாந்த வனவாசமும், எவ்வித உபாதை நிறைந்த வாழ்வும் எனது வார்த்தைப்பாட்டால் நான் அனுபவிக்கப்போகும் ஓயாத ஒறுத்தலுக்கு இணையாகாது. அநுதினமும் நானே எனக்கு மரித்தவனாய் ஜீவிக்கவேண்டும். இதைப்பற்றி

முத். குளோத் தெலா கொலம்பியர்
சங். காலிபே சுவாமியாருக்குத் திரு இருதயப் பக்தியைக்
கற்றுக்கொடுக்கிறார்.

முத். தெலா கொலம்பியர் வீரியம் நிறைந்த வார்த்தைப்பாட்டைச் சர்வேசுரனுடைய விசேஷ வரப்பிரசாதத்தால் அநுசரிக்கக் கூடியவர் என்று துணிந்து யாதொரு தடங்கலின்றி அவருக்கு அநுமதியளித்தார் சங். எத்தியான் சுவாமியார்.

நினைக்குங்கால் நான் நீண்டகாலம் தாங்கவொண்ணுத வேதனைகளை அனுபவிக்கவேண்டும் என்று தோன்றுகிறது. சாவும் சீக்கிரம் வந்து எனது கஷ்டங்களிலிருந்து என்னை மீட்காதுபோல் தோன்றுகிறது" என்று புலம்பினர்.

. கடைசியாகத் தேவசிநேக வாஞ்சையால் தூண்டப்பட்டார்; தைரியமடைந்தார்; ஜெயம்பெற்ருர். "நான் ஒன்றுக்கும் அஞ்சேன். வருவது வரட்டும். ஆண்டவர் விரும்பும் தகனப்பலி செய்வேன். அவரே எனது தவ ருத ஊன்றுகோல். அநுதினம் திவ்விய பலிப்பூசை செய்வதின் பலனுய்த் தளராத மனவலிமை பெறுவேன். சேசுசபை ஒழுங்குகள் யாவற்றையும் பிரமாணிக்கமாய் அனுசரிப்பேன் என்ற இவ்வார்த்தைப்பாட்டில் நிலைநிற்க அநுதினமும் திவ்விய சேசு எனக்கு அருள்புரிவது நிச்சயம்" என்று கடைசியாக வெகு திடாரிக்கத்துடன் தீர்மானித்தார். ஆனதுபற்றி உதாரகுணம் படைத்த நமது உத்தம குரு, அர்ச். சின்னப்பரைப்போல,

> "கிறீஸ்துநாதருடனே கூட சிலுவையிலே அறையப்பட்டவனுயிருக்கிறேன்; நான் ஜீவிக்கிறேன்; ஆனுலும் நானல்ல, கிறீஸ்துநாதர் என்னில் ஜீவிக்கிருர்!"
>
> (கலா. 3 : 19-20)

என்று உண்மையாக கூறக்கூடும்.

சங். தெலா கொலம்பியர் சுவாமியார் சிரேஷ்டரின் உத்தரவைப் பெறும்பொருட்டு தாம் விரும்பிய வார்த்தைப்பாட்டைப்பற்றி விபரமாய்ப் பின்வருமாறு அவரிடம் எழுதிக்கொடுத்தார்.

"உமது நீதித் தீர்ப்புகளை நான் அனுசரிப்பதாக
ஆணையிட்டுத் தீர்மானம் பண்ணிக்கொண்டேன்."
(சங். 118 : 106)

"நான் நமது சபை ஏற்பாடுகளையும், பொது ஒழுங்குகளையும், அடக்கவொடுக்க ஒழுங்குகளையும், குருக்களின் ஒழுங்குகளையும், பிரமாணிக்கமாய் அனுசரிப்பேன் என்று வார்த்தைப்பாடு கொடுக்க எண்ணியிருக்கிறேன். நான் எண்ணிய கருமத்தை உமது கையில் ஒப்படைத்து உமது முடிவுக்குப் பணிவுடன் காத்திருக்கிறேன். ஆகையால், தயவு செய்து நான் எழுதியவைகளைத் தீரப் பரிசோதித்து, இவ்வீர முயற்சிசெய்ய என்னைத் தூண்டியவைகளையும் ஆராய்வீர்களாகில் இது தேவ ஏவுதலால் உண்டானதென்று நீங்கள் சந்தேகமறக் கண்டுகொள்வீர்கள். அதற்குமாருய் இதை நீங்கள் அங்கீகரிப்பதில்லையென்று ஓர் வார்த்தை மட்டும் கூறினுல், நான் அதை தேவ வாக்காகக்கொண்டு உடனே பணிந்து நடப்பேன்." அதின்பின்னர் ஒவ்வொரு ஒழுங்கையும் அவர் அனுசரிக்கும் முறை எவ்விதம் என்று வெகு தெளிவாய் எழுதியுள்ளார். உதாரணமாக,

> அவரவர் தன்னுல் கூடியமட்டும் சகல காரியங்களிலும் தன் ஆசாபாசங்களை அடக்கி ஜெயித்து, இடைவிடாத ஒறுத்தலை அனுசரிப்பதே எல்லோருக்கும் முக்கிய நோக்கமுள்ள அலுவலாயிருக்கக்கடவது

என்றதோர் ஒழுங்கைப்பற்றி அவர் கூறுவதைக் கவனிக்க.

1-வது : வாழ்வு, சௌக்கியம், நன்மை, தின்மை, அலுவல்கள், இடங்கள் இவை முதலியவைகளின்மீது எனது சுயப்பிரீதியை அகற்றிச் சர்வேசுரனுடைய திருச்சித்தத்தையே தேடுவேன்.

2-வது: ஆண்டவருடைய திருச்சித்தத்திற்கு ஒத்திருக்குமாகில் என்னுலியன்றமட்டும் எனது சுயநாட்டத்திற்கு முற்றிலும் விரோதமானவைகளையே தேடுவேன். நமது ஆண்டவரின் அணைகடந்த நன்மைத்தனத்தின் பயனால் ஏற்கனவே நான் இவ்வாறு நடந்து வந்திருப்பதாகத் தோன்றுகிறது.

3-வது: ஐம்பொறிகளுக்கு இன்பமளிக்கும் கண்காட்சி, விநோத வேடிக்கை, சுகந்த வாசனை, நாவுக்கினியவை, ஆகிய இவைகளைத் தேடமாட்டேன். வீண் பெருமையை அதிகரிக்கக்கூடியவைகளை அறவே வெறுத்துத் தள்ளுவேன். இதற்காக வார்த்தையிலும் நடத்தையிலும் வெகு விழிப்புள்ளவனுயிருப்பேன். கீழ்ப்படிதலும், அசௌக்கியமும் என்னைக் கட்டுப்படுத்தாதமட்டும், எனக்குக் கொடுக்கப்படும் உடைகள், சாமான்கள் முதலியவற்றை மனத் திருப்தியுடன் எப்போதும் ஏற்றுக்கொள்வேன்.

4-வது: எனக்கு வரும் இக்கட்டு இடைஞ்சல்களை ஒருபோதும் அகற்றமாட்டேன். இதில் சர்வேசுரனுடைய சித்தத்தையே தேடுவேன்.

5-வது: அன்னபானம், நித்திரை இவைபோன்றவைகள் இயல்பாய்த் தரும் இன்பத்திற்கு இடம் கொடாமலும், பிறர் கவனத்தைக் கவரக்கூடியவைகளைத் தவிர்த்தும், தேவ ஏவுதல்படி இவைகளையெல்லாம் ஒறுத்தல் முயற்சிகளாகக்கொண்டு வெறுத்து நடப்பேன். இவ்வாறே ஒவ்வொரு ஒழுங்கையும் அனுசரிக்கும் மேரையை வெகு நுணுநுணுக்கமாய்த் திட்டம்செய்தார். அதன்

பின்னர் வீரியம் நிறைந்த இவ்வார்த்தைப்பாடு செய்யத் தன்னைத் தூண்டியவைகள் எவையென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

1. எனது அந்தஸ்தின் கடமைகளைச் சரிவர அனுசரிக்கவும் அற்ப சொற்பக் காரியங்களிலும் நமது ஆண்டவருக்குப் பிரமாணிக்கமாயிருக்கவும் நான் எவ்விதத்திலும் கட்டுப்பட்டவனாவேன்.

2. சுயபட்சத்தை வளர்க்கக்கூடியவைகளையெல்லாம் ஒரே வெட்டில் வெட்டியெறிய மேலான வழி இது.

3. சபை ஒழுங்கை அனுசரிப்பதில் இதற்குமுன் நான் தவறியிருந்தால், அதற்குப் பரிகாரமாக இனிமேல் என் ஜீவியகால முழுவதும் நெறி பிசகாமல் நடப்பேன் என்று வாக்களிக்கிறேன். சகலத்தையும்விட இவ்வுண்மை எனக்கு அதிக உற்சாகத்தை ஊட்டுகிறது.

4. ஆண்டவர் என்மீது காண்பித்தருளிய அணை கடந்த இரக்கப்பெருக்கத்திற்குக் கைம்மாறாக அற்பக் காரியங்களிலும் அவருடைய திருச்சித்தப்படி நடக்க முற்றிலும் கட்டுப்பட்டவனாவேன்.

5. தேவ திருச்சித்தத்திற்கு எதிரிடை பண்ணுபவரை நமது ஆண்டவர் நித்திய தண்டனைக்குள்ளாக்கலாம் என்றாலும் அவர் எப்போதும் அவ்விதம் தண்டியாமல் அவர்கள்பேரில் இரக்கம் காண்பிக்கிறார். ஆகையால் நான் அவரு

டைய திருச்சித்தத்திற்கு வணக்கமுடன் பணிந்து நடப்பேன்.

6. எவ்வித பற்றுதல்களையும் தூர அகற்றி என்னுடைய இருதயத்தை முழுவதும் சர்வேசுரனுக்கே ஒப்படைக்கிறேன். இதனால் மெய்யான தேவ சிநேகம் என்னிடம் அதிகரிக்கும்.

இப்புதிய வார்த்தைப்பாடு கொடுக்க எனக்கு உற்சாகமூட்டியவைகள் எவை என்றால் :—

1. கற்பைப் பழுதின்றிப் பாதுகாப்பதற்கு, இன்ப சுகங்களின்மீது நாட்டமுள்ள ஒருவன் வெகு விழிப்புடன் போர் புரியவேண்டும். நான் எனது புதிய வார்த்தைப்பாட்டில் பிரமாணிக்கமாயிருக்க அதைவிட அதிகச் சிரமப்படத் தேவையில்லை.

2. அநந்த ஞானம் நிறைந்த சர்வேசுரனே நமது நேசத் தந்தையாகிய அர்ச். இஞ்ஞாசியாருக்கு இவ்வொழுங்குகளைத் தந்தருளினார். ஆகையால் அவைகளின்படி நடக்க இயலாதென்று ஒருவரும் கூறத்துணியார். எனது புதிய வார்த்தைப்பாடு ஒழுங்குகளை அதிகக் கரிசனையுடன் அனுசரிக்க உதவியாயிருக்கும். ஏனெனில் ஒழுங்குகளை மீறினால் பாவம் ஆகும். நமது ஆண்டவர் எனக்கு வேண்டிய விசேஷ வரப்பிரசாதங்களைக் குறைவின்றித் தந்தருள்வார் என்னும் எண்ணமானது எனக்கு உற்சாகம் அளிக்கின்றது.

3. அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் நமது சபையில் ஜீவித்த ஐந்து வருஷமும் சகல ஒழுங்குகளையும் வெகு பிரமாணிக்கமாய் அனுசரித்தார். சர்வேசுரனுடைய வரப்பிரசாத ஒத்தாசையால் நானும் ஏன் அவரைப்போல் நடக்கலாகாது?

4. இவ்வார்த்தைப்பாட்டால் எனது மனவமைதியை இழந்துவிடுவேன் என்று கலங்க இடமில்லை. ஏனெனில், "உம்முடைய முறைமையை நேசிப்பவர்களுக்கு வெகு மனச்சமாதானமுண்டு" என்று வேதாகமம் அறிவிக்கிறது. மேலும் அற்பக்காரியங்களில் முதலாய்ப் பிரமாணிக்கமுள்ளவர்கள் மனச் சமாதானமும் சந்தோஷமும் அனுபவிப்பார்கள்.

5. இவ்வார்த்தைப்பாட்டிற்குப் பின்னர் எனது நடத்தையில் விசேஷ மாறுபாடு தோன்றாது. இதற்கு முன்னரும் நமது சபை ஒழுங்குகளையெல்லாம் குறைவின்றி அனுசரித்து வந்தேன். உத்தம புண்ணிய சாங்கோபாங்கத்தில் நிலைநிற்பதே எனது நோக்கம்; நூதனமும், அதிசயமுமான காரியம் எதுவும் செய்யவேணும் என்பது என்னுடைய கருத்தல்ல.

6. மரணம் கிட்டியதும் உலகப் பற்றுதல்கள் அறுபட்டுப்போகும். இத்தகையப் பயனை இப்போதே எனது வார்த்தைப்பாட்டால் நான் அடைகிறேன்.

7. எனது பிரதிக்கினை எனக்கு ஆதாரமல்ல; எனக்குத் தைரியம் தருவது எனது சுயப்பலமல்ல; நமது ஆண்டவரின் எல்லையற்ற நன்மைத்தனமும், அபரிமிதமாய் அவர் பொழியும் வரப்பிரசாதமுமே எனது ஊன்றுகோல். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

8. இவ்வார்த்தைப்பாடு என்னை அதிக விழிப்புள்ளவனாக்கி, மனதுபொருந்தி எந்த ஒழுங்கையும் மீறுதிருக்க உதவிபுரியும்.

9. வீண் சந்தேகங்களால் அலைக்கழிக்கப்படாதிருக்க, நான் நிச்சயமற்ற காரியங்களைப்பற்றி வார்த்தைப்பாடு செய்கிறதில்லை.

10. எனது வார்த்தைப்பாட்டின்படி நடப்பதால் எனது மனவமைதி கெடுமாயின் எனது கட்டுப்பாடும் அத்தோடு நின்றுபோகும். ஆனால் அதற்கு மாறுய் மனச்சமாதானம் நீடித்திருந்தால் எனது ஜீவியகால முழுவதும் அதற்கு உட்பட்டவனாவேன்.

11. நான் எத்தனித்த காரியம் அச்சம் உண்டுபண்ணுவதற்குப் பதிலாய் இப்போது ஆனந்தத்தையே விளைவிக்கிறது; அடிமைத்தனம் அடியோடு தொலைந்துபோய்ப் பூரண சுதந்தரம் பெற்றவனாவேன். சுயபட்சம் இனிமேல் என்னோடு அதிகக் குதர்க்கம் பண்ணாது. என் மனம் சந்தோஷத்தால் பூரிப்படைகிறது, ஏனெனில் விலையேறப்பட்டப் பொக்கிஷத்தைக் கடைசியாகக் கண்டடைந்தேன்.

12. எனது புதிய வார்த்தைப்பாடு திடீரென எழும்பும் ஓர் வகைப் பக்தி பற்றுதலால் உண்டானதல்ல. ஆனால் அது வெகுகாலமாய் ஆலோசனை செய்ததின் பலனும். இதைப்பற்றிச் சாவதானமாய் நிதானிக்க ஏற்ற சமயம் பார்த்துக் கொண்டிருந்தேன். இத்தியான காலத்தில் நன்றாய் யோசித்ததில் அது சுலபமாய்த் தோன்றினதுமின்றி அதில் ஊன்றி நிற்கத் தைரியமும் பெற்றேன்.

இவ்வாறு வெகு தெளிவாய் எழுதிய தமது திட்டத்தைச் சங். எத்தியான் சுவாமியாரின் பரிசோதனைக்குக் கையளித்தார். அவர் நமது சற்குருவை நன்கு அறிந்தவராதலின், மனோ தைரியமும் தாராளகுண சிந்தையும் ஒருங்கே பெற்றிருந்த சங். தெலா கொலம்பியர் சுவாமியார் இத்தகைய வீரியம் நிறைந்த வார்த்தைப்பாட்டைச் சர்வேசுரனுடைய விசேஷ வரப்பிரசாதத்தால் அனுசரிக்கக்கூடுமென்று துணிந்து யாதொரு தடங்கலின்றி அவருக்கு அனுமதியளித்தார்.

1674-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதி சங். தெலா கொலம்பியர் சுவாமியார் தமது 33-ம் பிராயத்தில் இவ்வார்த்தைப்பாட்டைச் செய்தார். இவ்வுத்தம முயற்சியால் திவ்விய சேசு அவரைத் திரு இருதய அப்போஸ்தலராக்குவதற்கு தெரிந்துகொண்டார் போலும். சேசு இராஜாவின் சேவையில் சிறந்த ஊழியம் புரிய ஏற்கனவேயிருந்த, கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதல், என்னும் மூன்று சிநேகபந்தனக் கட்டுகளோடுகூட புதியதோர் நேசப் பந்தனத்தையும் அன்பின் அறிகுறியாகச் சேர்த்தருளினர்.

சிற்பி அழகிய உருவங்கள் தீட்ட பல நுட்பமான கருவிகளை உபயோகிக்கின்றனன். அவைகள் எவ்வளவுக்கு அவனது கருத்துக்கிசைந்து உதவுகின்றனவோ அவ்வளவுக்கு நேர்த்தியாய் வேலையும் முடியும். அவ்வாறே சேசுவின் திரு இருதயப் பக்தியைப் பரம்பச்செய்யச் சங். குளோத் தெலா கொலம்பியர் சிறந்ததோர் சாதனமாயிருந்தமையின் நமது நேச ஆண்டவர் அவரைத் தமது அப்போஸ்தலராகத் தெரிந்துகொண்டார் என்க. ஏனெனில் அவ்வுன்னத அப்போஸ்தலத்துவத்திற்குத் தேவையான முதிர்ந்த தாழ்ச்சி, தளராத ஊக்கம், சுயபரித்தியாகம், அணைகடந்த சிநேகம், உதாரகுணம் யாவும் அவரிடம் சிறந்து விளங்கின.

ஏழாம் அதிகாரம்

திரு இருதயத் தரிசனம்

"நான் பூமியிலே அக்கினியைப் போடவந்தேன் அது பற்றியெரிய வேண்டும் என்பதல்லாதே, வேறென்னத்தை விரும்புகிறேன்?" (அர்ச். லூக். 12 : 49)

பரிசுத்த பிதா 13-ம் சிங்கராயர் திரு இருதயப்பக்தியைப்பற்றி 1893-ம் வருஷம் ஜெப அப்போஸ்தல சபை அங்கத்தினர் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில், அவ்வுன்னத பக்தியினல் உண்டாகும் மேலான நன்மைகளைப்பற்றி வெகு அலங்காரமாயும் சுருக்கமாயும் பின்வருமாறு வருணித்தருளினர்.

"சேசுநாதர் அர்ச். மர்கரீத் மரியம்மாளுக்கு அருளிய காட்சிகள் நமக்குப் போதிப்பது என்ன? திரு இருதயப் பக்தியே சுயநலம் கருதும் தற்கால ஜனசமூகத்தின் சீர்கேடான நிலையை நிவிர்த்திக்க வல்லது. கர்வம் தலைக்கேறிய இந்நூற்றாண்டு தன்னைத்தானே தெய்வமாக்கிக் கொள்ளுகின்றது; சர்வாதி கர்த்தனை வேண்டாமெனத் தள்ளித் தன்னைத்தானே உயர்த்துகிறது; பிறரைப் புறக்கணித்துச் சர்வேசுரனுக்கும், திருச்சபைக்கும், இன்னும் ஒவ்வொருவனுக்கும் ஏற்பட்ட உரிமையை அழிக்கத் தேடுகின்றது. சகலமும் தனக்குத்தான் சொந்தம் என்று வீம்பு பேசி வம்பு பண்ணுகிறது. இத்தகைய அகங்காரிகள் கிறீஸ்துவ ஒற்றுமைக்கும் ஜனசமூகத்திற்கும் பங்



நமது ஆண்டவர் அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்குத்
திரு இருதயப் பக்தியைக் குறித்து நான்கு
முக்கிய காட்சிகள் கொடுத்தருளினர்.



"நீங்கள் மாயவலையில் அகப்பட்டு அலக்கழிக்கப்படுகிறீர்கள் என்று தயங்கவேண்டாம். இவைகள் சர்வேசுரனுடைய விசேஷ கிருபையால் நடைபெறுகின்றன..." என்று மார்கரீத் மரியம்மாளுக்குக் கூறினார்.

கம் வருவிக்கின்றனர். வேதத்தையும் நல்லொழுக்கத்தையும் தகர்க்கப்பார்க்கின்றனர்; அதிகாரத்தையும் விசுவாசத்தையும் எதிர்க்கின்றனர்; குடும்ப உரிமைகளை அபகரிக்கத் தேடுகின்றனர். இத்தகைய சீர்கேட்டினுல் அலைக்கழிக்கப்பட்டு வருந்தும் மானிடரைக் கைதூக்கிப் புத்துயிர் அளிப்பது சேசுவின் திரு இருதயமாம். அதினின்று புறப்படும் சிநேக அக்கினிச்சுவாலை அஞ்ஞான வாழ்வை மெஞ்ஞான வாழ்வாக மாற்றவல்லது. ஏனெனில்,

> "நான் பூமியிலே அக்கினியைப் போடவந்தேன்; அது பற்றியெரிய வேண்டும் என்பதல்லாதே, வேறென்னத்தை விரும்புகிறேன்?" (அர்ச். லூக். 12 : 49)

என்று திருவாய் மலர்ந்தருளினுர் திவ்விய சேசு. தத்தம் மூலாதாரத்தினுலேயே எப்பொருளும் நிலைநிற்கும். ஆகவே கிறீஸ்துவ ஜனசமூக முன்னேற்றத்திற்கு மூலாதாரம் அன்பொழுகும் திரு இருதயமாதலால், அதின் வழியாகவே நாம் உயர் நிலை அடையக்கூடும்" என்று கேட்போர் உள்ளம் உருகப் பிரசங்கித்தார்.

இக்காலத்திலும் தலைவிரிகோலமாய்த் தாண்டவமாடும் நாஸ்திகத்தை எழிர்த்து ஒழிக்க திரு இருதயப் பக்தியே சிறந்த சாதனம். நமது நூற்றுண்டின் சகலவித பிணிகளுக்கும் திரு இருதயப் பக்தியே கைகண்ட அவுழ்தம்.

இருதயம் சிநேகத்தின் அடையாளம் என்றும், அன்பின் இருப்பிடம் என்றும் யாவரும் பாவிப்பர். நமது உலக மீட்பர் திவ்விய சேசு தேவனும் மனுஷனுமானவர். ஆகையால் அவருடைய அதி பரிசுத்த அங்கமெல்லாம் நமது ஆராதனைக்குரியவைகள். அவர் மனுஷனுகியமட்

டும் நமக்கிருப்பதுபோலவே அவருக்கும் ஓர் இருதய முண்டு. தேவ சிநேகத்தால் பற்றியெரியும் தூய இருதயம் அது; மனிதர் ஈடேற்றமடைய கடைசித் துளிபரியந்தம் இரத்தத்தைச் சிந்திய அணைகடந்த அன்புள்ள இருதயம். இவ்விருதயம் இரண்டாம் ஆளாகிய சுதனுகிய சர்வேசுரனுடையது என்பதால் அதை நாம் அன்புடன் ஆராதிக்கக் கடமைப்பட்டிருக்கிரும்.

இவ்வுன்னத உண்மைகளை நாம் தெளிவுற அறிவதற்கு முக்கியமாய் அர்ச். மர்கரீத்மரியம்மாளும் அவளுடன்கூட திரு இருதயப்பக்தியைப் பரம்பச்செய்த முத். தெலா கொலம்பியர் சுவாமியவர்களும் காரணமாம். அர்ச். மர்கரீத் மரியம்மாள் பிரான்சு தேசத்தில் பாரேல மோனியாவிலிருந்த மினவுதல் சபைக் கன்னியர் மடத்திலுட்பட்டுத் தன்னை முழுவதும் தனது நேசப் பத்தாவாகிய திவ்விய சேசுவுக்கு ஒப்படைத்துப் புண்ணிய சாங்கோபாங்கத்தில் வெகு சுறுசுறுப்புடன் நடந்தனள். சேசுவின்மேல் அவள் கொண்ட பாசம் அவரது சிலுவையை அதிகமாய் நேசிக்கத் தூண்டியது. தாழ்ச்சி, கீழ்ப்படிதல், பொறுமை, ஒறுத்தல் முயற்சிகள் இவை போன்ற புண்ணியங்களில் ஓங்கி வளர்ந்தாள். சபை ஒழுங்குகளை அநுசரிப்பதில் அதிக பிரமாணிக்கமுள்ளவள். இப்பேர்க்கொத்த சற்குணங்கள் பெற்றக் கன்னிகைக்கே சேசுவின் திரு இருதயம் தமது விலையேறப்பட்டப் பொக்கிஷங்களைப் பேரன்புடன் திறந்து காண்பித்தார். அவள் பெற்ற விசேஷ கிருபைகளுள் தலை சிறந்து விளங்கினவை திரு இருதயப் பக்தியைப்பற்றி அவர் அவளுக்கு அளித்தருளிய விசேஷ காட்சிகளே.

நமது ஆண்டவர் அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்குத் திரு இருதயப் பக்தியைக்குறித்து நான்கு முக்கிய காட்சிகள் கொடுத்தருளினர். 1673-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ம் தேதி முதன் முதல் திரு இருதய ஆண்டவர் தமது இருதய அந்தரங்கங்களை அவளுக்கு வெளியிட்டார். திவ்விய நற்கருணை ஸ்தாபகமாயிருக்கும் வேளை அவள் வெகு பக்தியுருக்கத்துடன் ஜெபித்துக்கொண்டிருக்கையில் திரு இருதயநாதர் அவளுக்குத் தோன்றினர். தமது திரு இருதயத்தைத் திறந்து காண்பித்து, அவர் அவளை நோக்கி, "இதோ மனிதரை அத்தியந்த விதமாய் சிநேகித்த இருதயம்! மானிடர்மீதும் அதிலிருந்து நேசம் பொங்குகிறது. அடக்கவொண்ணு அக்கினிப் பொரிகள் கிளம்புகின்றன. எனது அன்பின் நெருப்பை எப்பக்கமும் மூட்டவேண்டியவள் நீ. நான் உனக்குக் காண்பிக்கப்போகும் விலையேறப்பட்டப் பொக்கிஷங்களை யாவரும் அறியும்படி செய்வது உனது கடமை. அவர்களுடைய ஆத்துமங்கள் கெட்டு நாசமாகாமல் ஈடேற்றமடைவதற்கும், பரிசுத்ததனத்தில் வளர்வதற்கும் தேவையான இஷ்டப்பிரசாத நன்கொடைகள் எனது இருதயத்திலிருந்து பெற்றுக்கொள்வார்கள். நீ இவ்வுன்னத அலுவலுக்குத் தகுதியற்றவளாயிருப்பினும் நான் உன்னைத் தெரிந்துகொண்டேன். ஆகையால் என்னாலேயே சகலமும் நிறைவேறப்போகிறதென்று உனக்குத் தெளிவாகும்......இனிமேல் உனது இருதயம் சிநேக காந்திவிட்டெரியும்...... நிந்தை அவமானங்களும் துன்பங்களும் வந்து குவியும்.... உனது இருதயத்தில் ஆராத்துயரம் அநுபவிப்பாய். இதுவரை நீ உன்னை என்னுடைய அடியாள் எனப்பாவித்து

வந்தாய், இனிமேல் உன்னை என்னுடைய இருதயத்திற்கு மிகவும் உகந்த சிநேகிதியென்று கருதுவாயாக" என்று திவ்விய சேசு திருவாய் மலர்ந்தருளினர்.

1674-ம் வருஷத் துவக்கத்தில் அர்ச். மர்கரீத் மரியம்மாள் திரு இருதயப் பக்தியைப்பற்றிய இரண்டாம் தரிசனை பெற்றனள். இம்முறை சேசுவின் திவ்விய இருதயம் சுவாலைவிட்டெழுவதுபோல் தோன்றியது. அது ஆயிரம் சூரியன்களைவிட பதின்மடங்கு அலங்காரமாய்ப் பிரகாசித்தது. அதின் ஓர் பக்கம் காயத்தழும்பும், சூழ முட்களும், உச்சியில் ஓர் சிலுவையும் தோன்றின. இவை யாவும் சேசுநாதர் மனுஷவதாரமான க்ஷணமுதல் மரண பரியந்தம் அநுபவித்த நிந்தை அவமானங்கள், வறுமை, சஞ்சலம், புறக்கணிப்பு ஆகிய சகல துயரங்களையும் குறிப்பிட்டன. மனிதரை அணைகடந்த விதமாய்ச் சிநேகித்த அவர் சகலரையும் பிசாசின் மாயதந்திரங்களிலிருந்து விடுவிக்க அவர் கொண்ட தீராத பேராவலைத் திரும்பவும் அவளுக்கு அறிவித்தார். அவர் திரு இருதயத்தை ஆராதிப்பவர்க்குச் சகலவித வரப்பிரசாதங்களையும் சம்பூரணமாய் அளிப்பதாகவும் வாக்களித்தார்.

அதே வருஷம் ஜூன் மாதம் மூன்றும் முறையாகச் சேசுவின் திரு இருதயம் அவளுக்குத் தோன்றினர். அதிக மகிமைப் பிரதாபத்துடன் அவரின் ஐந்து திருக்காயங்களும் பிரகாசம் பொருந்திய பல சூரியன்களைப் போல ஜெக ஜோதியாய்த் துலங்கின. திரு இருதயத்திலிருந்து பிரகாசமான அக்கினிச் சுவாலை கிளம்பியது. நமது ஆண்டவர் அவளைநோக்கி, "மனிதரை அணைகடந்த விதமாய் நேசித்த இருதயம் இது. எனது அன்பைக்

காண்பிக்க அவர்களுக்கு நான் செய்த நன்மை உபகாரங் களை அளவிடமுடியுமோ? ஆனால் நானோ அவர்களிட மிருந்து பெரும்பாலும் நன்றிகெட்டதனமே பெறுகி றேன். கல்லினும் கடின மனதுடையராயிருக்கின்றனர். மகளே! நீயாகிலும் எனக்குச் சற்று ஆறுதல் வருவிக்க மாட்டாயா?.......உன்னால் கூடுமானவரையில் அடிக்கடி திவ்விய நன்மை வாங்கி மனிதரின் நன்றிகெட்டதனத் திற்குப் பரிகாரமாக ஒப்புக்கொடு. முக்கியமாய் மாதத் தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் பரிகார நன்மை வாங்கி வருவாயாக. வியாழக்கிழமை இரவு நடுச்சாமம் நான் பூங் காவனத்தில் அநுபவித்த ஆராத்துயரை நீயும் கண்டுண ரும்படி செய்வேன். அதினால் உனக்குண்டாகும் மனச் சஞ்சலம் சாவைவிட அதிகக்கடினமாய்த் தோன்றும்...... பாவிகளுக்காக இரந்து மன்றாடு......எது காரியத்திலும் கீழ்ப்படிதலுக்கு விரோதமாய் நடக்காதே. ஏனெனில் நீ பெரியோர்க்குப் பணிந்து நடந்தால் உனக்குப் பசாசு ஒரு தீங்கும் இழைக்கயியலாது" என இத்தருணம் திரு இரு தயப் பக்தியைப்பற்றி அதிக விபரமாய்த் தெரிவித்தார்.

இதுவரை அர்ச். மர்கரீத் மரியம்மாள் கண்ட காட்சி களையும் சொன்ன வார்த்தைகளையும் நம்புவார் எவருமில்லை. அவள் பரவசத்திலிருப்பதைக் கண்ணுற்றும் பலர் பலவித மாய் அவளைப்பற்றி விபரீதமான எண்ணங்கள் கொண்ட னர். சிலர் அவளுக்குத் தோன்றிய காட்சிகளுக்குக் கபட தந்திரம் நிறைந்த பசாசுதான் காரணம் என்று கூறினர். அல்ல, அவள் மனோபாவனையால் மயக்கமுற்றுப் பிதற்று கிறாள் என்றுரைத்தனர் வேறு சிலர்! இவை யாவும் அவ ளுடைய கள்ள ஞானத்தின் கோலம் என்று பரிகசித்தனர்

மற்ருேர். மடத்துச் சிரேஷ்ட தாயாரும், குருக்களும் கூட இந்த அர்ச்சியசிஷ்டவளின் உண்மை நிலையைக் கண்டு பிடிக்கக்கூடவில்லை. ஆகையால் அவள் மனமுடைந்து தைரியமிழந்து, ஒரு பக்கம் திரு இருதயநாதரின் பாசம் இழுக்க, மறுபக்கம் அவளைப் பிறர் நம்பாது ஏளனம் செய்ய, அவள் இருதலைக்கொள்ளி எறும்புபோல் பரிதபித் தனள். அத்தருணம் திரு இருதயநாதர் அவளுக்குத் தோன்றி, “மகளே, பயந்து கலங்காதே, நான் எனது உத் தம ஊழியர்களில் ஒருவரை உனக்கு வழிகாட்டியாக அனுப்புவேன். அவரிடம் எல்லாம் திறந்து தெளிவுடன் எடுத்துரை ” என்று பேரன்புடன் கூறி அவளைத் தேற்றி ஞர்.

இவ்விதம் நமது ஆண்டவர்தாமே குறிப்பிட்டுச் சொன்ன பரிசுத்த குருவானவர் சங். குளோத் தெலாக் கொலம்பியரேயாவர். அவர் தமது மூன்ரும் வருஷ நவ சன்னியாசத்தை முடித்தபிறகு 1675-ம் வருஷம் பெப்ரு வரி மாதம் 2-ம் தேதி சேசுசபை நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தார். அதன் பின்னர் பாரேலமோனியால் என் னும் பட்டணத்திலுள்ள சேசுசபை மடத்திற்குச் சிரேஷ்ட ராக நியமிக்கப்பட்டார். அதினிமித்தம் அர்ச். மார்கரீத் மரியம்மாளிருந்த மினவுதல் சபை மடத்தாருக்கு ஆத் தும குருவாகவுமிருக்க நேரிட்டது.

அவர் தமது பதவியை ஏற்றுக்கொண்ட சில தினங் களுக்குப் பின்பு பெப்ருவரி மாதம் மினவுதல் சபைக் கன் னியர் மடத்திற்கு முதல் தடவையாகச் சென்ருர். அத் தருணம் கனம் சிரேஷ்ட தாயார், சுவாமி அவர்கட்கு யாவ ரையும் அறிமுகப்படுத்தி வைக்குமாறு எல்லாக் கன்னி

யரையும் அவர்முன் அழைத்தார்கள். மார்கரீத் சகோதரி அங்கு சென்றதும், "நான் உனக்கு அனுப்புவதாக வாக்களித்த உத்தமர் இவரே!" என்று அவள் உள்ளத்தில் தெளிவாய் ஓர் ஒலி தொனித்தது. பின்னும் ஓர் நாள் சுவாமி அவர்கள் மடத்தில் பிரசங்கம் செய்கையில் அவர்களுள் ஓர் கன்னிகை விசேஷ மேரை மரியாதை, கவனம், பக்தி முதலிய நற்குணங்கள் படைத்தவளாய்க் காணப்பட்டதை அவர் கவனித்தார். இதைப்பற்றி அவர் சிரேஷ்ட தாயாருடன் கலந்துபேசி அந்த சகோதரியைப் பற்றி விசாரித்தபோது, அவர்கள் அதற்கு மறுமொழியாக, "அதுதான் சகோதரி மார்கரீத் மரி; மிகவும் புண்ணியவதி" என்றூர்கள். அப்போது சங். தெலா கொலம்பியர், "அவள் சேசுநாதருக்கு அதிக உகந்த உத்தம பத்தினி" என்று கூறினர். என்ன ஆச்சரியம்! இன்னும் ஒரு முறையாகிலும் அவளோடு பேசுமுன்னதாகவே சகலமும் அறிந்தவர்போல் உரைத்தார். சங். சிரேஷ்ட தாயாரும் மார்கரீத் சகோதரிக்குத் திரு இருதயம் வாக்களித்த ஆத்தும குரு அவர்தான் என்று சந்தேகமற உணர்ந்துகொண்டார்கள்.

இன்னெருநாள் சங். தெலா கொலம்பியர் கன்னியர் மடத்திற்குப் பாவசங்கீர்த்தனம் கொடுக்கப் போனபோது அர்ச்சியசிஷ்டவளும் அவரை அணுகினள். அப்போது நடந்ததை அவளே விபரித்திருக்கின்றனள்: "இவரே சேசுவின் திரு இருதயம் எனக்கு வாக்களித்த உண்மை வழிகாட்டி என்று உணரலானேன். ஏனெனில் அவர் இதற்குமுன் என்னை அறியாதிருந்தும் என்னேடு தாராளமாய்ப் பேசினர். என்னிடம் நடந்தேறிய அதிசய சம்ப

வங்களைத் தெரிந்தவர்போல் அவைகளைப்பற்றி என்னி டம் பேசத்தொடங்கினார். நானோ பயந்து கலங்கி முழு வதும் திறந்து பேசவில்லை. நான் வெகுநேரம் அவ ரோடு பாவசங்கீர்த்தனம் செய்துகொண்டிருப்பதினிமித் தம் மற்றவர்களுக்கு அசௌகரியம் ஏற்படலாம் என்று அவர் அறிந்து என்னைப்பார்த்து, பிரியமானால் வேறோர் சமயம் தம்முடன் சாவகாசமாய்ப் பேசலாம் என்றார். நானும் அப்படியே செய்வதாகக் கூறிவிட்டு எழுந்து வந் தேன்."

மறுமுறை அவர் அங்கு செல்வதற்குமுன்னர் அர்ச். மர்கரீத் மரி சகோதரி தன்னுடைய ஆத்தும அந்தரங்க இரகசியங்களையெல்லாம் சுவாமி அவர்களிடம் விஸ்தார மாய் எடுத்துரைக்கப் போவதாக சிரேஷ்ட தாயாரிடம் தெரிவித்தாள். மேலும் சங். தெலா கொலம்பியரின் பறந்த ஞானம், புண்ணிய உயர்வு, நுண்ணிய அறிவு, ஆழ்ந்த நிதானம், இன்னும் பல நற்குணங்களை அவள் அறியவந்ததும் அவர்மீதுள்ள சங்கை வணக்கம், விசுவா சம், நம்பிக்கை வெகுவாய் அதிகரித்தன.

சிரேஷ்ட தாயாருக்குத் தன் எண்ணத்தை வெளி யிட்டபின்னும் தனது இருதய இரகசியங்களை அவருக்கு வெளிப்படுத்த மனம் வரவில்லை; முதன் முதல் சுவாமி அவர்களிடம் இவ்வெறுப்பைப்பற்றியே கூறினள். அதற்கு அவர், "நீங்கள் அதை ஆண்டவருக்குப் பரித் தியாக முயற்சியாக ஒப்புக்கொடுங்கள். இவ்விதம் நான் உங்களுக்குக் கற்பிக்கிறது எனக்குச் சந்தோஷத்தை விளைவிக்கிறது" என்றார். இதைச் செவியுற்றதும் அவ ளது அருவருப்பும் சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்

தது ; அவரிடம் சகலமும் ஆதியோடந்தமாய் வெளியிட்டாள். அவளது களங்கமற்ற மனதும், ஆழ்ந்த தாழ்ச்சி, மெய்யான கீழ்ப்படிதல், கடின ஒறுத்தல்கள், ஆண்டவர் அவள்மீது பொழிந்தருளிய விசேஷ வரப்பிரசாதங்கள், ஆகிய இவை யாவும் அவளுடைய ஆத்துமத்தின் நிலைமையைத் தெளிவாய் அவருக்கு உணர்த்தின.

இதுமுதல் தெலா கொலம்பியர் அவளுக்கு வேண்டிய உதவிபுரியத் தீர்மானித்தார். நமது ஆண்டவர் அவளுக்கு அருளிய காட்சிகளைக் கவனமாய் ஆராய்ந்தார் ; அவளது புண்ணிய நிலை உண்மையும் உறுதியுள்ளதாயுமிருக்கிறதா என்று அறிய அவளைக் கண்டிப்பாய் நடத்தினர். விசேஷமாய் அவளிடம் கீழ்ப்படிதல் பழுதின்றி விளங்குகின்றதா வென்பதை நன்கு பரிசோதித்தார். அக்கருத்திற்காக ஜெபித்தார், தபமுயற்சிகள் புரிந்தார், ஆண்டவரின் தெளிந்த ஞானம் பெற அவரை இரந்து மன்றாடினர். கடைசியாக மெய்யாகவே அர்ச். மர்கரீத் மரியம்மாளைச் சேசுவின் திரு இருதயம் ஓர் உன்னத அலுவலுக்காகத் தெரிந்துகொண்டார் என்பதையும், அக்காரணம்பற்றியே அற்புதக் காட்சிகளையும் அவளுக்கு அருளச் சித்தமானர் என்பதையும் சந்தேகமற உணர்ந்தார்.

ஆகையால் அவளைச் சந்தித்த ஓர் தினம், அவர் அவளைப்பார்த்து, “நீங்கள் பேயின் வஞ்சக தந்திரத்துக்குட்பட்டு அலைக்கழிக்கப்படுகிறீர்கள் என்று தயங்கவேண்டாம். நீங்கள் காணும் காட்சிகள் சர்வேசுரனது விசேஷ கிருபையாலேயே நடைபெறுகின்றன வென்று திடங்கொள்ளுங்கள். இனிமேல் நமது ஆண்டவர் கட்டளைப்படி நடப்பது உங்களது கண்டிப்பான கடமை.....நீங்கள் செல்ல

வேண்டிய பாதை கல்லும் முள்ளும் நிறைந்த சிலுவைப் பாதை. ஆனால் மனதைரியத்துடன் ஒன்றுக்கும் கலங்காமல் அவ்வழியே செல்லுங்கள். உங்களை அழைத்துச் செல்லும் திவ்விய சேசுவுக்கு இடறல் செய்யவேண்டாம். உங்களை முழுவதும் அவர் கையிலேயே விட்டுவிடவும். அவ்விதமாய் அவர் கோரிய கருமத்தை உங்களைக்கொண்டு செய்துமுடிப்பார். நீங்கள் கீழ்ப்படிவதில் தவறுதிருக்கும்வரை ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை" என்று வெகு ஞானமாயும் தைரியமாயும் அவர் மொழிந்தார்.

மேலும் அர்ச். மர்கரீத்மரி உத்தம புண்ணிய சாங்கோபாங்க நெறியைக் கைப்பற்றித் தாழ்ச்சியும், கஷ்ட சஞ்சலமும், புறக்கணிப்பும் நிறைந்த புண்ணிய பாதையில் செல்கின்றனள் என்றும், ஆகையால் கபட தந்திரமுள்ள நரக அலகையால் அவளுக்கு எதுவும்செய்ய இயலாதென்றும் சிரேஷ்ட தாயாரிடத்தும் உறுதியாய்க் கூறினர். ஆனால் அம்மடத்திலுள்ள மற்றக் கன்னியர் சங். தெலா கொலம்பியரின் வார்த்தைகளைப் பொருட்படுத்தாது, "மாயக்காரி ஏனையரை ஏமாற்றினதுபோல இவரையும் தந்திரமாய்த் தன் வசப்படுத்தி விட்டனள். இவரும் மனேபாவனையால் அலைக்கழிப்பட்டு மோசம் போகிறவர்போல்தானிருக்கிறது. ஓர் பேதையின் போக்கை உண்மையென்று கொள்வது அவருடைய கோழைத்தனத்திற்கு அத்தாட்சி" எனப் பலபேர் பலவாறு நமது உத்தம குருவானவரை இழிவாகப் பேசினர். அவரோ அக்கடுஞ் சொற்களைப் பொருட்படுத்தவுமில்லை; புண்ணியவதிக்கு உதவிபுரிவதை நிறுத்திவிடவுமில்லை. இதனால் அவரின் மனவலிமை எத்தன்மையதென்று தெளிவாகி

றது. நமதாண்டவரின் அதிமிகத் தோத்திரத்திற்காக ஆரம்பித்த எக்கருமத்தையும் ஒருபோதும் கைநெகிழ விடாத சற்குண வீரரல்லவா அவர்?

சமுத்திரத்தின் அடியில் விலை மதிக்கப்படாத முத்துக்கள் மறைந்து புதைந்து கிடக்கின்றன. அவைகளைக் கைப்பற்றி வெளியே கொண்டுவந்தால், அவைகளின் தூய பிரகாசம் மனிதர் மனதைக் கவரும், மன்னர்களின் கிரீடங்களிலும் வெகு அலங்காரத்துடன் ஜொலிக்கும். இம் மாதிரியே மினவுதல் சபைக் கன்னியர் மடத்தில் மறைந்திருந்த அதியுன்னத திரு இருதயப் பக்தியை உத்தம தாசரான சங். தெலா கொலம்பியர் பகிரங்கப்படுத்தும் சிறந்த கருவியானார். இம்மகத்தான அலுவலுக்கு சங். தெலா கொலம்பியரின் உதவி தேவை என்பதை உணர்ந்த அர்ச். மர்கரீத் மரியம்மாளுக்குத் திவ்விய சேசு ஓர் விசேஷ காட்சி அருளினார்.

இதைப்பற்றி அர்ச். மர்கரீத் மரியம்மாள் பின்வருமாறு விபரித்தெழுதியிருக்கிறாள்: "சங். கொலம்பியர் சுவாமி அவர்கள் ஓர் நாள் எங்கள் மடத்துக் கோவிலில் திவ்விய பலிப்பூசை நிறைவேற்றியபோது திரு இருதய ஆண்டவர் எங்கள் இருவர்மீதும் அரும் பெரும் வரப்பிரசாதங்களை அபரிமிதமாய்ப் பொழிந்தருளினார். நான் திவ்விய சற்பிரசாதம் அருந்த பீடத்தை யணுகையில் திவ்விய சேசு சிநேக அக்கினியால் பற்றியெறிந்த தமது திரு இருதயத்தைத் திறந்து காண்பித்தார். அவ்வேளை வேறு இரு இருதயங்கள் சிநேக பான்மையால் அத் திரு இருதயத்தோடு ஒன்றிக்கும் தருணத்திலிருந்ததைக் கண்ணுற்றேன். 'எனது நேச பாசத்தால் இம்மூன்று இருதயங்

களும் சதாகாலமும் ஒன்றித்து விளங்கும்' என்றதோர் சப்தமும் எனக்குக் கேட்கப்பட்டது. இவ்வன்னியோன் னிய பந்தனம் திரு இருதய மகிமை ஓங்கவும், அதின் திரவிய பொக்கிஷங்களைச் சுவாமி அவர்களுக்கு நான் வெளி யிடவும், அவர் அவைகளைப் பகிரங்கப்படுத்தவும், அதின் பலனை நாங்களிருவரும் விலையேறப்பெற்ற ஞானப்பலன் களைச் சகோதரன், சகோதரிபோல் சமமாய்ச் சுகித்து அனுபவிக்கவும் நமது ஆண்டவர் சித்தமாயிருந்ததாகவும் எனக்குத் தெரிவித்தார்......" இச்சுப செய்தியைத் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்தபோது அவள் நமது பரிசுத்த குருவானவருக்கு அறிவித்தனள்.

அர்ச்சியசிஷ்டவள் பலதடவைகளில் பல்வேறு தரி சனைகள் பெற்றபோதிலும் திரு இருதயப் பக்திக்கு அஸ்திவாரமான காட்சிகள் நான்கே என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அவைகளுள் மூன்றைப்பற்றி விபரித்தாயிற்று. கடைசிக் காட்சி 1675-ம் வருஷம் ஜூன் மாதத்தின் மத்தியில் நடைபெற்றது, அதாவது சங். தெலா கொலம்பியர் சுவாமியார் மடத்திற்கு ஆத்தும குருவாக வந்த சில மாதங்களுக்குப் பின்னரே.

சிநேகம் ததும்பி வழிந்தோடும் திரு இருதயத்தை அர்ச்சியசிஷ்டவளுக்குத் திவ்விய சேசு திறந்து காண் பித்து: "மனிதர்களை அத்தியந்தவிதமாய் நேசிக்கும் இத்திரு இருதயத்தை உற்று நோக்கு! அன்பினால் ஏவப் பட்டு நான் உங்களுக்காகச் செய்த நன்மை உபகாரங்கள் எத்தனை? என்னை முழுவதும் தகனப்பலியாக ஒப்புக் கொடுத்தேன். இதற்குக் கைம்மாறாக நான் பெறுவது பெரும்பாலும் நிந்தை அவமானமும் நன்றியறியாமையும்,

அசட்டைத்தனமும், தேவ துரோகங்களுமே! எனக்கு ஊழியம் செய்யத் தங்களைத்தானே கையளித்த உத்தமர் கள்கூட எனது நேசத்தைப் புறக்கணிக்கின்றனர், பாச மற்றவர்களாயும், அசமந்தமுள்ளவர்களாயு மிருக்கின் றனர். இதுதான் சகலத்தையும்விட அதிகமாய் என் இருதயத்தை உபாதிக்கின்றது. ஆகையால் தேவ நற்கரு ணைத் திருநாளின் எட்டாம் நாளுக்குப் பின்வரும் வெள் ளிக்கிழமையன்று திரு இருதயத் திருநாள் என்று ஓர் விசேஷ திருநாள் ஏற்படுத்தி, என் இருதயத்துக்கு நேரி டும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகத் திவ்விய நன்மை உட்கொள்ளவேண்டும். அன்று பகிரங்க பரிகார முயற்சிகள் நடைபெறவேண்டும். இவ்விதம் எனக்கு வணக்கம் புரிகிறவர்கள்மீதும், பிறரும் அவ்வாறு செய்யத் தூண்டுகிறவர்கள்மீதும் எனது அன்பின் வரப்பிரசாதங் களைக் குறைவின்றி பொழிந்தருளுவேன் என்று வாக்க ளிக்கிறேன்'' என்று திருவாய் மலர்ந்தருளினார் திவ்விய சேசு.

அப்போது அர்ச். மர்க்கரீத் மரியம்மாள் ஆண்ட வரை நோக்கி, "யாரைக்கொண்டு இம்மகத்தான காரியங் கள் செய்யத் தேடுகிறீர்?......" என்று தாழ்ச்சியோடு வினவ, "என்ன பேதைப் பிள்ளாய், பலவான்கள் நாண முற நான் பலவீனமானவைகளைத் தெரிந்துகொள்வேன் என்பதை நீ அறியாயோ? தாழ்ச்சியும், சாந்தமும் நிறைந் தவர்களிடமே எனது வல்லமை துலங்கும். ஏனெனில் அவர்களே தங்களால் ஆகப்போகிறது ஒன்றுமில்லை என்று முற்றிலும் ஒத்துக்கொள்வர்'' என்று நமது ஆண் டவர் மறுமொழி பகர்ந்தார். "அப்படியாயின் உமது திரு

வுளத்தை நிறைவேற்றவேண்டிய வகை எவ்விதம் என்று எனக்குக் காண்பித்தருளும்" என அர்ச்சியசிஷ்டவள் மன்றாட, திரு இருதயநாதர், "என்னுடைய உத்தம தாசரான சற்குரு தெலா கொலம்பியரையணுகி, இப்பக்தியை நிலைநாட்ட அவரால் இயன்றதெல்லாம் செய்து, எனது திரு இருதயத்தைச் சந்தோஷிப்பிக்க, என் பெயரால் அவரைக் கேட்டுக்கொள். இவ்வுன்னத அலுவலில் அவருக்குப் பற்பல இக்கட்டு இடைஞ்சல்கள் ஏற்படும். ஆனால் அதினிமித்தம் அவர் சிறிதேனும் மனந்தளரலாகாது. ஏனெனில் எவனொருவன் தன்பேரில் நம்பிக்கை வையாமல் என்மீது முழு நம்பிக்கையுள்ளவனாயிருக்கிறானோ அவன் மகா வல்லவனாவான் என்பதை அவர் அறிந்திருக்கட்டும்" என்று அவளுக்குக் கற்பித்தார்.

மார்கரீத் சகோதரி தனது சிரேஷ்ட தாயாருடைய அனுமதிபெற்று காலதாமதமின்றி திரு இருதயத் தாசருக்கு நமது ஆண்டவரின் விருப்பங்களை ஒன்றும் விடாமல் தெரிவித்தாள். அவர் அவைகளைப்பற்றிச் சாவதானமாய் ஆராயுமாறு சகலத்தையும் எழுதித் தரும்படி அவளைக் கேட்டுக்கொண்டார். இவ்வேளை அவர் அர்ச்சியசிஷ்டவளை முதன் முதல் கண்டபோது நமது ஆண்டவர் அவருக்கு அவளைப்பற்றியருளிய விசேஷ ஞான வெளிச்சங்களை நினைவுகூர்ந்தார். சில வாரங்களுக்கு முன்புதான் சேசுவின் திரு இருதயத்தோடு இவர் இருதயமும் அவளுடைய இருதயமும் சதாகாலமும் நேச ஐக்கியப்பட்டுப் போனதாக அவருக்கு அறிவிக்கப்பட்டது. மூன்றும் ஆண்டு நவசன்னியாசத்தில் முப்பது நாள் தியானம் செய்தபோது நமது ஆண்டவர் வெகு தயவாய் அவருக்கு அரு

ளிய அரும் பெரும் வரப்பிரசாதங்களும் நேச சேசுவின் மீது அவரிடம் பற்றியெரிந்த ஆசைப்பற்றுதலும் அவர் மனதிற்கு வந்தன. இதுபோக, மார்கரீத் சகோதரியின் உன்னத நடத்தையும், சுவாமி அவர்களின் ஆழ்ந்த சிந்தனையும் நிச்சயமான முடிவு ஒன்றே என்று அவருக்குத் தெளிவுறக் காண்பித்தது. ஆகவே அவர், "அற்பனுகிய என்னையும் அர்ச்சியசிஷ்டவளோடு கூடச்சேர்ந்து திரு இருதயப் பக்தியை நிலைநாட்டக் கிருபை நிறைந்த ஆண்டவர் தெரிந்துகொண்டார்" என்று முடிவு செய்தார். கடைசியாய் 1675-ம் வருஷம் ஜூன் மாதம் 21-ம் தேதி திவ்விய நற்கருணைத் திருநாளின் எட்டாம் நாளுக்கு அடுத்த வெள்ளிக்கிழமையன்று இவ்விரு புண்ணிய தாசரும் தங்களை முழுவதும் சேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்தனர். இதுவே முதன் முதல் சேசுவின் திரு இருதயத்திற்குப் பரிகாரமாகக் கொண்டாடப்பட்டத் திரு இருதயத் திருநாள். இருவரும் திவ்விய சேசுவின் நேச விருப்பத்தை நிறைவேற்ற எவ்வகைத் துன்ப துரிதங்கள் நேர்ந்தபோதிலும் அவைகளையெல்லாம் தாராள மனதுடன் ஏற்றுக்கொள்வதாகப் பிரதிக்கினை செய்தனர்.

இதுவரை நாம் விபரித்ததிலிருந்து சங். தெலா கொலம்பியரை நமது ஆண்டவர் திரு இருதயப் பக்தியை நிலைநாட்டத் தெரிந்துகொண்டார் என்று தெளிவாகிறது. ஆகையால் சங். தெலா கொலம்பியர் இப்புனித பக்தியை வளரச்செய்யும் சிறந்த சாதனங்களையும் தெளிவுற அறியலானர். திரு இருதயப் படங்கள், சுரூபங்களுக்குக் காண்பிக்கவேண்டிய வணக்கம், அடிக்கடி திவ்விய நன்மை உட்கொள்ளுதல், பரிகார நன்மை வாங்கி ஒப்புக்கொடுத்தல்,

மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் அனுசரிக்க வேண்டிய சுகிர்தமுயற்சிகள், திருமணித் தியானம் செய்தல் ஆகிய இவையாவும் அதிக விபரமாய் அர்ச்சியசிஷ்டவளிடமிருந்து கற்றுக்கொண்டார். அவருக்கு இன்னும் இவ்வுலகில் மீதியாக இருந்தது ஏழு வருஷங்களே! இச்சொற்பக் காலத்தில் பாரலேமோனியால், லண்டன்மாநகர், லயன்ஸ் பட்டணம், இன்னும் பற்பல இடங்களிலும் இப்பக்தியை ஸ்தாபிக்கத் தன்னாலியன்றவரை இடைவிடாது உழைத்தார்.

எட்டாம் அதிகாரம்

ஆத்தும இரட்சணிய அலுவல்

"எல்லாரையும் கரையேற்றும்படிக்கு எல்லாருக்கும் எல்லாமுமானேன்." (I கொரி. 9 : 22)

சங். தெலா கொலம்பியர் பாரலேமோனியால் பட்டணத்திலிருந்த பதினெட்டு மாதகாலமும் ஆத்துமங்களுக்குப் புரிந்த நன்மைகள் அனந்தம். அர்ச். மார்கரீத் மரியம்மாள் அவருடைய விசேஷ உதவியைப்பெற்றது உண்மையாயினும், இன்னும் வேறு அநேகரும் அவருடைய சலுகையை நாடி மிகுந்த ஞானப்பலன் அடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்நகரிலுள்ள அநேக பிரிவினைக்காரரை அவர் மனந்திருப்பியது அவரது ஆத்தும இரட்சணிய தாகத்திற்குச் சிறந்த சான்று. அவருடைய உருக்கம் நிறைந்த பிரசங்கங்களைக் கேட்டு மனமிளகி சத்தியமறையைத் தழுவியவர் அனந்தம். அவர் கல்விக் கேள்விகளிற் பெயர்பெற்றவரென்றும், புண்ணிய விரத்தர் என்றும், பிறரைச் சன்மார்க்கத்தில் நடப்பிக்க விசேஷ ஆற்றலுடையவரென்றும் அந்நகரவாசிகள் அனைவரும் அவரைப் பெரிதும் போற்றினர். தனவந்தரும், தரித்திரரும், கல்விமான்களும், பாமர ஜனங்களும் அவர் சலுகையைப் பெற்று ஆறுதலடைந்தனர். அவரிருந்த பட்டணத்திலும், சுற்றுப்புறங்களிலும் வெகு உற்சாகமுடன் ஞானோபதேசம் கற்றுக்

கொடுத்துவந்தார். அவருடைய முயற்சியின் பலனாக ஏழைகளுக்கு ஓர் தரும வைத்தியசாலை ஸ்தாபகமானது. அந்நகரின் ஆண்பிள்ளைகளுக்காக தேவமாதா சபை ஒன்று ஏற்படுத்தி, அவர்கள் நன்னெறியில் ஒழுக பக்திப் பற்றுதலுள்ள புத்திப் போதனைகள் அடிக்கடி செய்துவந் தார். அவர் லண்டன்மாநகர்க்குச் சென்ற பின்னரும் அச் சபையார் சன்மார்க்கத்தில் ஓங்கி வளர நேர்த்தியான புத்திமதிகள் அடங்கிய நீண்டதோர் கடிதம் அவர்களுக்கு எழுதியனுப்பினர்.

அதில் சில காரியங்களைமட்டும் இங்கு எடுத்துரைப் போம். "தேவதாயின் செல்வப் பிள்ளைகளாகிய நீங்கள் அநேகரை இரட்சணிய பாதைக்குக் கொண்டுவரவும், அவர்கள் உத்தம கிறீஸ்துவர்களாக நடக்கவும் வெகு ஊக்கமுடன் உழைக்கவேண்டும். அமலோற்பவிக்கு அவ மரியாதை வருவிக்கக்கூடியவைகளை அகற்றி உங்கள் சபை ஒழுங்குகளைப் பிரமாணிக்கமாய் அனுசரிக்க முயன்று வருவீர்களாக! சண்டை சச்சரவுகளை யொழித்து அநு தினம் திவ்விய நன்மை வாங்கும் சுகிர்த வழக்கத்தையும் கைக்கொள்வீர்களாக! வறியோர்க்கிரங்கி தான தருமங் கள் புரிய முன்வருவீர்களாக! குடும்பங்களில் சமாதான மும் சந்தோஷமும் நிலைத்துநிற்க உங்களாலியன்றமட்டும் முயற்சிப்பீர்களாக!" என்று அவர் எழுதிய சிறந்த புத்தி மதிகளை அச்சபையார் பொன்மொழிகளெனப் பாவித்து அதை அச்சிட்டு யாவருக்கும் வழங்கினர்.

சங். தெலா கொலம்பியர் சுவாமியார் ஆத்துமங்களை அறநெறி மார்க்கத்தில் நடப்பிப்பதில் கைதேர்ந்தவர் என்று பிரக்கியாதிபெற்றூர். அவருடைய யூகம் நிறைந்த



அவருடைய அமிர்த பிரசங்கத்தைக் கேட்டுச் சத்திய
மறையைத் தழுவியவர் அநேகர்.



முத். குளோத் தெலா கொலம்பியர் ஆத்துமங்களை அறநெறி
மார்க்கத்தில் நடப்பிப்பதில் கைதேர்ந்தவர்
என்று பிரக்கியாதிபெற்றார்.

போதனையும், தேவ சிநேகம் பற்றியெறிந்த வார்த்தைகளும் அநேகர் புண்ணிய சாங்கோபாங்கமென்னும் உன்னத சிகரத்தை நோக்கி ஏறிச்செல்ல காரணமாயின. சிற்சில சமயங்களில் சிலர் அவர் சொற்படி நடக்கப் பின்வாங்க நேரிடின் அவர் அதனால் அதைரியமடையாது இன்னும் அதிக உற்சாகமுடன் தான் கொண்ட கருமம் நிறைவேறுமளவும் அயராதுழைப்பார். ஆகவே கடைசியில் அவரது விடாமுயற்சியும் உற்சாக மொழியும் தேவ ஊழியத்தில் ஊக்கமற்றவர்களைத் தேவநேசப் பற்றுதலுள்ளவர்களாக மாற்றியது. உதாரணமாக, மரிய லியோனி என்றதோர் உயர்குல மாது தேவ அழைத்தலுக்குச் செவிசாய்க்க வெகுநாள்வரை தத்தளித்தனள். ஆனால் முடிவில் தன்னைத்தானே ஜெயித்து மினவுதல் சபைக் கன்னியர் மடத்திலுட்பட்டுப் பின்னர் ஓர் உத்தம கன்னியாஸ்திரியாக விளங்கியதற்கு நமது சுவாமி அவர்களே காரணம். சுருங்கச்சொல்லின் அவர் ஒவ்வொருவருடைய குண பேதங்களைத் தீர ஆராய்ந்து அவரவர் சக்திக்குத்தகுந்தவாறும், தேவ ஏவுதலுக் குகந்தவாறும், நடப்பிக்கத் திறமை பெற்றவர் என்பது தெளிவு.

அக்காலத்தில் அவரோடுகூட இருந்த ஓர் சேசு சபைக் குருவானவர் அவரைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்: "பாரலேமோனியாவிலிருந்த சேசுசபை மடத்துச் சிரேஷ்டர் ஆத்தும இரட்சணிய ஆவல் நிறைந்தவர்; இளவயதுள்ள உத்தம விரத்தர்; கம்பீரத் தோற்றமுள்ளவர்; வெகு ஞானம் நிறைந்தவர்; பிறர் மனதை எளிதில் கவரத்தக்க நடை யுடை பாவனை யுடையவர்; எவ்வகுப்பினரையும் தம் வசப்படுத்தும் ஆற்றலுள்ளவர்.

மேட்டிமை சிறிதுமின்றி சர்வ சாதாரணமாய் யாவருட னும் பேசிப் புழங்குபவர். செய்வன திருந்தச்செய் என்ற நோக்கமுள்ளவராதலின் அற்பக் காரியம் என்று எதையும் அலட்சியம் செய்யாது, தகுந்த கவனத்துடன் அதையும் செய்து முடிப்பார். அவர் நமதாண்டவரோடு அன்னி யோன்னிய ஐக்கியமாக ஜீவித்து வந்தார். அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பதற்கிணங்க, அவரது தூய வத னம் பிரகாசித்தது. எங்கேயிருந்தாலும் சரி, எவருடன் பழகிவந்தாலும் சரி, தன்னயம் பாராட்டல் என்ற இழி குணம் அவரிடம் சிறிதளவுமில்லை. அவரையறிந்த யாவ ரும் இவர் உண்மையாகவே ஓர் பரிசுத்த குருவானவர் என்று ஒருவாய்ப்பட புகழ்ந்தனர்."

"எல்லாரையும் கரையேற்றும்படிக்கு எல்லாருக்கும் எல்லாமுமானேன்" (I கொரி. 9 : 22)

என்று அர்ச். சின்னப்பர் ஆத்தும இரட்சணிய ஆவலால் தூண்டப்பட்டுரைத்ததை சங். தெலா கொலம்பியர் சுவாமி யார் தன்னுடையதாக்கிக் கொள்ளக்கூடும்.

சற்குரு தெலா கொலம்பியர் இவ்வாறு பாரலேமோ னியாவில் அயராதுழைத்து வருகையில், பெரியோர் உத் தாரப்படி அவர் இங்கிலாந்திலுள்ள கத்தோலிக் இராஜ குடும்பத்திற்கு ஆத்தும குருவாக நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து தேசத்து அரசனின் இளைய சகோதரன், யார்க் கோமகன் ஜேம்ஸ் என்பாரின் பாரியாளுக்கு ஆத் தும குருவாயிருக்க நேர்ந்தது. இவருக்கு முன்னர் அப் பதவியை வகித்த குருவானவர்மீது பதிதர் அபாண்டங் கள் சாற்றி நாட்டைவிட்டு விரட்டினர். கஷ்டங்கள்

நிறைந்த இவ்வுயரிய அலுவலைத் தகுந்தவிதமாய்ப் பார்க்கக்கூடியவர் சங். தெலா கொலம்பியர் சுவாமியார் என்பது சிரேஷ்டரின் துணிபு. ஏனெனில் அதற்கு அவசியமான குணாதிசயங்கள் யாவும் குறைவின்றி அவரிடம் ஒருங்கே விளங்கின. இராச மாளிகையிலிருந்தாலும் உத்தம சந்நியாசியாய் ஒழுகக்கூடியவர்; எவர் குணத்திற்கும் இசைந்து நடக்கும் திறமை பூண்டவர்; தனது காரியங்களை மட்டும் மரியாதையுடன் கவனித்துக்கொண்டு ஒருவர் முகத்தையும் முறியாமல் சாதுரியமாய் நடந்துகொள்ளும் யூகமுடையவர். ஆகையால் 1676-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் சங். சிரேஷ்டர் சுவாமியார் நமது பரிசுத்த குருவானவரை லண்டன்மாநகருக்குப் புறப்படும்படி கட்டளையிட்டார்.

மனித சுபாவத்திற்கு இத்தகைய கட்டளை கடினமாகத் தோன்றியபோதிலும் சகலத்திலும் தன்னை ஒறுத்து நடத்த சங். தெலா கொலம்பியர் சுவாமியார் மறுவார்த்தையின்றி கீழ்ப்படியத் தீவரித்தார். பாரலேமோனியாவை விட்டுப் பிரிவதால் அவருக்கு வருத்தம் இராமலில்லை. அங்கேயல்லவா திரு இருதயப் பக்தியை உலகிற்கு அறிவித்த அற்புத காட்சிகள் நடைபெற்றன? அங்கேயல்லவா அவ்வுன்னத பக்தியை நிலைநாட்ட அவரோடு ஒத்துழைக்கவேண்டிய அர்ச்சியசிஷ்டவள் ஜீவித்தாள்? இவர் அவ்விடத்தை விட்டுப் பிரியப்போகிறார் என்று கேள்வியுற்ற அந்நகரவாசிகள் பெரிதும் வருந்துவாராயினர். ஆனால் யாவரையும்விட அர்ச். மர்கரீத் மரியம்மாளே அதிகம் கலங்கினாள்; தனக்கு ஊக்கமளித்து உற்சாகப்படுத்திவந்த திரு இருதயத்தாசர் போய்விட்டால் தனது கதி என்னவாகுமோவென்று ஏங்கினாள்.

அத்தருணம் நமது திவ்விய கர்த்தர் அவளுக்குத்தோன்றி, "நான் உனக்குப் போதாதோ? ஆதியும் அந்தமும் நானல்லவா?" என்று பகர்ந்து அவளைத் தேற்றினர்.

அவ்வருஷம் (1676) அக்டோபர் மாதம் சங். தெலா கொலம்பியர் லண்டன்மாநகரையடைந்தார். யார்க்கோமகன் பாரியாள் வசித்த மாளிகையில் அவருக்கென்று ஓர் அறை சித்தம் பண்ணப்பட்டிருந்தது. அங்கே யாதொரு டம்பமின்றி சாமான்ய சேசுசபைக் குருவானவரைப்போல் வாழ்ந்து வந்தார். தன் காரியம் உண்டு, தன் கடமையுண்டு என்று இருந்தாரேயன்றி இராஜ அவைக்களத்தில் நடந்த உல்லாச ஆடல் பாடல்களிலும், விநோத வேடிக்கைகளிலும் சிறிதும் கலந்துகொள்ளவில்லை.

லண்டன்மாநகர் பற்பல சிற்பாலங்காரங்கள் நிறைந்த இடம்; அழகிய பூந்தோட்டங்கள், சிறப்பும் வனப்பும் பொருந்திய சிற்பங்கள், சிலைகள் பற்பல இடங்களில் காணலாம். இவைகளை ஒருநாளென்கிலும் நமது புண்ணிய தபோதனர் போய்ப் பார்த்தவரல்ல. ஆனால் வியாதியஸ்தரைச் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய உதவி சகாயங்கள் செய்யத் தவறுவதில்லை. யாவரோடும் ஞானக்காரியங்களைப்பற்றி மாத்திரம் சம்பாஷிப்பார். சுருங்கச் சொல்லின், திரு இருதயத்திற்கு முற்றிலும் உகந்த ஊழியனாகவும், பிரபல்லியம் பொருந்திய பரோபகாரியாகவும் விளங்கினர். அவருக்கு உபகாரச் சம்பளமாக அளிக்கப்பட்ட இருநூறு பவுனில் சொற்பத் தொகையை மட்டும் தமது சொந்தச் செலவுக்கு வைத்துக்கொண்டு மீதியைத் தாராளமாய்த் தரித்திரருக்குக் கொடுத்து உதவினர்.

இங்ஙனம் எப்போதும் அவர் ஒழுகிவருவதாகப் புதிய தோர் வார்த்தைப்பாடும் கொடுத்தார்.

தன்னை ஓயாது ஒறுத்தல் முயற்சியால் ஒடுக்கி வந்தார். புது இடத்தில் ஏற்பட்ட பற்பல அசௌகரியங்களை அவர் வெகு பொறுமையுடன் சகித்து வந்ததோடு பல்வேறு தபசு முயற்சிகளும் இடைவிடாது புரிந்து வந்தார். தரையில் நித்திரை செய்வார்; குளிரின் அகோர வேதனையைக் குறைக்க அக்கினி மூட்டுவதில்லை. அவர் அரண்மனையில் வசித்தபோதிலும், ஓர் வனவாசியைப்போல் ஜீவித்தார் என்று அவரே கூறியுள்ளார்.

> " ஆடையும் வெளி ஆசாரமும் உண்மைச் சந்நியாசி ஆக்குவதில்லை. ஆனல் நன்னடத்தையும் ஆசாபாசங்களையடக்கியாளுவதுமே ஒருவனை உள்ளத் துறவியாக்க வல்லது " (கிறீஸ். அநு. 1 : 17)

என்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தில் கூறியிருப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அதின்படி ஒழுகிவந்தார் நமது சற்குரு.

அவர் லண்டன்மாநகரில் ஞான அலுவல் புரிந்தகாலை அர்ச். மர்கரீத் மரியம்மாள் பல சமயங்களில் திரு இருதய நாதரின் விருப்பங்களை அவருக்குத் தெரிவித்து வந்தாள். அவைகளுள் சிலவற்றைமட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

" சங். தெலா கொலம்பியர் சுவாமியார் அநேக ஆத்துமங்களை என்னிடம் கொண்டு சேர்ப்பிக்கத் தன்னுலான பிரையாசைப்படவேண்டும். இக்காரணத்தால் பசாசு எப்போதும் அவரது ஞான அலுவல்களுக்குப் பற்பல இடையூறுகளை விளைவிக்கும். எனது தாசர்கள்கூட அவர்

பிறரை மனந்திருப்பக் கையாளும் சாதனங்களைப்பற்றிக் குறை கூறக்கூடும். சஞ்சலம் நிறைந்த இத்தருணங்களில் என்னுடைய நன்மைத்தனமே அவருக்குத் தவறாத ஊன்றுகோலாய் விளங்கும். என்பேரில் அவர் பூரண நம்பிக்கையுடையவராயிருக்க வேண்டும். பாவிகள்மீது மகா இரக்கமும் தயாளமுமுள்ளவராய்த் துலங்கவேண்டும். விசேஷ தேவ ஏவுதலின்றி கண்டிப்பான முறைகளைக் கையாடலாகாது. அவர் ஆத்துமம் எனக்கு மிகவும் உகந்தது. அவர் என்னுடைய விசேஷ பாதுகாப்பிலிருப்பார்.''

அவர் அரண்மனையில் வசித்துவந்த போதிலும் ஓர் சந்நியாச மடத்தில் வாழ்வதுபோல தமது சபை ஒழுங்குகள் யாவையும் வெகு கவனமாய் அநுசரித்து வந்தார். இவ்வுண்மை அவர் வார்த்தைகளிலிருந்தே நன்கு புலனாகும்: "சபை ஒழுங்குகளே சகல நன்மைகளுக்கும் ஊற்று; ஒழுங்கை நுணுநுணுக்கமாய் அநுசரித்து, பழுதின்றி பாதுகாப்பதே என் உன்னத பொக்கிஷம். ஒருவர் உதவியுமின்றி நான் ஓர் வனாந்தரத்தில் வசிப்பினும், ஆண்டவரே, என் ஒழுங்குகளைமட்டும் அநுசரிக்க தேவரீர் கிருபை செய்வீராகில் அதொன்றே எனக்குப் போதுமானது. ஓ! என்னை உம்மோடு இறுகக் கட்டிய பரிசுத்த பந்தனமே! உம்மைக் கண்டுணர்ந்து நேசித்து அதின்படி நடக்கிறவனே பாக்கியசாலி'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தான் சேசுவின் திரு இருதயப் பக்தர் என்பதை ஓர்நாளாகிலும் மறந்தவரல்ல. தன்னிடம் பற்றியெரிந்த திரு இருதயப் பக்தியை மற்றவர்களிடமும் மூட்டிவிட ஆவலுற்றார். "ஓ சேசுவின் திரு இருதயமே! சுயநலம்

முழுவதும் நான் அகற்றி நடக்கக் கற்பித்தருளும். உமது உன்னத மார்க்கத்தைப் பின்பற்றியொழுக இதுவே சாதனம்......நான் புண்ணியத்தில் வளர்வேனுனல் என்னுடைய புனித ஜீவியத்தின் மகிமை உம்முடையதாகும். இவ்வுண்மை இப்போது மென்மேலும் எனக்குத் தெளிவாகிறது. உமது கீர்த்தி ஓங்கிப் பெருகவே நான் உத்தமனுக விரும்புகிறேன்" என்று தமது உள்ளுணர்ச்சிகளை வெளியிட்டார்.

1677-ம் வருஷம் பெப்ரவரி மாதம் சங். தெலா கொலம்பியர் எட்டுநாள் தியானம் செய்தார். அதனுல் அவர் அடைந்த பலன் வெகு விசேஷமானதால் அவர் பதிவுசெய்துவைத்த விஷயங்களில் சிலவற்றைச் சுருக்கமாக இங்கெடுத்துக் கூறுவோம்: அவரை வெகுகாலமாய் அதிகம் அலைக்கழித்த வீண் பெருமையென்கிற தந்திர சோதனையின் வன்மை குன்றிவருவதாக உணர்ந்தார். ஆத்தும இரட்சணிய ஆவல் பன்மடங்கு அவரிடம் அதிகரித்தது; நகரவாசிகளாயிருப்பினும், கிராமவாசிகளாயிருப்பினும் தாரதம்மியம்பாராது யாவரையும் ஒரே சீராக நேசிப்பதாக வாக்களித்தார். தம்மை முழுவதும் நமது ஆண்டவர் கரத்தில் விட்டுவிடத் தீர்மானித்தார், ஏனெனில் அவ்விதம் செய்தால் மதுரசேசு தாமே, அற்பசொற்பக் காரியங்களிலும் தம்மைக் கண்காணித்து வருவார் என்று கண்டறிந்தார். தியான முடிவில் சேசுவின் திருஇருதயத்திற்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுக்க ஓர் நேர்த்தியான ஜெபம் எழுதினுர். இப்புனித முயற்சி புரிய அவரைத் தூண்டிய காரணங்கள் என்னவென்றும் பின்வருமாறு குறிப்பிட்டார்.

“சகல புண்ணியங்களுக்கும் இருப்பிடமும், ஊற்றும் ஊறணியும் அத்திரு இருதயம்; பரிசுத்தவான்களுக்கு அடைக்கலமும், ஆறுதலும் அத்திரு இருதயம்; அவருக்கு விசேஷ ஆராதனை செய்யவே என்னை முழுவதும் அவருக்கு ஒப்புக்கொடுப்பேன்.

“திரு இருதயத்தினிடம் ஜொலித்து விளங்கும் விசேஷ புண்ணியங்கள் எவையெனில்: பிதாவாகிய சர்வேசுரன்மீது அவர் காண்பித்த உருக்கம் நிறைந்த அன்பு, உன்னத சிரவணம், ஆழ்ந்த தாழ்ச்சி, துன்பவேளையில் அவரிடம் விளங்கிய ஒப்பற்ற பொறுமை, நமது நீசத்தனத்தைக் கண்டு மனமிளகி வருந்தி, நம்மீது அவர் காண்பித்த இணையற்ற சிநேகம்—இவையாவும் விபரிக்க எவரால் முடியும்? அவர் இடுக்கண்ணுற்று வருந்துகையில் அவரது சமநிலை சிறிதும் மாறவில்லை.

“இத்திரு இருதயம் மனிதர்மீது சொல்லொண்ணு அன்பால் பற்றியெரிகின்றது. நம்மெல்லோருக்கும் தமது விலையேறப்பெற்ற வரப்பிரசாதங்களை ஏராளமாய்ப் பொழிய எவ்வளவு ஆவல்! நமது கஷ்ட சஞ்சலங்களில் எவ்வளவு இரக்கம்! தம்மை முழுவதும் நமக்குச் சொந்தப் பொருளாகவும், தவருத அடைக்கலமாகவும், ஆதாரவாகவும் பேரின்ப மோட்சமாகவும் கையளிக்கிருர்.

“இத்தனை நன்மைகளுக்கெல்லாம் அவர் நம்மிடமிருந்து அடையும் பிரதி உபகாரம் என்ன? கல்லினும் கடின இருதயம்! அவசங்கை! அசட்டைத்தனம்! நிந்தை அவமானம்! நன்றியின்மை! சிநேகத்திற்குப் பதில் சிநேகமில்லை! அவர் அன்பை உணர்வாரில்லை!

அவர் தந்தருளும் நன்கொடைகளைக் கையேந்தி வாங்கு பவர் எவ்வளவு சொற்பம்! அவரது ஆசை மொழி நமது மனதில் கேட்டாலும் அதற்குச் செவிசாய்ப்பதுமில்லை.”

சேசுவின் திரு இருதயத்திற்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுக்கச் சங். தெலா கொலம்பியர் சுவாமியார் வரைந்த ஜெபம் :

“ஓ! மிகவும் ஆராதனைக்குறிய நேச சேசுவின் திரு இருதயமே! தேவரீருக்கு மனிதர் செய்துவரும் சகல தோஷ துரோகங்களுக்கும் நன்றிகெட்ட தனத்திற்கும் பரிகாரமாகவும், என்னாலானமட்டும் அப்பேர்க்கொத்த நிர்ப்பாக்கியத்திற்கு நான் ஆளாகாதிருக்கவும், என்னுடைய இருதயத்தை முழுவதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இனி மேல் உமது திரு இருதயத்திற்குள் நான் வாசம் செய்ய இடறலாயிருப்பவைகளை அகற்றி, சுய நலத் திற்கு இடம் தராதபடி நடக்க என்னாலான பிர யாசைப்படுவேன் என்று வாக்களிக்கிறேன். உமது திரு இருதயத்தின் நன்மைத்தனத்தை என் மீது பொழிந்தருளும். நானும் அதனுள் உமது உத்தம தாசர்களுள் ஒருவராக ஜீவிக்க விரும்பு வதால், உமது அன்பால் என்னிருதயத்தை ஊடுருவி உமது சிநேக அக்கினியை மூட்டியரு ளும். திவ்விய பலிப்பூசையாலும், ஜெப தபங் களாலும், அறநெறி முறையாலும், ஆத்தும இரட் சணிய அலுவல்களாலும், தாழ்ச்சி, கீழ்ப்படிதல் என்ற பல புண்ணிய முயற்சிகளாலும், நான் சாகும் பரியந்தம் இவை யாவற்றாலும் பெறக்கூடிய சகல

பேறுபலன்களையும், பரிகாரக் கிருத்தியங்களையும், உமது திரு இருதயத்திற்கே ஒப்புக்கொடுக்கிறேன். இவ்வுன்னத திரு இருதயத்தை மென்மேலும் மகிமைப்படுத்த என்னைக் கையளித்து நான் அடையக்கூடிய பேறு பலன்களை உமது இஷ்டம்போல் எவருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். ஆண்டவரது நீதியைத் தணிக்க என்னால் செய்யக்கூடுமான பரிகாரக் கிரிகைகளையெல்லாம் ஏற்கனவே உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களுக்குத் தானம் பண்ணிவிட்டபடியால் ஓ! சேசுவின் திரு இருதயமே, உமது பிரியம்போல் அவைகளை அவர்களுக்கு அளிப்பீராக! இதனால் ஒழுங்குப்படி நான் செய்து ஒப்புக்கொடுக்கவேண்டிய திவ்விய பலிப் பூசைகளுக்கு யாதொரு தடையும் ஏற்படாது. ஏழைகளுக்காகத் தருமப் பூசை செய்யவும், பிறர் சிநேகத்தை முன்னிட்டு எனது சிநேகிதர், சகோதரருக்காகவும் திவ்விய பூசை செய்யவும் இடையூறுயிராது. நான் இவ்விதம் அனுசரிக்கும் புண்ணியங்கள் யாவும் உமது திரு இருதயத்திற்கே சொந்தம். ஏனெனில் உமது சலுகையினாலேயே சகலமும் ஆகும். ஆமென்சேசு."

நேசம் நிறைந்த இச்சுகிர்த செபம் அவர் சேசுவின் திரு இருதயத்திற்குத் தம்மை முற்றிலும் ஒப்படைத்துவிட்டார் என்ற உண்மையை பளிங்குபோல் தெளிவுறக் காண்பிக்கின்றது.

ஒன்பதாம் அதிகாரம்

இங்கிலாந்தில் திரு இருதயப்பக்தி

"இருதயப் பூரிப்பால் வாய் பேசுகிறது."
(அர்ச். லூக். 6: 45)

பெருமழை பெய்தால் குளம் குட்டைகள் நிரம்பும்; சுற்றுமுள்ள வயல்கள் செழிப்புறும்; கொழுத்த வெள்ளாண்மை விளையும் என்று விவசாயிகள் பெரிதும் அக்களிப்படைவர். தண்ணீர் தாராளமாய்க் கிடைப்பதே இதற்கோர் முக்கிய காரணம். நிரம்பி வழிந்தோடும் குளங்களே அதிக பயன்தரும். இவ்வுதாரணத்தில் ஆழ்ந்ததோர் கருத்து மறைந்து கிடக்கின்றது. எவனொருவனிடம் புண்ணியங்கள் ஸ்திரப்பட்டுத் தேவ சிநேகம் பற்றியெரிகிறதோ அவன் பிறருக்கு மட்டற்ற நன்மைகள் புரிய வல்லவனாவான். இதே உண்மையைத்தான் நமது ஆண்டவர் "இருதயப் பூரிப்பால் வாய் பேசுகிறது" (அர்ச். லூக். 6 : 45) என்று கூறியிருக்கிறார்.

சங். தெலா கொலம்பியர் இருதயத்தில் சுவாலை விட்டெரிந்த பக்தியைக் குறித்து விபரித்த பின்னர், அச்சுவாலை நாலாபக்கமும் தாவியது என்பதைப்பற்றிச் சிறிது எடுத்துரைப்போம். "நீ எனது பிரிய தாசனான சங். குளோத் தெலா கொலம்பியரிடம் இப்பக்தியை நிலைநாட்ட அவரால் ஆனதெல்லாம் செய்து, எனக்கு ஆறுதல் வரு

விக்கச் சொல். இதனுல் இக்கட்டு இடைஞ்சல்கள் எவ்வளவுதான் ஏற்படினும் கலங்கவேண்டாம். ஆனுல் தனது சொந்தப் பலத்தை அற்பமென்று கருதி என்மீது முழு நம்பிக்கை வைப்பவன் வெகு பலசாலியாவான் என்பதையும் மறவாதிருப்பாயாக!" என்று திரு இருதயம் அர்ச். மர்கரீத் மரியம்மாளுக்குச் சொன்னது அவர் செவியில் சதா ஒலித்துகொண்டிருந்தது. ஆகையால் தெலா கொலம்பியர் சுவாமியார் தாம் மகா பலவீனரென்றும் கிறீஸ்துநாதரே தனது சர்வ ஆதாரம் என்றும் தீர உணர்ந்து எவ்வகைக் கஷ்டங்களுக்கும் சலியாது உழைத்தார். பிரிவினையால் இங்கிலாந்தில் ஏற்பட்ட பிடிவாதத்தைப் பொருட்படுத்தவில்லை; வேத துவேஷத்தால் கத்தோலிக்கருக்குச் செய்த உபத்திரவங்களுக்கும் அஞ்சவில்லை. இவ்வாறு சேசுவின் திரு இருதயத்தை யாவரும் அறிந்து சிநேகிக்கத் தம்மாலானதெல்லாம் செய்யத் துணிந்தார்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதற்கொப்ப அவர் பிரயாசை நல்ல பயன் தந்தது. இவ்வுன்னத பக்தியை வெகு விரைவில் ஊக்கமுடன் அனுசரித்து வந்த யார்க் கோமகனின் மனைவி, திரு இருதயத் திருநாள் ஒன்று திருச்சபையில் புதிதாக ஏற்படுத்திக் கொண்டாட வேண்டும் என்று வெகு பேராவலுடன் பரிசுத்த பாப்புவுக்கு முதன் முதல் விண்ணப்பம் செய்தனள். ஆனுல் இங்கிலாந்து தேசத்தார் மாமூல் அநுசரணையில் வெகு வைராக்கியமுள்ளவர்களாயிருந்ததால் புதிதாக எதையும் எளிதில் ஏற்றுக்கொள்ளார். அதிலும் சத்திய மறையைப் பாதுகாக்க அவர்கள் அடைந்த துன்பம், வருத்தம், வறு

மை, சிறை வாசகம், சித்திரவதை எவ்வளவு! எத்தனையோ புண்ணிய புருஷரும் பூவையரும் உயிரை முதலாய்த் தியாகம் பண்ணினர்! பெரும் புசல் கிளம்புமுன் கார்மேகம் திரண்டு வருவதுபோல், புதியதோர் வேதகலாபனை ஆரம்பமாகும் என்ற சில அடையாளங்களும் தோன்றின. இந் நெருக்கிடையில் அவர்களுக்கு நூதனமாகத் தோன்றிய திரு இருதயப்பக்தியை ஏற்றுக்கொள்ளச் சிறிது பின் வாங்கினர். ஆனால் திரு இருதயத்தாசரின் விடாத போதனை கடைசியில் பலனளித்தது. எவ்வாறெனில் சன்னஞ் சன்னமாக அவர்கள் தங்களது தப்பறையான அபிப்பிராயங்களை விட்டொழிக்கவே இப்புனித பக்தியால் தாங்கள் திரளான நன்மை வரங்களை அடையக்கூடுமென நன் கறிந்தனர்.

நமது நேச ஆண்டவர் தமது திரு இருதயத்திற்குத் தோத்திரமாக ஓர் திருநாள் கொண்டாடவேண்டும் என்று தமது ஆவலைத் தெரிவித்திருந்தது நமக்கு ஞாபகமிருக்கும். அவ்விருப்பத்தை நிறைவேற்ற இயலாமல் மனம் வருந்துகிறார் நமது உத்தம குரு. ஏனெனில் கத்தோலிக் கோவில்களையெல்லாம் பதிதர் பறிமுதல் செய்தனர்; திவ்விய நற்கருணையில் சிநேகபலியாய் வீற்றிருக்கும் திவ்விய சேசுவையும் ஆலயங்களிலிருந்து அகற்றினர். கத்தோலிக்கரின் செல்வாக்குக் குன்றிப்போக எவ்வகையான திருநாளும் அற்ப ஆடம்பரத்துடன் முதலாய்க் கொண்டாட அவர்களால் கூடவில்லை. பகிரங்கமாய்த் தன்னால் ஒன்றும் செய்யச் சாத்தியப்படாதிருப்பினும் தனித்தனியே தன்னிடம் வருபவரிடம் சேசுவின் ஆசை ஆவல்களை சங். குளோத் சுவாமியார் தெரிவிப்பார். பாவசங்கீர்த்தனம்

கொடுக்கும் சமயங்களிலும், பிரசங்கங்கள் செய்யும்போதும் நமது ஆண்டவரின் விருப்பங்களை மனதுருக எடுத்துரைப்பார். 1675-ம் வருஷம் தபசுகாலப் பிரசங்கங்கள் நிகழ்த்தினபோது, "சேசுநாதர் அனுபவித்தத் துக்க துயரம் அகோர வேதனைகளுக்கு அளவில்லை" என்பதைப் பற்றி உருக்கமாய்ப் பிரசங்கித்தார். அதின் சாராம்சம் பின்வருமாறு:

"சேசுவே உமது பாடுகள் அளவுக்கு மிஞ்சியது என்று நான் வியப்புற்றால், நீர் மறுமொழியாக, 'ஆம், பிதாவின் கோபத்தைத் தணிக்க நான் அத்தனை தூரம் பாடுபட அவசியமில்லை. என்னை உபத்திரவப்படுத்தியவர்களை ஒரு நொடிப்பொழுதில் சிதரடித்திருப்பேன். எனது ஒப்பற்ற உபாதைகள் சகல பாவாக்கிரமங்களையும் மன்னிக்கவும், நரக அகோர நெருப்பையுங்கூட அணைக்கவும் போதுமானவை. ஆனால் கற்பாறையினும் கடினமான உங்களுடைய இருதயத்தை உருகப்பண்ணப் போதுமானதல்ல. நன்றியறிதல் கடுகளவும் உங்களிடம் காண்பதரிது' என்று கூறுவீர்; சேசுவின் நேசத்திற்கு அபாத்திரவான்களாகிய நம்மையும் அணைகடந்த விதமாய்ச் சிநேகிக்கிறார்" என்று மனங்கசிந்துருகப் பிரசங்கித்தார்.

மற்றோர் வேளை இன்னும் அதிகத் தெளிவாய்த் திரு இருதயப் பக்தியைப்பற்றி விபரித்தார். "சேசுவின் திரு இருதயத்திற்குள் நுழைந்து அவர் தமது சத்துராதிகளின் மட்டில் நடந்துகொண்ட வகையைச் சிறிதளவு ஆராய்வோம். அஞ்ஞிஷ்டூரர் அவரை எவ்வளவோ துயரப்படுத்திய போதிலும் அவர்களை மன்னிக்கவே காரணங்கள் தேடுகிறார். அவர்களது அறியாமையும் ஆவேசமும் அக்

திரு இருதயத் தாசரின் அயரா உழைப்பினுல் அநேகர் திரு இருதயப் பக்தராயினர்.

கிரமத்தின் கனகனத்தைக் குறைத்தது என்றாற்போலவும், அவர்களுடைய பொறாமை, பெருமை, அகந்தை, அநீதி, துவேஷம், ஆக சகலத்தையும் தாம் மறந்தவர்போலவும் தமது பரமபிதாவை நோக்கிப்,

"பிதாவே இவர்களை மன்னித்தருளும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள்"
(லூக். 23: 34)

என்று தமது கொலைஞர்களுக்காக மன்றாடினார். தமது அகோர வேதனைகளையும், நிந்தை அவமானங்களையும் பொருட் படுத்தாதவர்போல் தோன்றினார்; ஆனால் அந் நீசர் கபோதிகள்போல நடப்பதையும், தங்களுக்குத் தானே அவகேடு விளைவிக்கிறதையும் கண்டு துயறுற்றார் ...அவர்களை இன்னும் அதிகமாவே சிநேகிக்கிறார்....

"திரு இருதயநாதர் நமது சிறந்த போதகர், இந்த தபசு கால நாட்களில் அத்திரு இருதயத்திற்குள் ஜீவிப் போமாக, அவரை மென்மேலும் அறிந்து நமது நடத்தை யைச் சீர்படுத்துவோமாக! ஆம்! மதுர சேசுவே உமது இருதயமே எங்களுடைய மேலான வாசஸ்தலம். எங்க ளது சஞ்சலத்திற்கு ஏற்ற அவுழ்தம் நீரே! உமது சிநேக அக்கினிப்பொரிகளால் எங்கள் குற்றங் குறைகளைச் சுட்டெரியும். உமது நேச பாதுகாவலிலிருந்தால் எங்க ளுக்கு அபாயம் என்றும் விளையாது. தேவ சித்தத் திற்கு அமைந்து நடக்கவும், நன்னெறியில் ஒழுகவும் திடனும் அத்திரு இருதயத்தினின்றே பெற்றுக்கொள்ள வேண்டும். நீரே எங்களுடைய சிறந்த மத்தியஸ்தர்; உமது சத்துராதிகளுக்காக மன்றாடினது போல இப் போது எங்களுக்காகவும் உமது பரம பிதாவிடம் பரிந்து

பேசும். நீர் அனுப்பும் சிலுவைகளை நாங்கள் அன்புடன் ஏற்றுக்கொள்வோம். எங்களைப் பகைப்பவர்களை உம்மைக் குறித்து நேசிப்போம்" என்று கேட்போர் உள்ளம் இளக இனிமையாகப் பிரசங்கித்தார். இவ்வமிர்த பிரசங்கத்தின் பலனுய் அவர்கள் திரு இருதயத்தை ஆராதிக்கவும், சிநேகிக்கவும் அவருக்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகார முயற்சிகள் செய்யவும் ஆவலுடன் முன்வந்தனர்.

பெரிய வெள்ளிக்கிழமையும் சங். தெலா கொலம்பியர் சுவாமியார் திரு இருதயத்தின் உள்ளுணர்ச்சிகளை உருக்கமுடன் எடுத்துரைத்தார். "நேசம்நிறைந்த நமது திவ்விய மீட்பர் தமது தேகத்தில் அநுபவித்த உபாதைகளைவிட மனதில் அநுபவித்த சஞ்சலமே அவருக்கு சொல்லொண்ணு வேதனையை விளைவித்தது. உச்சி முதல் உள்ளங்கால் வரை அவர் கொடிய துயரம் அடைந்தபோதிலும், ஓர் வகையில் துயரமுற்றத் திரு இருதயத்திற்கு அது ஆறுதல் அளித்தது என்கலாம். ஏனெனில் தேவ மகிமையைப் பங்கப்படுத்திய பாவாக்கிரமங்களுக்கு அது சிறந்த பரிகாரமாயிற்று. திவ்விய சேசுவின் புனித சரீரம் நொறுக்கப்படப் பாவம் பொறுக்கப்பட்டது; பரமபிதாவின் உக்கிர கோபம் தணிய அசுத்தவுலகம் பரிசுத்தமுற்றது. இவ்வாறு மானிட சந்ததி தான் இழந்த உன்னத பதவியை மீண்டும் பெற்று, இனிமேல் ஆண்டவருக்கு ஏற்ற பணி செய்யக்கூடியதாயிற்று.

"சத்துராதிகளின் அநியாயமும், யூதர்களின் நன்றியின்மையும், அப்போஸ்தலர்களின் பிரமாணிக்கமின்மையும், தமது கீர்த்திக்குப் பங்கம் வருவித்ததும், துஷ்டர்

தேவதூஷணங் கட்டிக்கொண்டதும், ஆக இவையாவும் மலைபோல் எழும்பி அவர் மனதை உபாதிக்க, அவற்றைத் தாள யியலாதவர்போல,

"என் சர்வேசுரா, என் சர்வேசுரா நீர் என்னைக் கைநெகிழ்ந்ததேது" (மத். 27 : 46)

என்று அபயமிட்டார். இவை யாவற்றையும்விட ஆயிர மடங்கு அவர் துயரத்தை அதிகரித்தது என்னவென்றால், இத்தனை பாடுகள் எல்லாம் பட்டபின்னரும் அநேக நிர்ப் பாக்கிய பாவிகள் பலனடையாது நித்திய நரகக் குழியில் விழுவார்களே என்பதுதான். 'ஓ மனிதனே சற்று நின்று, அடிகளால் நொறுக்கப்பட்டு, ஆணிகளால் தொளைக்கப்பட்ட என் மேனியை உற்றுநோக்கு! என் னிருதயத்திற்குள் நுழைந்து என் துயரத்திற்கு ஒப்பான துயரம் எங்கேயாகிலும் உண்டோ என்று பார்!' என்று கூறுகின்றார் நமது மதுரசேசு. ஆண்டவரே உமது மனோ வேதனைகளை எவரால் அளவிடக்கூடும்? அதைத் துயரம் நிறைந்த சாகரம் என்கலாமோ? இதை யுணர்ந்த நமது மனம் அனலில் விழுந்த மெழுகுபோல் உருகி இளகுகிறது அல்லவா? மட்டற்ற விதமாய் நம்மை நேசித்த திரு இருதயத்திற்குப் பிரதி அன்பு காண்பிப்பவர் எவ்வளவு சொற்பப்பேர்! ஓ! யார்தான் உமக்கு ஆறுதல் வருவிப்பர்? உம்மிடமிருந்து பசாசு அபகரிக்க முயலும் ஆத்துமங் களை நாங்கள் கைதூக்கி இரட்சித்து உம்மை சந்தோஷிப் போம்......" என்று கல்லும் கரைந்திடும்படி பிரசங்கித் துச் சேசுவின் திரு இருதயத்தின் மீது பத்திப்பற்றுதலை யாவரிடமும் அதிகமதிகமாய் மூட்டிவிட்டார்.

திரு இருதயத்தாசரின் அயரா உழைப்பு பயன் பெற்று விளங்கிற்று. வேதகலாபனை காலத்தில் ஆங்கிலேயர் திக்கற்றுக் கலங்குகையில் திரு இருதயநாதர் பேரிலுள்ள பக்தியால் அவர்கள் தங்கள் விசுவாசத்தைக் கண்ணின் கருவிழிபோல் பாதுகாத்தனர். அர்ச். பிரான்சிஸ்குச் சபைக் குருவானவர் ஒருவர் சங். தெலா கொலம்பியரையணுகி, "சுவாமி, நீர் திரு இருதய இரகசியங்களை அறிந்தவர் என்று எங்களுக்குத் தெரியுமானதால், நானும் அத்திரு இருதயத்தினிடமிருந்து எனக்குத் தேவையான ஞானமும் வீரமும் பெறுவதின் பொருட்டு உம்மையண்டி வந்தேன்" என்று விநயமாய் மொழிந்தார். "எனது நேசரே, நீர் உமக்கு அவசரமான தைரியமும் ஆறுதலும் அடைய சகல நன்மைகளுக்கும் ஊற்றும் ஊறணியுமான சேசுவின் திரு இருதயத்தைத் தேடினது சரியே. ஆனால் ஒன்றைமட்டும் மறந்திடவேண்டாம். நமது நேச ஆண்டவரின் திரு இருதய இரகசியங்களை அறிய விரும்புவீராயின், அவர் பூங்காவனத்தில் பானம் பண்ணின கசப்பான பாத்திரத்தையும் சிறிதளவு உருசி பார்ப்பது உமது கடமையாகும்" என்று நமது சற்குரு போதனை செய்தார். இவ்வாறு ஒருவர் இருவரல்ல அவரை அணுகி வந்தவர், ஒருவர் இருவரல்ல திரு இருதயப் பக்தியை அவரிடமிருந்து கற்றவர்; எண்ணிறந்த பேர் திரு இருதயப் பக்தர்களாயினர். சேசுவின் திரு இருதயநாதர் அவருக்கு இட்ட கட்டளையை ஒரு கணமென்கிலும் மறவாது தம்மால் இயன்றளவு திரு இருதயப்பக்தியை ஓர் பதித நாட்டிலும் போதித்துவந்தார்.



1678-ம் வருஷம் நவம்பர் மாதம் நடுநிசியில் சுவாமி அவர்களை
அவர் அறையிலேயே கைதியாக்கினர் அப்பரம துஷ்டர்.



மூன்று வாரமளவும் சிறைக்கூடத்தில் சொல்லொண்ணுத்
துயரம் அனுபவித்தார்.

பத்தாம் அதிகாரம்

சிறைவாசமும் தேசப்பிரஷ்டமும்

"நமது நாமத்தினிமித்தம் அவன் எம்மாத்திரம் பாடுபட வேண்டுமென்று நாம் அவனுக்குக் காண்பிப்போம்."
(அப். நட. 9 : 16)

"ஓர் கத்தோலிக் குருவானவரைப் பிடித்துக் கொடுப்பவனுக்கு இருபது பவுன் இனம். அவர் சேசு சபைக் குருவாயிருந்தால் அதைவிட ஐந்துமடங்கு அதிகமான சன்மானம் அளிக்கப்படும்" என்று இங்கிலாந்தில் எங்கும் விளம்பரமாயிற்று. பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்குமாம்! அதிலும் 100 பவுன் கிடைப்பதாயிருந்தால் பணப்பேய் பிடித்தவனுக்கு எவ்விதமிருக்கும்?

டெப்புக்கே என்றதோர் வஞ்சகன் தெலா கொலம்பியரிடம் பரம யோக்கியன்போல் பாசாங்கு பண்ணி அவரை ஏமாற்றிச் சிறிதுகாலம் அவரது சம்ரட்சணையில் யாதொரு குறைவின்றி வாழ்ந்துவந்தான். ஏதோ ஓர் நாள் சுவாமியார் அவர்கள் அவன் செய்த ஓர் குற்றத்திற்காக அவனைக் கண்டித்துப் பேசி, பிறகு அவனைத் தன்னிடம் வைத்திருக்கமுடியாதென்று கூறியதால் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. உண்ட சோற்றுக்கு இரண்டகம்பண்ணும் பாதகனான அவன் தனது வேஷத்தைக் களைந்து, "உம்மைப் பழிவாங்காமல் விடேன்" என்று

சபதம் கூறி வெளியேறினுன். அந்நாள் தொடங்கி தன்னுடைய துர் எண்ணத்தை நிறைவேற்றத் தகுந்த தருணம் பார்த்துக்கொண்டிருந்தான்.

டைட்டஸ் ஓட்ஸ் என்பவனைப்பற்றி நாம் ஆங்கிலேய சரித்திரத்தில் வாசித்திருக்கிறேம். பஞ்சமாபாதகங்களுக்கு அஞ்சாத இத்துரோகி கத்தோலிக்கருக்கு விரோதமாய்ப்பெரும்பெரும் கட்டுக்கதைகளைக்கட்டி அவர்கள் யாவரும் தேசதுரோகிகள் என்று அவர்கள் மீது குற்றம் சாட்டினுன். மோசக்காரர்களுள் முகான்மையானவர்கள் சேசுசபைக் குருக்களே என்றும் முறையிட்டான். இதுவே சங். குளோத் சுவாமியாரைப் பழிவாங்க எற்ற தருணம் என்று அகமகிழ்ந்தான் படுபாவி டெப்புக்கே. ஆகையால் நமது சற்குருவின்பேரில் பின்வருமாறு குற்றம் சாட்டினுன் :

1. சங். குளோத் தெலா கொலம்பியர் பிறரோடு பேசுகையில் நமது அரசன் உண்மையாகக் கத்தோலிக்கர் என்று பல தடவைகளில் கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.
2. சட்ட சபை எப்போதும் ஏகாதிபத்தியம் செலுத்த முடியாது என்று சொல்லுகிருர்.
3. கொல்மென் என்ற சந்தேகப் பேர்வழியுடன் அவருக்கு நெருங்கிய பழக்கம் உண்டு.
4. துறவற அந்தஸ்தைக் கைநெகிழவிட்டவர்களை மீண்டும் மடங்களுக்கு அனுப்பிவைக்கிருர்.
5. லண்டன்மாநகரில் இரகசியமாக ஓர் கன்னியர் மடம் ஏற்படுத்தியிருக்கிருர்.

6. அயல் நாடுகளுக்கு மிஷனரிமார்களை அனுப்பிவருகிறார்.

7. தேவதிரவிய அனுமானங்களைப் பகிரங்கமாய்க் கொடுத்துவருகிறார்.

8. என்னையும் ஓர் கத்தோலிக்கனாக்க முயன்றார்.

9. தேவ ஊழியத்திற்குத் தயார் செய்ய அநேக வாலிபர்களை அயல்நாடுகளுக்கு அனுப்பிவருகிறார்.

இவையாவும் அவரை இராஜ துரோகியாக எண்பிக்கின்றது என்று பித்துக்கொண்டவன்போல் பிதற்றினான்.

ஜான்சனிஸ்ட் சபைப் பதிதனான அந்துவான் ஆர்னல்ட் நமது சற்குருவுக்குச் சார்பாய்ப் பேச யாதொரு முகாந்தரமும் இல்லையென்கிலும் அவ்விதம் அவர் பேசுவது சங். தெலா கொலம்பியர் சுவாமியாரின் மாசற்றதனத்தைப் பன்மடங்கு வலியுறுத்துகின்றது. அவர் வார்த்தைகள் பின்வருமாறு :

"இங்கிலாந்து தேசத்தில் நிகழ்ந்த காரியம் நாகரீகமற்ற கோரச்செயல். சங். தெலா கொலம்பியர் சுவாமியாரின்பேரில் சாட்டப்பட்ட குற்றங்களில் சதிமோசத்தின் நிழல் முதலாய்த் தோன்றவில்லை. அவர் ஓர் சேசுசபைக் குருவானவர், இராஜ குடும்பப் பாதுகாவலிலிருந்தவர், அரசனின் சகோதரனுடைய பாரியாளுக்கு ஆத்தும குருவாக அமைந்தவர், தவறிப்போன துறவிகளை மீளவும் சற்குணசீலர்களாக ஆக்கினவர்—இவையாவும் சதிமோசமாம்! சில கன்னியர்களுக்கு மறைவில் ஞான உதவி புரிந்துவந்தார், ஆகா என்ன பெரிய பாதகம் அது! அவர் இங்கி

லாந்திலிருந்து அயல் நாடுகளுக்கு வேதபோதகர்களை அனுப்பிவந்தார்—அதுவும் இராஜ துரோகமாம்! இவ்வாறு குற்றஞ்சாட்டுவதைவிட மதியீனம் எங்கும் கேட்டதுண்டோ? இராஜகுல சீமாட்டியின் ஆத்தும குருவை அவளுடைய மாளிகையிற்றானே கைதிசெய்வது அவளுக்கல்லவா மிகுந்த அவமரியாதை? உண்மைக்காரணம் என்னவென்றால் கத்தோலிக்கு வேதத்தின்மட்டில் அவர்களிடமிருந்த துவேஷமே."

ஆகையால் மோசக்காரனைப் பிடித்துவிட்டோம், இராஜ துரோகியைக் கைதி செய்துவிட்டோம் என்று அவர்கள் வெளியில் சொல்லிக்கொண்டபோதிலும் வாஸ்தவமாய் இத்தீச்செயலுக்குக் காரணம் பணவாசையே. ஒரு சேசுசபைக் குருவானவரைக் காட்டிக் கொடுத்தால் தனக்கு 100 பவுன் லபிக்கும் என்ற பொருளாசையால் டெப்புக்கே என்ற பாதகன் இத்துரோகம் செய்யத் துணிந்தான் என்க.

ஆகவே 1678-ம் வருஷம் நவம்பர் மாதம் நடுச்சாமத்தில் நமது சுவாமி அவர்களை அவர் வசித்துவந்த அறையிலேயே கைதிசெய்தனர் அப்பாம துஷ்டர். நான்கு நாட்களுக்குப்பின் அவரை நீதி மன்றத்திற்குக் கூட்டிக் கொண்டு வந்தனர். குற்ற விசாரணை நடந்தது; பற்பல கேள்விகள் கேட்டனர்; யாவற்றிற்கும் தகுந்த விடை அமைதியுடன் அளித்தார் சாந்தமுள்ள குருவானவர். அதிலிருந்தே அவர் நிரபராதி என்று யாவருக்கும் தெளிவாயிற்று. ஆனல் பொய்ச்சாட்சிகளின் நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் மறுபடியும் உத்தம தாசரைச் சிறையில் அடைத்தனர். மூன்று வாரமளவாய்ச் சிறைக்கூடத்தில்

சொல்லொண்ணுத் துயரம் அனுபவித்தார். அக்காலத்தில் கைதிகளை வெகு கொடூரமாய் நடத்திவந்ததே இதற்கு முக்கிய காரணம். அவர்களுக்குப் போதிய ஆகாரம் அளிப்பதில்லை; அவர்கள் படுத்துறங்குவது புழுக்கள் நிறைந்த வைக்கோல் படுக்கையே! எங்கும் துர்நாற்றம். இத்தனை வாதைகளைத் தாங்கமுடியாமல் அநேக கைதிகள் நோயுற்று உயிர்துறந்திருக்கின்றனர். இதிலிருந்து திரு இருதயத் தாசர் சிறைச்சாலையில் அனுபவித்த உபாதை வருத்தங்களை நாம் சிறிதளவு ஊகித்துக்கொள்ளலாம்.

மேலும் அவருக்கு க்ஷயரோகம் என்ற கொடிய வியாதி சற்று முன்புதான் ஆரம்பித்திருந்தது. இது இப்போது பன்மடங்கு அதிகப்பட்டு அவரை வெகுவாய் உபத்திரவப்படுத்திற்று. அம்மூன்று வாரங்களிலும் மூன்று வருஷங்களுக்கு ஒப்பான துயரம் அனுபவித்தார் என்றாலும் மிகையாகாது.

> "நமது நாமத்தினிமித்தம் அவன் எம்மாத்திரம் பாடுபட வேண்டுமென்று நாம் அவனுக்குக் காண்பிப்போம்"
> (அப். நட. 9 : 16.)

என்று திவ்விய சேசு அர்ச். சின்னப்பரைக் குறித்து மொழிந்தது திரு இருதயத் தாசருக்கும் உரித்ததாகும் என்க. இத்தனை வேதனைகள் அனுபவித்தபோதிலும் அவர் மன அமைதியும் பூரண சந்தோஷமும் உள்ளவராய் விளங்கினார். அவருடைய வார்த்தைகளே இதற்குச் சிறந்த சான்று: "நான் கடும் புசல் மத்தியில் தேவ ஆறுதலால் பூரிப்படைந்தேன். இரக்கம் பொங்கும் திரு இருதயநாதர் என்மீது அந்நாட்களில் விசேஷ தயை காண்பித்தருளினார்" என்பதே. அவர் மெய்யாகவே தனக்கு

வேதசாட்சி வெற்றிமுடி கிடைக்கப்போகிறது என்று வெகு ஆவலுடன் காத்திருந்தார். ஆனால் தேவ சித்தம் அதுவன்று. யார்க் கோமகனின் பாரியாள் பரிந்து பேசினதின் பயனால் அவரை மரண தண்டனைக்குட்படுத்தாமல் தேசப்பிரஷ்டம் என்ற தண்டனையை அவருக்கு விதித்தனர்.

அதன் பின்னர் அவருக்குப் பத்துநாள் கெடு கொடுக்கப்பட்டது. அவ்வேளை சேசுவின் பிரிய சிஷனைக் கண்டு பிரியாவிடை பெற்றுப்போக அநேகர் வந்து கூடினர். ஞானத்தந்தை நாட்டைவிட்டு விரட்டப்பட்டாரே என்று கலங்கினர் பலர். எங்கள் தயாள போஷகர் எங்களை விட்டுப்போகிறாரே என்று ஏங்கி அழுதனர் அநேகர். எங்களுக்கு ஊன்றுகோலும் உற்சாகமுமாயிருந்த நல்ல ஆயன் எங்களைவிட்டுப் பிரிய நேர்ந்ததே என்று வருந்தினர் பல துறவிகள். நமது சுவாமி அவர்களும் அவர்கள் யாவருடைய கஷ்ட நிலைமையைக் கண்டு பெரிதும் வருந்தினார் என்பதற்குச் சந்தேகமில்லை. பிரான்ஸ் தேசத்திற்குச் சென்றபின் அவர் எழுதினதாவது: "ஆண்டவரே, நான் திரும்பவும் இங்கிலாந்திற்குப் போய் உழைக்கவேண்டும் என்பது உமது விருப்பமாயிருப்பின் உடனே அதின்படி நடப்பேன். எனது சிரேஷ்டர்கள் அங்கே மறுபடியும் நான் செல்லவேண்டும் என்று எனக்குக் கட்டளையிட்டால் அட்டியின்றி அங்கு சென்று அயரா உழைத்து எனது உயிரையும் பலியாக்கத் தயாராயிருக்கிறேன். ஓ! நேச தேவனே, உமது பிரிய பிரஜைகளான அந்நாட்டார் மீது கிருபையாயிரும். அவர்கள் யாவரையும், உமது மந்தைக்குக் கொண்டுவந்து சேர்ப்பீராக! அவர்களுக்குள் உம்மை

உருக்கமுடன் சிநேகிக்கும் வீரியம் நிறைந்த தயாள குண சீலர்கள் அநேகர் இருக்கின்றனர்."

தெலா கொலம்பியர் உண்மையாகவே பலவிதத்தி லும் தமது திவ்விய குருவுக்கு ஒத்தவராய்த் துலங்கினர். திவ்விய சேசுவை அவருடைய சீஷர்களுள் ஒருவனான யூதாஸ் 30 வெள்ளிக் காசுக்கு ஆசைப்பட்டுத் துஷ்ட யூதர்களுக்குக் காட்டிக்கொடுத்தான்; தெலா கொலம்பி யரையும் அவருடைய சகாயங்களைப் பெற்றுவந்தவனே 100 பவுனுக்கு ஆசைப்பட்டு வேத விரோதிகள் கையில் அவரை ஒப்படைத்தான். நமது நேச இரட்சகர் இராச துரோகி என்றும், கலகக்காரன் என்றும் அவர்மீது அபாண்டமாய்க் குற்றங்கள் சாட்டினர்; அதுபோல சங். குளோத் சுவாமியார் மீதும் பொய்க் குற்றங்கள் சுமத்தி னர். சேசுநாதர் குற்றவாளி என்று நிரூபிக்கக் கள்ளச் சாட்சிகள் கொண்டுவந்தனர்; அவ்வாறே நமது சற்குரு வுக்கு எதிராகப் பொய்ச் சாட்சிகளைக் கொண்டுவந்தனர். பிலாத்தென்பவன் பலமுறை உலக மீட்பரான நமது பரி சுத்த ஆண்டவர் மாசற்றவர் என்று பகிரங்கமாய் அறிவித் தபின்னரும் யூதர்களின் கர்ஜிப்பையும் தொந்தரவையும் தாளாமல் அவர்களிஷ்டம்போல் மாசற்றவரைச் சிலுவை யில் அறைந்து கொல்லும்படி கையளித்துவிட்டான். இங்கி லீஷ் நியாயாதிபதியும் சங். தெலா கொலம்பியர் குற்ற மற்றவர் என்று முற்றிலும் அறிந்திருந்தும் ஜனங்களின் இஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கப் போதிய தைரியமில் லாதவராய் அவரைச் சிறையிலடைக்கவும் கடைசியில் தேசப்பிரஷ்டம் செய்யவும் சம்மதித்தான்.

சமமானவர்களைச் சிநேகபான்மை இணைக்கும், அல்லது நேசபாசமே சமமாக்கும் என்ற ஆன்ரோரின் வாக்கின் உண்மையைச் சங். தெலா கொலம்பியரின் சரிதை உணர்த்துகின்றது. திவ்விய சேசுவின் உத்தம தாசர், தாம் அனுபவித்தத் துன்ப துயரங்களாலும் இன்னும் அனுபவிக்கயிருக்கும் கஷ்ட சஞ்சலங்களாலும் தமது பரலோக அன்பருக்கு மிகவும் ஒத்தவரானார்.

பதினேராம் அதிகாரம்

அந்தியகாலம்—பாக்கியமான மரணம்

"என் பிதாவினுல் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! வாருங்கள். உலகமுண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்." (மத். 25 : 34)

நல்ல தேகாரோக்கியத்துடன் இங்கிலாந்திற்குச் சென்ற தெலா கொலம்பியர் இப்போது நோயால் மிகவும் தளர்ந்து மெலிந்து, சிறைவாசத்தால் அதிக துன்பமடைந்து தமது ஜென்ம தேசமாகிய பிரான்சுக்குத் திரும்பி வந்தார். அவர் பாரலேமோனியாவுக்கு வந்தபோது அவரிருந்த சீர்கேடான நிலேயினுல் அவருக்கு அறிமுகமானவர்கள்கூட அவரை எளிதில் கண்டுபிடிக்கக்கூடவில்லே. அந்நகரவாசிகள் தங்கள் ஞானத்தந்தை மீண்டும் தங்கள் மத்தியில் தோன்றினதைக் கண்டு மனமகிழ்ந்தனர். மற்ற யாவரையும்விட அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்கே அவருடைய வருகை அதிக ஆறுதலேயளித்தது. ஏனெனில் மறுபடியும் சிலர் அவளே நம்பாமல் அவள் கூறியதெல்லாம் கனவோ நினேவோ என்று கலங்கி நின்றனர். ஆகையால் திரு இருதயத்தாசர் முன்னிலும் அதிகத் தெளிவாயும் உறுதியாயும் அவள் விஷயத்தில் யாதொரு சந்தேகமும் வேண்டாம் என்று பகர்ந்தார். அவள் கண்ட

காட்சிகள் யாவும் உண்மையாகவே தேவாநுக்கிரகத்தால் நடைபெற்றனவென்று வலியுறுத்திச் சொன்னார்.

பாரலேமோனியாவில் சில நாட்கள் இளைப்பாறிய பின்னர் மீளவும் தமது பிரயாணத்தைத் தொடங்கினார். கடைசியாக 1679 வருஷம் மார்ச்சு மாதம் லயன்ஸ் பட்டணத்தையடைந்தார். அங்கு வந்ததும் அவருடைய காசநோய் அதிகரித்து அவரை அபாய நிலைக்குள்ளாக்கிற்று. ஆனால் நல்ல ஔஷதங்கள் கொடுக்கவே ஆபத்து நீங்கியது. பின்பு கூடுமானவரையில் பிறருக்கு ஞான உதவி புரிய ஆவலுற்றாராதலின், இவ்வுத்தம விரத்தர் பாலிய குருத்துவ மாணவர்களுக்கு அதிக நன்மை செய்யவல்லவர் என்று சிரேஷ்டர் சுவாமியார் துணிந்து அவரை அவர்களுக்கு ஆத்தும குருவாக நியமித்தார். இதுவே நல்ல சந்தர்ப்பம் என்று எண்ணி அவர்கள் இளமனதில் திரு இருதயப் பக்தியை மூட்டிவிட்டார் திரு இருதயத்தாசர். இவ்விதம் அவரிடமிருந்து இவ்வுன்னத பக்தியைக் கற்றுக் கொண்டவர்களுள் முக்கியமானவர் பேர்போன சங். காலிபே (Gallifet) சுவாமியார். இவரே பிற்காலத்தில் திரு இருதயப் பக்தியைப்பற்றிச் சிறந்ததோர் நூல் எழுதினார். இப்பக்தி திருச்சபையின் அங்கீகாரம் பெறுவதின் பொருட்டு வெகு ஆவலுடன் உழைத்தவர் இவரே.

லயன்ஸ் பட்டணத்திலுள்ள குரு மடத்திலிருந்து கொண்டு நமது சுவாமி அவர்கள் அநேகருக்குக் கடிதங்கள் மூலமாய் வெகு நன்மை புரிந்தார். அவரால் அதிக வேலை செய்யக்கூடாதபோதிலும் அவர் புரிந்த ஞான அலுவல்கள் யாவும் நமது ஆண்டவருக்குப் பிரியமாயிருந்தன என்பது அர்ச். மார்கரீத் மரியம்மாளின் வார்த்தைகளி

லிருந்து தெளிவாகும். "நான் நமது சுவாமி அவர்களுக் காக சேசுவின் திரு இருதயத்தைப் பார்த்து மன்றுடுகை யில் நமது ஆண்டவர் என்னைப் பார்த்து, ஊழியன் தனது எஜமானனிலும் பெரியவனல்ல. அவர் தனது திவ்விய குருவுக்கு ஒத்தவராய் விளங்குவதைவிட அவருக்கு அதிக நன்மை பயக்கக்கூடியது வேறெதுவுமில்லை என்றூர். மனி தர் அபிப்பிராயப்படி அவர் நல்ல சௌக்கியமுள்ளவரா யிருந்தால் அயராதுழைத்துச் சர்வேசுரனுக்குப் பன் மடங்கு அதிக நன்மை வருவிக்கக்கூடும் என்று எண்ண லாம், ஆனுல் உண்மையாக அவருடைய வியாதி வருத்தத் தால் பெரிதும் சர்வேசுரனைத் தோத்தரிக்கிறூர். ஏனெ னில் ஒவ்வொரு காரியத்திற்கும் தகுந்த நேரம் உண்டு ; துன்பதுயரம் அனுபவிப்பது ஓர்வேளை, வேலை செய்வது மற்றோர் வேளை ; விதை விதைப்பதற்கு ஓர் வேளை, தண் ணீர் ஊற்றிப் பயிரிடுவதற்கு மற்றோர் வேளை. தற்சமயம் அவர் செய்வது ஆண்டவருக்கு மிகவும் பிரியமானது. அவர் படும் வேதனைகளைத் திவ்விய சேசுவின் பாடு களோடுகூட ஒன்றித்து ஒப்புக்கொடுப்பதால் அவைகள் பன்மடங்கு சிறப்புற்று விளங்குகின்றன. ஆகையால் அவர் பல இடங்களில் தெளித்த நல்வித்து பயன்பெற்றுச் செழிப்புறும், அவரிடம் தேவசிநேகமும் வளரும் என் பதே."

அவருடைய கொடிய வியாதி அவரை வெகுவாய்த் துன்புறுத்திய போதிலும் அவர் பொறுமைக் கணிகல மாய்த் துலங்கினுர். தமது நோயால் விளைந்த சகல துயரங்களையும் ஆத்துமங்கள் இரட்சணியமடைய பேரன் புடன் ஒப்புக்கொடுத்தார். அதனுல் அவரிடம் பொங்கிய

ஆத்தும இரட்சணிய தாகம் சிறிது தணிந்தது என்கலாம். அவருடைய வியாதியைக் குணப்படுத்த சிரேஷ்டர் சுவாமி யார் என்னென்ன சிகிச்சைகள் செய்யக்கூடுமோ அத்தனை யும் குறைவின்றி செய்தார். அவரது சொந்த ஊரான சான்சிம்போரியம் என்ற இடத்திற்கு அனுப்பினால் நலமா யிருக்கும் என்று வைத்தியர்கள் ஆலோசனைகூற, அதின் படி அவருடைய சகோதரன் ஹம்பர்ட் தனது வீட்டிற்கு. அவரைக் கொண்டு போயினர். அங்கே வாஞ்சையுள்ள உத்தம சகோதரன் என்னென்ன செய்ய இயலுமோ அதுவெல்லாம் வெகு கரிசனையாய்ச் செய்தார். பல வீனத்தை நீக்கக்கூடிய மேலான ஆகாரம், நோயாளியைத் தக்கவிதமாய்க் கவனிக்க பற்பல ஊழியர்கள், யாவும் குறைவின்றி சித்தம்பண்ணப்பட்டன. தபோதனரான நமது சற்குருவுக்கு அவையாவும் ஒறுத்தலாகவே இருந் தன. கீழ்ப்படிதலை முன்னிட்டுமட்டும் அவைகளை ஏற்றுக் கொண்டார். எவ்வளவுதான் பிரயாசைப்பட்டும், விலை யுயர்ந்த மருந்துகள் அருந்தியும் அவருக்குக் குணம் வந்த பாடில்லை. அவர்தாமே தம்முடைய ஸ்திதியைப்பற்றிப் பிறருக்கு எழுதிய கடிதங்களில் தெரிவித்திருக்கிறார்: "தொந்தரவு நிறைந்த இருமல் நின்றபாடில்லை. நெஞ் சடைப்பும், இரத்தம் கக்குவதும் என்னை வெகுவாய் வருத்துகிறது. சில சமயங்களில் பேசக்கூடக் கஷ்டமா யிருக்கிறது. பலபல மருந்துகள் சாப்பிட்டும் பயன்பெற வில்லை."

கடைசியாக வைத்தியர்கள் அவரைப் பாரலேமோனி யாவுக்கு அனுப்புவது உசிதம் என்று முடிவு கூறினர். அங்கே அவருக்குவேண்டிய நல்ல காற்றும் சுத்த ஆகா

யமுமுண்டு. இச்சுப செய்தியைக் கேட்டதும் திரு இருதயத்தாசர் அடைந்த அக்களிப்புக்கு அளவில்லை. மினவுதல் சபை மடத்திற்குச் சென்று திரு இருதய ஆண்டவர் காட்சிதந்த பீடத்தில் திவ்விய பலிப்பூசை நிறைவேற்றிய போதும் மிகவும் ஆறுதல் அடைந்தார். தன்னை முழுவதும் சேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்துத் தனது தகனப்பலியைப் புதிப்பித்துக்கொண்டார்.

அவர் ஞான ஜீவியம் இப்போது எவ்வளவு உயரிய நிலையை அடைந்திருந்தது என்பதை அவர் வார்த்தைகளே எண்பிக்கும்: "எங்கும் கொழுத்த வெள்ளாண்மை தோன்றுகிறது. அதைக் கண்ணுறும்போது எனது கேவல ஸ்திதியை நினைத்து மனமுடைகிறேன். தேவ சித்தம் நான் மௌனம் சாதிப்பதாம். நானும் அவ்வாறு நடக்க என்னாலானமட்டும் பிரயாசைப்படுவேன். சிலுவை நிறைந்த நாட்டிற்கு (இங்கிலாந்து தேசத்திற்கு) மறுபடியும் ஆண்டவர் என்னைப் போகும்படி கட்டளையிட்டால் உடனே புறப்பட்டுச் செல்வேன். ஆனால் திவ்விய சேசு அதைவிட கசப்பான பாத்திரத்தைப் பானம்பண்ணக் கற்பிக்கிறார்; அதாவது அவரது திருச்சித்தத்திற்கு முற்றிலும் அமைந்து, ஒன்றும் செய்யாமல் சும்மாயிருப்பதாம். அவர் சித்தமே எனது பாக்கியம் என்று அகமகிழ்வேன். நான் சாவுக்கும் தயாராயிருக்கிறேன். ஆத்தும இரட்சணிய ஆவலைத் தணிக்க எனது உயிரையும் பலியாக்கப் போகிறேன். ஆத்துமங்களுக்கு நன்மைபுரிய என்னிடம் எழும்பும் அடங்கா ஆவலைப் பூர்த்திசெய்ய வழியின்றி தயங்குவதை அவருக்கே பரித்தியாகமாக ஒப்புக்கொடுக்கிறேன். இனி எனது ஜீவியம் அமைதியானதாகவே

இருக்கும். பலவீனமும் வியாதியும் என்னைவிட்டு அக லாது ; ஒன்றுக்கும் உதவாதவனும், மற்றவருக்குப் பாரமு மானேன்.

"எனது நோயிலிருந்து ஓர் முக்கிய படிப்பினைக் கற்றுக்கொண்டேன். நாம் நமது கண்ணுக்குத் தோன் ருத மெல்லிய நூல் இழைகளால் கட்டுண்ட சுயபோகிகளா யிருக்கிரும். நமது நேச ஆண்டவர் மட்டும் அவைகளை அறுத்தெரியாதிருந்தால் நாம் அவைகளைக் கண்டுகொள் வதுகூட அரிது. தேவசுதனே நம்மை முற்றிலும் பரி சுத்தமாக்கக்கூடும். அவர் இஷ்டப்படி நம்மைப் புண்ணிய சாங்கோபாங்கத்திற்கு நடத்திச் செல்ல நம்மை முற்றிலும் அவர் கையில் ஒப்படைத்து விடுவது எளிதல்ல. நம்மால் ஆகக்கூடியது வெகு சொற்பம், நமது பலவீனமோ அள விடக் கூடியதல்ல.

பாரலேமோனியாவுக்கு வந்து ஐந்து மாதமாயும் அவர் ஆரோக்கியம் அடையாததால் அவரை வேறு இடத் திற்குக் கொண்டுபோக வைத்தியர்கள் தீர்மானித்தனர். இவ்விஷயம் அர்ச். மார்கரீத்மரியம்மாளுக்குத் தெரிய வந் ததும் ஓர் கடிதத்தில்: "கீழ்ப்படிதலுக்கு விரோதமா யிராவிட்டால் தாங்கள் பாரலேமோனியாவை விட்டுப் போகாதிருப்பது நலம்" என்று எழுதிச் சுவாமி அவர் களுக்கு அனுப்பினுள். அவர் அதைப் பார்வையிட்ட பின்னர், அவள் சொல்வதற்குக் காரணம் என்னவென்று வினுவியபோது, "நமது ஆண்டவர் இந்த ஊரிலேயே உம் முடைய ஜீவியத்தின் பலியை ஏற்றுக்கொள்ள மனதா யிருக்கிருர்" என்று பதில் அனுப்பினுள். இதிலிருந்து அவருடைய அந்தியகாலம் நெருங்கியிருக்கிறதென்றும்



அவருடைய க்ஷயரோகம் அவரை வெகுவாய்க் கஷ்டத்திற்
குள்ளாக்கியபோதிலும் அவர் பொறுமைக்
கணிகலமாய்த் துலங்கினர்.



மரண நித்திரை.

திரு இருதயத்தரிசனைகள் நடைபெற்றப் புண்ணியஸ்தலத்திலேயே தம்முடைய உயிரைத் திரு இருதயநாதருக்குப் பலிதானம் செய்யவேண்டும் என்பதும் தெளிவாயின. ஆகையால் அவர் அந்நகரைவிட்டுப் போவதில்லையென்று உடனே தீர்மானித்துக்கொண்டார். எண்ணியிருந்த பயணமும் நிறுத்தப்பட்டது.

சில தினங்கள் சென்றபின்னர் அவருடைய கொடிய வியாதி அதிகப்பட்டு இரத்தம் இரத்தமாய்க் கக்கினதினால் மரணம் அடுத்திருக்கிறதென்று யாவரும் அறிந்தனர். ஒருவாரம் வரையில் சொல்லொண்ணா வேதனைகளை வெகு பொறுமையுடன் அனுபவித்தார். கடைசிவரை அவர் மலர்ந்த முகத்துடன் தோன்றினார். தமக்கு உதவி புரிந்தவர்க்கெல்லாம் புன்னகையுடன் நன்றி கூறினார். யாவர் மட்டிலும் வெகு தாழ்மையுடனும், வணக்கத்துடனும் நடந்து கொண்டார். தம்மை முழுவதும் சேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்த திருஸ்தலத்திலேயே தமது ஜீவியத்தின் தகனப்பலி முடிவடைகிறது என்று எண்ணி அகமகிழ்ந்தார். கடைசி தேவதிரவிய அனுமானங்களைச் சரிவர மிகவும் பக்தியுருக்கத்துடன் பெற்றுக்கொண்டார். தமது பாடுபட்ட சுரூபத்தை இருகப் பிடித்து இரக்கம் நிறைந்த இரட்சகரை நேசபாசத்துடன் உற்றுநோக்கிய வண்ணமாய்க் காணப்பட்டார். அவர் படுக்கையைச் சூழநின்றவர்களை நோக்கி தான் செய்த குற்றம் குறைகளுக்காக மன்னிப்புக் கேட்டார். அவர் இருதயம் தேவ நேசத்தால் பற்றியெரிந்தது என்பது அவருடைய பிரகாசம் பொருந்திய கண்களில் தெளிவாய்த் தோன்றியது. கடைசியாக 1682-ம் வருஷம் பெப்ருவரி

மாதம் 15-ம் தேதி அவருடைய பரிசுத்த ஆத்துமம் பரமன் பதம் சேர்ந்தது. என்ன பாக்கியமான மரணம்! தமது ஜீவியகாலமெல்லாம் திரு இருதயத்தைப் போற்றிப் புகழ்ந்து, சகலருக்கும் திரு இருதய அன்பை அறிவித்து அவருக்குகந்த தாசனாய் விளங்கினார். இப்போது திவ்விய சேசு தாமே அவரை நடுத்தீர்க்க வருகிறார். தமது நேச சீஷனை நோக்கி,

> "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவரே! வாரும். உலகமுண்டானது முதல் உமக்காக ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்"
>
> (மத். 25 : 34)

என்று வெகு பேரன்புடன் நித்திய சம்பாவனைக்கு அவரையழைக்கிறார். அர்ச். மார்கரீத் மரியம்மாள் கூறியது அவர்பால் முற்றிலும் நிறைவேறியது: "நமக்கு நீதிபரனாயிருப்பவரான திரு இருதயநாதருக்கு ஜீவிய காலமெல்லாம் பிரமாணிக்கமுள்ள ஊழியனாய் உழைத்து உயிர் துறப்பது எவ்வளவோ மனவாறுதல்! எவ்வளவோ பேரானந்தம்!"

சங். தெலா கொலம்தயர் சுவாமியார் மரிக்கும்போது அவருக்கு வயது நாற்பத்திரண்டு. துறவற அந்தஸ்தில் செலவழித்தது இருபத்திரண்டே! இவ்வளவு சொற்பக் காலத்தில் அவர் மாபெரும் அர்ச்சியசிஷ்டவரானார்.

> "நீதிமான் கொஞ்சக்காலம் ஜீவித்தும் நெடுஞ்சீவியத்தின் வேலைகளை நிறைவேற்றினார். ஏனென்றால் அவர் ஆத்துமம் சர்வேசுரனுக்குப் பிரியமாயிருந்தது. ஆகையினால் அக்கிரமங்களின் நடுவினின்று (தேவன்) அவரை எடுத்துக்கொள்ளத் தீவிரித்தார்."
>
> (ஞான. 4 : 13-14)

அவர் மோட்ச பேரின்ப பாக்கியத்தை அடைந்து நித்தியத்திற்கும் நேச சேசுவோடு ஒன்றித்து இன்புற்றிருக்கிருர் என்று அர்ச். மர்கரீத் மரியம்மாளுக்குச் சர்வேசுரன் அறிவிக்கச் சித்தமானுர். "அவருக்காக வருந்தியழ வேண்டாம். அவரைப் பார்த்து நாம் மன்றுடுவோமாக! ஏனெனில் முன்னேயைவிட இப்போதே பன்மடங்கு அதிகமாய் நமக்கு வேண்டிய உதவி புரியக்கூடியவரா யிருக்கிருர்" என்றுரைத்தனள்.

அவருடைய பரிசுத்த சரீரத்தைத் தரிசிக்க ஜனத்திரள் வந்தசிராகவேயிருந்தது. விசுவாசிகள் செபமாலே, சுரூபம், கைக்குட்டை முதலியவைகளேக்கொண்டு அர்ச்சியசிஷ்டவரின் சரீரத்தின் மீது பூச்சிதமாய் வைத்தெடுத்து அவைகளே அர்ச்சியசிஷ்ட பண்டங்களாகப் பாவித்தனர். பிரகாசமும் அழகு சோபனமும் பொலிவுற்று விளங்கிய அவரது வதனத்தை இமைகொட்டாமல் பார்த்து நின்றனர். "ஆ இதுவோர் பேரின்பக்காட்சி" என்று பரமானந்தத்தில் அமிழ்ந்தினர் போல் தோன்றினர். மறுதினம் தக்க ஆரவாரத்துடன் அவரை நல்லடக்கம் செய்தனர். கூட்டம் அதிகரிக்கவே அதை அடக்குவதும் அசாத்தியமாய்த் தோன்றிற்று. மறைந்து வாழ்ந்து வந்த திரு இருதய அப்போஸ்தலரை நமது ஆண்டவர் இவ்வாறு மகிமைப் படுத்தச் சித்தமானுர்.

பன்னிரண்டாம் அதிகாரம்

திரு இருதய அப்போஸ்தலரின் மகிமைப்பிரதாபம்

"மனிதர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை மனுமகனும் சர்வேசுரனுடைய தூதர் முன்பாக அறிக்கை பண்ணுவார்." (லூக். 12 : 8)

திரு இருதய அப்போஸ்தலர் திவ்விய சேசு தமக்கு அளித்த உன்னத அலுவலை இனிது முடித்தாராகையால் நமது நேச ஆண்டவர் அவரை மேலான மகிமைப் பிர தாபத்திற்கு உயர்த்தியருளச் சித்தமானார். சங். குளோத் தெலா கொலம்பியர் சுவாமியார் எவ்வளவுதூரம் அயராது அர்ச். மர்கரீத் மரியம்மாளோடுகூட திரு இருதயப் பக்தியை நிலைநாட்ட உழைத்தார் என்பது அவர் புனித சரிதையிலிருந்து நன்கு புலனாகிறது. அநேகருக்கு அவர் போதனை சற்று நூதனமாகத் தோன்றியதால் அவர் ஆரம்பத்தில் வெகு யூகமாயும் நிதானமாயும் இச்சுகிர்த பக்தியைப் பிறருக்குக் கற்றுக்கொடுத்தார். ஆனால் "ஊக்கமது கைவிடேல்" என்பதைச் சிரமேற்கொண்ட நமது சற்குண சம்பன்னர் தமது விடாமுயற்சியால் தாம் கோரிய கருமத்தைச் சிறப்புடன் முடித்தார்.

திரு இருதயப் பக்தியை விசேஷமாய்க் கடிதங்கள் மூலமாய் அநேக கன்னியர்களுக்குப் போதித்தார். உதா ரணமாக கன்னியாஸ்திரியான அவருடைய சகோதரிக்கு அவர் வரைந்ததாவது : "திவ்வியநற்கருணைத் திருநாளின்



திரு இருதய அப்போஸ்தலரின்
மகிமைப் பிரதாபம்.

எட்டாம் நாளுக்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமை யன்று * திவ்விய நன்மை வாங்கி திவ்வியநற்கருணையில் சிநேகபலியாய் வீற்றிருக்கும் நமது அன்புள்ள ஆண்ட வருக்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரி காரமாக ஒப்புக்கொடுங்கள். இச்சுகிர்த வழக்கத்தை உங் கள் மடத்திலுள்ள ஏனைய சகோதரிகளுக்கும் கற்றுக் கொடுங்கள்." இவ்வாறே பற்பல கன்னியர் மடங்களுக்கும் கடிதம் எழுதித் திரு இருதயநாதருக்கு எவ்விதம் விசேஷ ஆராதனைகள் செய்யவேண்டும் என்று கற்பித்து வந்தார். கடிதங்களில், "திரு இருதயத்தாசனுன தெலா கொலம் பியர்" என்று கையொப்பமிடுவதும் அவருடைய வழக் கம். சேசுவின் திரு இருதயத்திற்குத் தங்களை முழு வதும் ஒப்புக்கொடுக்கும் மேலான முயற்சியையும் அநேக ருக்குக் கற்றுக்கொடுத்தார். அவருடைய மரணத் திற்குப் பின்னரே அவர் எழுதி வைத்திருந்த சிற்சில பக்திமுயற்சிகள் வெளியாயின.

இவ்வளவு திடாரிக்கத்துடன் உழைத்த உத்தம தாசரை நமது ஆண்டவர் மகிமைப்படுத்தியது ஆச்சரிய மாகாது. அவர் அடைந்த பரலோக சோதிமயத்தைத் திவ்விய சேசு அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்கு ஓர் அருமை யான காட்சியினுல் தெளிவுற அறிவித்தருளினுர்.

1688-ம் வருஷம் ஜுலை மாதம் 2-ம் தேதி, அர்ச். கன்னிமரியம்மாள் எலிசபெத்தம்மாளை மினவின திருநாள் அன்று அர்ச்சியசிஷ்டவள் பரவசமாகி உன்னதமானவை களைக் கண்ணுற்ருள். சங். தெலா கொலம்பியர் மரணமான

---

* இப்போது நாம் சேசுவின் திரு இருதயத் திருநாள் கொண் டாடும் தினம்.

ஆறு வருஷங்களுக்குப் பின்னர் நிகழ்ந்த இச்சம்பவத்தைப் பற்றி அவளே பின்வருமாறு விபரித்திருக்கின்றனள் :

"நான் பரிசுத்த பரமநற்கருணைமுன் உருக்கமுடன் ஜெபித்துக்கொண்டிருக்கையில் திடீரென்று அழகு சௌந்தரியம் பொலிவுற்று விளங்கிய விஸ்தாரமான ஓர் உயர்ந்த ஸ்தலத்தைத் தரிசித்தேன். அதின் மத்தியில் வெகு மகிமைப் பிரதாபத்துடன் திவ்விய சேசு ஜோதி மயமான சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். அவர் தமது திரு இருதயத்தைத் திறந்து காண்பித்தார். அதிலிருந்து அக்கினிச் சுடர் ஒளி எங்கும் தகதகவென்று பிரகாசித்தது. வலது பக்கத்தில் அவருடைய பரிசுத்த தாயாரும், இடது பக்கம் அர்ச். பிரான்சிஸ்கு சலேசியாரும், உத்தம குருவானவரான சங். தெலா கொலம்பியரும் வெகு கம்பீரத்தோற்றமுடன் காணப்பட்டனர். பரிசுத்த கன்னிமரியம்மாள் நேச பாசத்துடன் திரு இருதயப் பொக்கிஷங்களைத் திறந்து காண்பித்து மடத்திலுள்ள சகல கன்னியரும் அவைகளால் பயன்பெறவேண்டும் என்று கற்பித்தார்கள். பின்னர் சங். தெலா கொலம்பியர் சுவாமி அவர்களைச் சுட்டிக்காட்டி, 'இவர் திரு இருதய நாதருக்கு உற்ற தாசர். எனது நேச குமாரன் அவரையும் மற்ற சேசு சபைக் குருக்களையும் திரு இருதயப் பக்தியைப் பிரபலப் படுத்தும்படி தெரிந்துகொண்டார். அவர்கள் வெகு வணக்கத்துடனும் நன்றியறிதலுடனும் இவ்வுன்னத அலுவலை ஏற்று நடத்தக் கடமைப்பட்டவர்கள். எவ்வளவுக்குத் திரு இருதயப் பக்தியை அதிகமதிகமாய்ப் பகிரங்கப் படுத்துகின்றனரோ அவ்வளவுக்கு அவர்களின் ஞான அலுவல்கள் பெரிதும் பயனளிக்கும். எதிர்பார்ப்பதற்கு

அதிகமாகவே திரு இருதயம் அவர்கள் செய்யும் வேலைகளை அபரிமிதமாய் ஆசீர்வதித்தருள்வார்' என்று தேவதாய் அன்பாய் மொழிந்தனள்."

சர்வேசுரன் சில புண்ணியவான்களை இவ்வுலகிலும் மகிமைப்படுத்துவதுண்டு. அவர்களுடைய சலுகையை அநேகர் அண்டிப்போகும்படி செய்யப் பற்பல அற்புதங்கள் அவர்களைக்கொண்டு நமது ஆண்டவர் செய்திடுவார். அவ்வாறே திரு இருதய அப்போஸ்தலரின் மகிமைப்பிரதாபம் நாற்றிசையும் பிரகாசிக்க அவரைக்கொண்டு அநேக புதுமைகள் செய்தருளினார். அவைகளுள் முக்கியமானவைகளைமட்டும் இங்கு எடுத்துரைப்போம். அவருக்கு முத்திப்பேறுபட்டம் கொடுக்க ஏற்பாடுகள் நடந்தபோது மூன்று முதல்தரமான புதுமைகள் ஆழ்ந்த கவனத்துடன் வெகு நுட்பமாய் ஆராய்ச்சி செய்யப்பட்டன. அவை பின்வருமாறு :—

முதற் புதுமை.

பிரான்சு தேசத்தில் எட்மண்டு ரேமி என்ற 28 வயது வாலிபன் ஒருவன் ஓர்வகைத் தீராத ஈரல் உரோகத்தால் பீடிக்கப்பட்டு 1888-ம் வருஷம் வெகு கஷ்டப்பட்டு வருந்தினான். அதிக பலவீனனாகி, பசியின்மை, வயிற்றோட்டம், கொடிய வேதனை முதலிய கடின தொந்தரவுகளுக்கு உட்பட்டவனானான். ஈரல் பருமனாகி விலாப்பக்கம் புடைத்துத் தோன்றியது. பலவிதமான மருந்துகள் அருந்தியும் ஒரு வகைப் பயனும் பெறவில்லை. கடைசியாக வைத்தியர்கள் யாவரும் அவனைக் கைநெகிழ்ந்தனர். இனி அவன் சாக வேண்டியவன்தான் என்றும் முடிவு கூறிவிட்டனர்.

வியாதியஸ்தனின் தாயார் ஓர் பக்தியுள்ள உத்தமி. அவளுடைய சகோதரன் ஒருவனின் ஆலோசனைப்படி வண. தெலா கொலம்பியர் சுவாமியாரை நோக்கி அவ் வருஷம் அக்டோபர் மாதம் 19-ம் தேதி பக்தி விசுவாசத் துடன் ஓர் நவநாள் ஆரம்பித்தாள். வண. தெலா கொலம்பியரின் சரீரத்தைத் தொட்ட ஓர் பட்டு வஸ்தி ரத்தை வியாதியஸ்தனின் கழுத்தில் அணிந்துகொள்ளும் படி செய்தாள். அவனும் அவர்களோடுகூட நவநாள் செய்துவந்தான். முதல் நாளன்றே அவனுக்குச் சிறிது குணம் தோன்றியது. மறுநாள் படுக்கையைவிட்டெழுந்து வெளியே நடமாடினான். பிறகு குதிரைச் சவாரி செய்யத் தொடங்கினான். முன்போல் நல்ல பசியுடன் நன்றாய் உணவு அருந்தினான். வாரமுடிவில் குடும்பத்தார் யாவ ருடனும் கூடி உல்லாசமாய் மேசையில் உட்கார்ந்து சாப் பிட்டான். அப்போது அவனைக் கைவிட்ட வைத்தியர் கள் வந்து பார்த்து அடைந்த ஆச்சரியத்திற்கு அளவே யில்லை. ஏனெனில் அவன் உயிர் பிழைத்திருப்பது பத்து நாளே என்று சொல்லிப்போயிருந்தனர். மெய்யாகவே எட்மண்டு ரேமி முற்றிலும் ஆரோக்கியமடைந்தான் என்று பேர்போன வைத்தியரும் ஓர் அத்தாட்சிப் பத்தி ரம் எழுதிக்கொடுத்தார்: "எட்மண்டு ரேமிக்கு இருந்த ஈரல் வியாதி முற்றிலும் குணமானது. மரண ஆபத்தி லிருந்த வியாதியஸ்தன் இப்போது தாஷ்டிகப் புருஷனா னான். இது மனிதன் முயற்சியால் ஆனதன்று. இது வண. தெலா கொலம்பியர் சலுகையால் நடந்த ஒப்பற்ற அற்புதம். இதற்கு மாறுபாடாய் எவரேனும் கூறுவதை நான் கேட்டதில்லை" என்று குறித்துக் கொடுத்தார்.

இரண்டாம் புதுமை.

மேரி லூயிஸா பிரியோ என்ற மாதின் தீரா வியாதி குணமடைந்த வரலாறு. இவளும் பிரான்சு தேசத்தினள். இவளுக்குப் பதினெட்டு வயதாகும்போது தேகம் மெலிவுறத் தொடங்கியது. ஆரம்பத்தில் அதற்குக் காரணம் பலவீனம் என்று கருதி அதற்கு வேண்டிய சிகிச்சைகள் செய்தனர். பிறகு வைத்தியர் அவளைப் பரிசோதித்து நுரை ஈரலில் ஏதோ தொந்தரவு இருக்கிறதென்று அதைக் குணப்படுத்த மருந்துகள் கொடுத்து வந்தார். அதனால் குணம் ஏற்படுவதற்குப் பதிலாக வியாதி முன்னிலும் அதிகப்பட்டு நடக்கக்கூட சக்தியற்றவளானாள். 1890-ம் வருஷம் மார்ச்சு மாதம் பல வைத்தியர்கள் கலந்து பேசி ஆலோசித்து, அவளுக்கு ஓர் ஆபத்தான வியாதி முதுகெலும்பைத் தாக்கியிருக்கிறது என்று கூறினர். இன்னும் சிலநாட்கள் சென்றபின் அவளுடைய முதுகெலும்பு வளைந்து போய்த் தோளின் பக்கம் ஓர் விதமான வீக்கமும் தோன்றியது. அவள் அனுபவித்த வேதனை எடுத்துரைக்கும் தன்மையன்று. கடைசியாக வைத்தியர்கள் யாவரும் அவளுக்கு முடிவுகாலம் வந்துவிட்டது என்றும் இன்னும் 48-மணி நேரம்தான் அவள் உயிரோடு இருக்கக்கூடும் என்றும் இனிமேல் தங்களால் ஒன்றும் ஆகப்போகிறதில்லையென்றும் முடிவாகக் கூறிவிட்டனர்.

இனிமேல் உலக உதவி கிடைக்காது என்று தயங்கிய அவளுடைய பெற்றோர் பரலோக சலுகையைத் தேடினர். தேவமாதாவை நோக்கி விசேஷ மன்றாட்டுகள் செய்தனர். தற்செயலாய் எட்மண்டு ரேமி என்பவனின் தந்தை வியாதிக்காரியைச் சந்திக்க நேரிட்டது. உடனே அவர் அவ

ளின் பெற்றோரைப் பார்த்து, "வண. தெலா கொலம்பி யரைநோக்கி முழு நம்பிக்கையுடன் வேண்டுதல் செய் யுங்கள். உங்கள் மன்றாட்டு தவறாமல் கிடைக்கும். யாவ ராலும் கைவிடப்பட்ட என்னுடைய நேச மகனின் தீராத வியாதியை அவரே குணப்படுத்தினார். அவனுக்கு வைத் துக் கட்டின அர்ச்சியசிஷ்ட பண்டமும் உங்களுக்குத் தரு கிறேன். மிகவும் விசுவாசத்துடன் நவநாள் தொடங்கு வீர்களாக!" என்றார். ஆனால் அப்பெண்மணியின் பெற் றோர் அவர் சொல்லுக்கு இணங்கவில்லை. ஏனெனில் அவர்கள் அமலநாயகியை நோக்கியே மன்றாடி வருவதாகக் கூறினர். கடைசியாய் மே மாதம் (1890-ம் வருஷம்) வண. தெலா கொலம்பியரின் அர்ச்சியசிஷ்ட பண்டம் கொண்டு வரப்பட்டது; நவநாளும் அவருக்குத் தோத்திர மாக ஆரம்பிக்கப்பட்டது.

நவநாள் தொடங்கியதும் அவளுடைய வியாதி எவ் வளவு தூரம் அதிகப்பட்டது என்றால் யாவரும் அவ ளுக்குச் சாவு அணுகிவிட்டது என்று எண்ணினர். நாளுக்குநாள் வியாதி முற்றிக்கொண்டே வந்தது. ஒன்பதாம் நாள் நோயாளி தன்னைக் கோவிலுக்குக் கொண்டு போகவேண்டும் என்று ஓயாது தொந்தரவு செய்ததினால் பெற்றோர்கள் உடன்பட்டனர். அன்று தேவாலயத்தில் உறுதிப்பூசுதல் அளிக்கும் சடங்கு நடை பெறவிருந்தது. பிணியாளி தனக்குக் கட்டாயம் நல்ல சௌக்கியம் கிடைக்கப்போகிறதென்று வெகு உறுதி யாகக் கூறினள். கோவிலிலிருந்து வீடு திரும்புகையில் தன்னால் நடந்துவரவும் சாத்தியப்படும் என்று அதிக நம்பிக்கையுடன் மொழிந்தனள்.

தேவாலயத்தின் சமீபத்தில் ஓர் கன்னியர் மடம் ஒன்று இருந்தது. உறுதிப்பூசுதல் சடங்குகள் முடிந்த பின்னர் வியாதிக்காரியை அம்மடத்திற்குக் கொண்டு போயினர். ஏனெனில் அங்கு அவள் சகோதரி கன்னியாஸ்திரியாயிருந்தாள். அன்று மத்தியானம் மூன்று மணிக்கு மேற்றிராணி ஆண்டவர் அவளைப் பார்க்கவந்தார். அவரை அவள் கண்டதும் தீடீரென்று, "நான் குணமடைந்தேன்! நான் குணமடைந்தேன்!" என்று கத்திக் கொண்டு துள்ளிக்குதித்து எழுந்து நின்றனள். சூழ நின்றவர் பிரமித்துப்போயினர். பேசமுடியாமல் திகைத்தனர். பின்னர் யாவரும் ஏகோபித்து, "வண. தெலா கொலம்பியரே இப்புதுமை செய்தருளினர்" என்று அக்களிப்புற்றனர். உடனே எல்லோரும் ஒன்றுகூடி நன்றி செலுத்தக் கோவிலுக்குச் சென்றனர். அங்கு முன்பு ஒரு வார்த்தைகூட உச்சரிக்கக் கஷ்டப்பட்டு இப்போது அற்புதமாய் சொஸ்தமடைந்தவள் இன்னிசையோடு தேவ தாயாருக்குத் தோத்திரமாக, "ஆவே மரீஸ் ஸ்டெல்லா" என்ற பாட்டைக் கேட்போர் மனங்கசியப் பாடினள். அவளை வீட்டுக்கு அழைத்துச்செல்ல வண்டி வந்தபோது அவள், "எனக்கு வண்டி தேவையில்லை. நான் பூரண குணம் பெற்றுவிட்டேன். வீட்டிற்கு நடந்தே செல்வேன்" என்று பூரிப்புடன் கூறினள். சிறிதேனும் களைப்பின்றி படிக்கட்டுகள்மேலும் ஏறிச் சென்றனள். நல்ல பசியுடன் யாவரோடும் கூட உட்கார்ந்து உணவு அருந்தினள். மற்றவர்கள் ஆனந்தப் பூரிப்பால் சாப்பிடக் கூடாதிருந்தனர். அவள் தாயார், "என் மகள் ஒரு போதும் இவ்வளவு பூரண சௌக்கியத்துடன் இருந்த

தில்லே. நாள் முழுவதும் அயராமல் வேலே செய்கிருள். தன்னுடைய சொந்த அலுவல்கள் முடிந்ததும், ஏழை களுக்கு வேண்டிய உதவிகள் புரிவதில் நேரம் எல்லாம் செலவழிக்கின்றனள். களேப்பென்பதே இன்னதென்று தெரியாதவள்போல் தோன்றுகிருள்" என்று வாக்கு மூலம் கொடுத்திருக்கிருள். அவளேக் கைநெகிழவிட்ட வைத்தியரும் அவள் பூரண குணமடைந்தது புதுமை யிலும் புதுமையே என்று வெகு உறுதியாய் மொழிந்தார்.

மூன்றும் புதுமை.

டெல்பீனு பிளான்ச்சார்ட் என்ற பெண் அற்புதமாய் ஆரோக்கியம் அடைந்த விதம்.

டெல்பீனு பிளான்ச்சார்டுக்கு வயது 35. அவள் மூன்று வருஷமளவாக (1889—1892) பல பிணிகளால் வாதைப்பட்டு அதனுல் நடமாட முடியாமல் இரவும் பக லும் பாயும் படுக்கையுமாயிருந்தனள். மேலும் அவளுக்கு யானேக்கால் வியாதியும் இருந்தபடியால் தலேயணையை உயர்த்தி அதன்மேல் சாய்ந்துகொண்டுதான் சயனிக்கக் கூடும்; மற்றப்படி சவுகரியமாய்ப் படுத்துறங்க அவளால் கூடவில்லே. பிணியுற்ற காலில் வீக்கம், நீர்வடிவு, ஓயாத வலி எல்லாம் இருந்ததினுல் அவள் பட்ட வாதை கொஞ்ச மல்ல. பிற்பாடு எவ்விதம் வண. தெலா கொலம்பியர் கிருபையால் அவள் அற்புதமாய்க் குணமடைந்தாள் என் பதை அவளே பின்வருமாறு கூறியிருக்கின்றனள் :—

"1892-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நான் ஆரோக்கியமடையும்படி வண. தெலா கொலம்பியருக்குத் தோத்திரமாக ஓர் நவநாள் ஆரம்பித்தேன். நான் பூரண சுகம் பெற்ருல் அதைப்

பகிரங்கப்படுத்துவதாகவும் பொருத்தனை செய்துகொண்டேன். அதற்குப் பின்னர் அவருடைய அர்ச்சியசிஷ்டப் பண்டம் ஒன்று பெறலானேன். ஓர் நல்ல குருவானவர் எனக்காகப் பாரலேமோனியாவில் விசேஷ வேண்டுதல் செய்ய வாக்களித்தார். நவநாள் காலத்தில் என்னுடைய வியாதியின் வேதனை அதிகரித்தது. ஓர் நாள் எனக்கு ஓர் எண்ணம் உதித்தது: 'நான் நவநாளின் எட்டாம் நாளாகிய 16-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை திவ்விய சற்பிரசாதநாதரை உட்கொண்டபின்னர் குணம் அடைவேன்' என்பதே. நமது ஆண்டவர்பேரில் உறுதியான நம்பிக்கையுள்ளவளாயிருந்தேன். குறித்த தினத்தில் எனது அறையைவிட்டு எல்லாரும் சென்றபின்னர் நோயுற்ற எனது காலைத் தொட்டுப்பார்த்தேன். என்ன ஏமாற்றம்! ஒரு குணமும் தோன்றவில்லை. வலியும் வேதனையும் சிறிதளவுகூட குறைந்தபாடில்லை. ஆனால் எனது நம்பிக்கை மட்டும் எள்ளளவும் குறையவில்லை. 16-ம் உ ஞாயிற்றுக்கிழமை இரவு சொல்லொண்ணுத் துயரம் அனுபவித்தேன். மறுநாள் அர்ச். மார்கரீத் மரியம்மாள் திருநாளன்று வலி சிறிது குறைய ஆரம்பித்தது. அன்று அழாமல் பொறுமையாய் வேதனையைச் சகித்துக்கொள்ள என்னால் கூடுமாயிருந்தது.

"20-ம் தேதி வியாழக்கிழமை மறுபடியும் இன்னொரு நவநாள் நான் துவக்கினதுமன்றி மற்றவர்களும் என்னோடு கூடச்சேர்ந்து செய்யும்படி கேட்டுக்கொண்டேன். வண. தெலா கொலம்பியர் கட்டாயம் எனக்கு நல்ல சௌக்கியம் அளிப்பார் என்ற நம்பிக்கையைக் கைவிடவில்லை. 23-ம் தேதியிலும் 24-ம் தேதியிலும் திரும்பவும்

எனது வியாதி அதிகரித்து எனக்குச் சொல்லொண்ணு துயரத்தை உண்டுபண்ணிற்று. அப்போது எனது வலி தாங்க இயலாமல் அலரினேன். ஆனுல் அன்றிரவு (24-ம் தேதி) சீழ்வடிவது நின்றது. மறுதினம் நோவும் வெகு வாய்க் குறைந்தது.

"விடியற்காலம் வைத்தியத் தாதி என்னிடம் வந்து, "உனது காலை அவிழ்த்துப் பார்ப்போம்" என்றபோது, நான், "வேண்டாம்! வலி திரும்பவும் வரக்கூடும், நோவு அதிகரிக்கக்கூடும்" என்று பதிலுரைத்தேன். ஆனுல் அவள் சற்றுப்பின்னர் மெதுவாக நோவில்லாமல் கட்ட விழ்த்தாள். "என்ன! பிணியுற்ற கால் குணமடைந்த தாகத் தோன்றுகிறதே! உருவத்திலும் பருமனிலும் மற்ற காலைப்போல் அல்லவா இருக்கிறது! சீழே இல்லையே! நீர் வடிவதும் நின்றுவிட்டதே!" என்று வியப்புற்றனள். நான் உடனே எழுந்து நின்றேன், முழந்தாளிட்டேன், நடந்தேன், வலியென்பது ஒன்றுமே தோன்றவில்லை. நவநாளின் கடைசி நாளாகிய அக்டோபர் மாதம் 28-ம் உ யாதொரு நோவு இல்லாமல் நடக்க ஆரம்பித்தேன். பிற் பாடு மூன்று தினங்களாக சிறிதேனும் கஷ்டமின்றி திவ்விய பலிப்பூசை காணக் கோவிலுக்கு நடந்து சென் றேன். திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ள முழங்காலி லிருந்தபோது ஒருவிதமான அசௌகரியமும் ஏற்பட வில்லை. நான் முற்றிலும் குணமடைந்தேன் என்று நான் கொண்ட ஆனந்தத்தில் எனக்குச் சில நாட்களாகத் தூக் கங்கூட வரவில்லை."

1901-ம் வருஷம் மே மாதம் அவள் நற்சுகமே வாழ்ந் தாள். ஒன்பது வருஷமாய் முன்னிருந்த நோய் அவளை

அணுகவேயில்லை. அவளை நன்ருய்ப் பரிசோதித்தப் பிரக்யாதிபெற்ற ஓர் வைத்தியர் முடிவாகக் கூறியதாவது: "இவள் பூரண குணமடைந்தது விசேஷ தேவ அருளினுலேயே. இது எவ்வித இயற்கையான காரணத்தினுலும் நடந்திருக்கமுடியாது" என்று ஓர் அத்தாட்சிப் பத்திரம் எழுதிக்கொடுத்தார்.

குறிப்பு:—இவள் சில வருஷங்களுக்கு முன்புதான் மரணமாஞள். ஆனுல் மற்ற இருவரும், எட்மண்டு ரேமியும், மேரி லூயிஸாள் பிரியோவும் இன்னும் நல்ல திடகாத்திரமுள்ளவராயிருக்கின்றனர். மேலும் இவ்விருவரும் 1929-ம் வருஷம் ஜூன் மாதம் வண. தெலா கொலம்பியருக்கு முத்திப்பேறுபெற்றப் பட்டம் உரோமை நகரில் அருளப்பட்டபோது அவ்வுன்னத மகோற்சவத்திற்குப் பிரசன்னமாயிருந்தனர்.

1929-ம் வருஷம் ஜூின் மாதம் 16-ம் உ உரோமை நகர் அர்ச். இராயப்பர் தேவாலயம் என்றுமில்லாத ஆடம்பரச் சிறப்புடன் திகழ்ந்தது. ஏனெனில் அன்றே 11-ம் பத்திநாதர் என்னும் பாப்பரசர் திரு இருதய அப்போஸ்தலருக்கு முத்திப்பேறுபட்டம் கொடுத்து அவரை மகிமைப்படுத்தினர். அத்தருணம் பரிசுத்த பாப்பரசர் முத்திப்பேறுபட்டம் பெற்றவரின் ஒப்பில்லாத புண்ணியப் பெருக்கை வெகு அலங்காரமாயும் விஸ்தாரமாயும் எடுத்துரைத்தார். முதன் முதல் அவரே புதிதாய் முத்திப்பேறுபட்டம் பெற்றவருக்குரிய வணக்கம் செய்து இனி திருச்சபை எங்கும் அவருக்கு அவ்வாறே சங்கை செய்ய வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார். முத். தெலா கொலம்பியர் திரு இருதய அப்போஸ்தலர் என்ற சிறப்பு வாய்ந்த மகுடம் சூட்டப்பட்டார். இவ்வுன்னத மகிமைக்கு உயர்த்தப்பட்ட முத். தெலா கொலம்பியரை

நாமும் வெகு நம்பிக்கை விசுவாசத்துடன் அடிக்கடியண்டிப்போவோமாக! நமது ஆத்துமத்திற்குத் திரளான நன்மை பயக்கக்கூடிய திரு இருதயப் பக்தியை அவரிடம் இருந்து கற்றுக்கொள்வதால் நாம் இரட்சணியமடைய நிச்சயமான வழியைக் கைப்பற்றுவோம். திரு இருதய அப்போஸ்தலருக்குக் கூடிய சீக்கிரம் அர்ச்சியசிஷ்டப் பட்டமும் அளிக்கும்படி திரு இருதயநாதரைப் பார்த்து.. இரந்து மன்றுடுவோமாக!

முற்றிற்று

முத். தேலா கோலம்பியரை நோக்கிச் சேபம்

ஓ! எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரே சுவாமி, தேவரீர் முத். தெலா கொலம்பியரை உமது திரு இருதயத்திற்கு உகந்த உத்தம தாசராகவும், நேச நண்பராகவும் தெரிந்துகொள்ளச் சித்தமானீரே! அவருடைய வல்லபமுள்ள மன்றாட்டினால் நாங்களும் உமது திரு இருதயத்தின் உன்னத புண்ணியங்களைக் கண்டுபாவித்து, அத்திரு இருதயத்திற்குப் பிரியமுள்ள பக்தர்களாகும்படி கிருபைசெய்தருள மன்றாடுகிறோம். மேலும் உமது அதிமிகத் தோத்திரத்திற்காக அவருக்குக் கூடியசீக்கிரம் அர்ச்சியசிஷ்ட பட்டம் கிடைக்கும்படி தேவரீரைப் பிரார்த்திக்கிறோம், பிதாவோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் சதாகாலம் சுயஞ்சீவியராய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவராயிருக்கிற ஆண்டவரே. ஆமென்சேசு.

1 பர., 1 பிரி., 1 தமதிரித். மந்திரம்.

பொருள் அடக்கம்

பக்கம்

முன்னுரை iii

முதல் அதிகாரம்—இளமைப் பருவம் ... 1

இரண்டாம் அதிகாரம்—தேவ அழைப்பு ... 4

மூன்றும் அதிகாரம்—குருத்துவ மாணவர் ... 9

நான்காம் அதிகாரம்—குருப்பட்டம் ... 17

ஐந்தாம் அதிகாரம்—அந்தரங்க ஜீவியம் ... 24

ஆறும் அதிகாரம்—மூன்றும் வருஷ நவசந்நியாசம் 32

ஏழாம் அதிகாரம்—திரு இருதயத் தரிசனம் ... 44

எட்டாம் அதிகாரம்—ஆத்தும இரட்சணிய அலுவல் ... 61

ஒன்பதாம் அதிகாரம்—இங்கிலாந்தில் திரு இருதயப் பக்தி ... 73

பத்தாம் அதிகாரம்—சிறை வாசமும் தேசப் பிரஷ்டமும் ... 81

பதினோராம் அதிகாரம்—அந்திய காலம் பாக்கியமான மரணம் ... 89

பன்னிரண்டாம் அதிகாரம்—மகிமைப்பிரதாபம்... 98

முத். தேலா கோலம்பியரை நோக்கிச் சேபம் ... 111

ஜெப அப்போஸ்தல சபையில்

சேர்த்துக்கொள்ளப்பட்டதின்

அத்தாட்சிப்பத்திரம்

விலை :

100 பத்திரம் ரூ. 1.

ஜெப அப்போஸ்தல சபையாரின்

ஜெபமாலை

தேவ ரகசியச் சீட்டு

30 கொண்ட ஒரு செட்டுக்கு

ஒரு வருஷத்திற்கு

அணா 6.

தபாற்செலவு பிரத்தியேகம்.

கிடைக்குமிடம் :

தே நோபிலி பிரஸ்,

மதுரை.

JUSTUS UT PALMA FLOREBIT.

SICUT CEDRUS LIBANI MULTIPLICABITUR